அறைவு 03 இயம் 32 February 21-27, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

aat @ VBC
0770203201

HELLO MOBILE WORLD



122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

தகவல்களை வழங்க

# மக்களே அணி திரள வேண்டும்!







**ஐ.நா.** மனித உரிமை ஆணையகத்தில் வெளியிடப்படவிருந்த ஈழத் தமிழர் அழிவு தொடர்பான அறிக்கை பின்போடப்பட்டுள்ளதை அடுத்து அந்த அறிக்கை இனி எப்போதும் வெளியிடப்படுவதற்கான வாய்ப்புக்கள் அருகி வருவதாக தமிழ் மக்களிடையே அச்சம் உருவாகியுள்ளது.

இதனையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தந்திரோபாய நகர்வு இவ்விடயத்தில் பின்னடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள தமிழ் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களுள் ஒருவரான ஸ்ரீஞானேஸ்வரன் அடுத்த ஆறு மாதங்களுக்குள் உறுதியான அறிக்கையொன்று வெளியிடப்பட வேண்டுமாயின் மக்கள் அணி திரண்டு அந்த அறிக்கைக்கான புதிய தகவல்களைத் தங்கு தடையின்றி வழங்க வேண்டும் என்பதுடன் அறிக்கை வெளியிடப்பட வேண்டும் எனவும் அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இவ்வாறு மக்கள் அழுத்தத்திற்கு முன்முனைப்பாக யாழ்ப்பாணத்தில் யாழ்.பல்கலைக்கழகச் சமூகம் 17

## மடுவத்தில் கள்ள மாடுகள் அறுப்பு விடயத்தை மறைக்க அதிகாரிகள் முயற்சி

**க**ன்னியாவிலுள்ள தமிழர்களின் கிராமத்தில் களவு போன மாடுகள் திருகோணமலை நகரப் பகுதியில் மாடு அறுக்கும் தொழுவத்தில் அறுக்கப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இவ்விடயத்தை மூடி மறைக்க அரச அலுவலர்கள் முயற்சி செய்திருப்பதுடன் மாடுகளின் உரிமையாளருக்கு பங்களிப்பின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட பலரும் பணத்தைச் செலுத்தி- 17

## ஸ்ரீலங்காவின் புதிய இராணுவத்தளபதி




மேஜர்.ஜெனரல் கிரிஷாந்த சில்வா இராணுவத்தின் 21வது தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

20வது தளபதியாகப் பொறுப்பேற்க வேண்டிய இவரை முன்னைய அரசு பழிவாங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருமலை வளாக வெளிவாரி அலகிற்கு சிங்கள அலுவலர் நியமனம்

**கி**ழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தின் வெளிவாரிக் கல்வி அலகிற்கு சிங்கள இளைஞனொருவன் நியமிக்கப்பட்டிருப்பதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர். 17

# "கோத்தா" முகாம் - 700பேர் தடுப்பில்!



**தி**ருகோணமலை கடற்படை முகாமில் 700 பேர் இரகசியமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், அந்த முகாம் "கோத்தா முகாம்" அழைக்கப் பட்டிருந்ததாகவும் கிடைத்த தகவல்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளது.

அந்தப் படைத்தளத்தில் 35க்கும் மேற்பட்ட குடும்பங்களும் இரகசியமாக ஒன்றுக்கொன்று தொடர்பின்றியும், வெளியுலகத்திற்குத் தெரியாத வகையிலும் தடுத்து வைக்கப் பட்டிருந்ததாகவும் தகவல்கள் உள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 17




சம்பூர் தொடர்பாக ஆராய

## இந்தியக்குழு அடுத்த மாதம் வருகை

சனாதிபதியின் இந்தியப் பயணத்தின் போது சம்பூர் அனல் மின்நிலையப் பணிகள் தொடர்பாக கலந்துரையாடப் பட்டுள்ளதாக நம்பகமாகத் தெரியவந்துள்ளது.

அணுசக்தி தொடர்பான கலந்துரையாடல்களின் போது வலு தொடர்பாகவும் கலந்துரையாடப பட்டுள்து.

இதனையடுத்து அடுத்தமாதமளவில் இலங்கைக்கு இந்தியத் தூதுக் குழுவொன்று வருகை தரவுள்ளதாகத் தெரிவித்துள்ள இலங்கை மின்சாரசபை தவிசாளர் வருகைதரும்




# அம்பாறையில் ஆர்ப்பாட்டம்

**கி**ழக்கு மாகாண சபை உறுப்பினர் இனியபாரதி என்ற கே.புஸ்மகுமாரைக் கைது செய்யக் கோரி ஆர்ப்பாட்ட மொன்று முன்னெடுக்கப் பட்டுள்ளது.

அம்பாறையில் மிகப் பெரும் எடுப்பில் நிகழ்த்தப்பட்டுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தை தமிழத் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு மற்றும் மாகாணசபையின் தற்போதைய உறுப்பினர் கலையரசன் ஆகியோரின் தலைமையில் நிகழ்ந்துள்ளது.

முன்னாள் சனாதிபதியின் இணைப்பாளராக அம்பாறையில் கடமையாற்றிய இனியபாரதியே பல தமிழர்களின் கடத்தல்களுக்கும் காணாமற் போதல்களுக்கும் காரணமானவர் எனத் தெரிவித்தே இவ்வார்ப்பாட்டம் 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# மக்களின் கைகளில் தலைவிதி

தமிழ் மக்களின் தலைவிதியைத் தாமே தீர்மானித்துக்கொள்ளும் நிலைக்கு இன்று அம் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

சுதந்திரத்திற்குப் பின்னரான தமிழ் மக்களின் வாழ்வியலை எடுத்துக் கொண்டால் ஆரம்பத்தில் தமிழர்களின் அரசியல் தலைவர்களின் முடிவுகளின் பின்னால் மக்கள் அணிதிரண்டு வந்தனர்.

எனினும் தமிழ் மக்களின் தலைவர்கள் தமது தரிசனமற்ற நடவடிக்கைகளாலும் தனிப்பட்ட நலன்களை முன் நிறுத்தியதாலும் பிரிவுகளும் சூழ்ச்சிகளும் பெருங்கதையாகத் தொடர்ந்தன. அவற்றின் பால் மக்களும் ஈர்க்கப்பட்டு தரிசனம் எதுவென்று தெரியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

அதனைத் தெளிவாக விளக்கியது தமிழ் அரசியல் தலைவர் ஒருவரின் மரணத்தின் போது அவர் உச்சரித்த வார்த்தைகள். "தமிழர்களை இனிக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்" என்ற வார்த்தைகளை இலங்கைத் தமிழினத்தின் ஒப்பற்ற அரசியல் தலைவரொருவர் தனது மரணப் படுக்கையில் உச்சரித்திருந்தார்.

கடவுள் தொடர்பான விளக்கமின்மையும், பகுத்தறிவின்மையும், பயமும் விரவிக்கிடக்கும் சமூகமொன்றின் தலைவிதியை இலகுவாக அக்கடவுளிடம் கையளித்துச் சென்ற அத்தலைவரின் வாக்கு இன்றுவரை விமர்சனத்திற்குள்ளாகி இருப்பதுடன் அவ்வார்த்தைகள் அத்தலைவரதும், அவர் சார்ந்த அணியினரதும் தொலைநோக்கற்ற செயற்பாட்டை வெளிப்படுத்தியிருந்தமை ஆய்வாளர்களால் உற்று நோக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் கருக்கொண்ட போது அதன் தலைவர்கள் பலவாறாகப் பிரிந்து, தனித்தனியான ஆயுதக் குழுக்களை உருவாகி பின்னர் அவர்களிடையே யுத்தம் நடந்து அழிவுகள் எட்டப்பட்ட போதும், தமிழர்களின் தொலைநோக்குத் தரிசனம் கேள்விக்குறியாகியிருந்தது.

இறுதியில் தமிழர்களின் ஆயதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட போது அதன் தலைவர் மக்களை நோக்கிச் செய்தியொன்றை விடுத்திருந்தார். அச் செய்தி "மக்களே இனிப் போராட வேண்டும்... அவர்கள் தமக்குத் தமக்கென்ற சரியான வழியினை அப் போராட்டத்திற்காக அமைத்துக்கொள்ள வேண்டும்" என்பதாக அவ்வார்த்தைகள் இருந்தன.

இன்று இறுதி யுத்தத்தில் தமிழ் மக்களுக்கு உண்மையில் என்ன நிகழ்ந்தது என்பதைப் பற்றித் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும், உலக மக்களுக்கும் தெரியப்படுத்தும் அறிக்கையை வெளிக்கொணரத் தேவையான தந்திரோபாயங்களை தமிழர்களின் தலைமைத்துவம் இழந்து நிற்கின்றது.

அவ்வறிக்கையினை வெளியிடுவதால் தமிழர்களுக்கு நடைபெற்றது என்ன என்பதை உலகம் முழுவதும் தெரிந்து கொள்வதைத் தடைசெய்யும் பணியை செவ்வனே தற்போதைய அரசு செய்து முடித்திருக்கின்றது. ஆனால் தமிழ்த் தலைமைகளோ அதனைத் தடுப்பதற்கு எடுத்த நடவடிக்கைகள் இராசதந்திர அழுத்தமற்றிருந்தன என்பதே உண்மை.

இக்கணத்தில் சற்றேனும் தூரநோக்கோடு, தரிசனத்தோடு இயங்கிய தமிழர்களின் ஆயுதப் போராட்டத் தலைவரின் இறுதி வார்த்தைகள் கணக்கிற்கொள்ளப்படவேண்டியவையே.

அவை தமிழர்கள் தமக்காகப் போரிட வேண்டும் என்பதை வலியுறத்தியிருந்தன. அதனை தமிழ் மக்கள் செயற்படுத்தத் தொடங்க வேண்டும்.

எங்களின் தலைவிதியைத் எம் கைகளால் எழுதுவோமா?

-மாயன்-

# கிளிவெட்டியின் அபிவிருத்திக்கு வேண்டுகோள்

யுத்தத்தினால் முற்றாக அழிவடைந்துள்ள கிளிவெட்டிக் கிராமத்தின் அபிவிருத்திக்கு உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய முன்மொழிவுகளை அக்கிராமத்தின் மக்கள் வெளியிட்டுள்ளனர்.

இலங்கை வங்கிக் கிளையை மீளத் திறத்தல், ப.நோ.கூ சங்கம் மற்றும் கிராமிய வங்கிகளை மீளத் திறத்தல், வாரத்தில் ஒரு முறை இயங்கிய மூதூர் நீதிமன்றத்தின் அமர்வுகளை அங்கு நடாத்துதல், நெற்களஞ்சிய நடவடிக்கைகளை மீளஆரம்பித்தல், உப-தபாலகத்தினை தரமுயர்த்துதல், பேருந்து நிழற்குடையைத் தாபித்தல், கிரான்குளக்கட்டு வீதியைச் செப்பனிடல், நூல் நிலையத்தை வளப்படுத்தும் நடவடிக்கை எடுத்தல், கோயில்களுக்கு பன்முகப்-படுத்தப்பட்ட நிதி ஊடாக ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ளுதல், கலாசார மத்திய நிலையக் கட்டிடத்தை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகளை அக்கிராம மக்கள் பட்டியலிட்டுள்ளனர்.

இக்கோரிக்கைகள் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா சம்பந்தன், மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தண்டாயுதபாணி மற்றும் மூதூர் பிரதேசசபைத் தவிசாளர் ஜனாப் ஏ.எம் ஹாரிஸ் ஆகியோருக்குக் கடிதம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இக்கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் போரினால் முற்றாக அழிக்கப்பட்டிருப்பதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

# 02ம் கட்ட வினியோகம்

(றபாய்தீன்பாபு ஏ.லத்தீப்)

திருகோணமலையில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மோட்டார் சைக்கிள் வினியோகத்தின் இரண்டாம் கட்டம் 20ம் திகதி இடம்பெற்றது.

அறுநூற்றுத் தொன்னுற்றேழு ஆண் அரச ஊழியர்களுக்கே கடற்கரை திறந்த வெளியில் வைத்து காணி அமைச்சர் குணவர்த்தனவின் பிரத்தியேகச் செயலாளர் உப்புள் வழங்கி வைத்தார்.

பல லட்சம் ரூபாய்களை மோட்டார் கைச்சிள்களுக்காகச் செலுத்திய பல அரச அலுவலர்கள் மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் வண்டிகளைப் பெற்றுக்கொள்ளாது உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# மாணவர் பாராட்டு விழா

திருகோணமலை கோபாலபுரம் அ.த.க. பாடசாலையில் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வெற்றியாளர்களையும் வழிகாட்டிய ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 02 ம் திகதி அதிபர் செ.ஸ்ரீதரசன் அவர்களின் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

விருந்தினராக திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.விஜேந்திரன், ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.கணேசலிங்கம், கோட்டக்கல்விப் பணிப்பாளர், திரு.செல்வநாயகம் ஆகியோரும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் திருமதி.மு.உதயகுமார், திருமதி.ஜெயக்காந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற சு.ரதீஸா (181), து.டனுசாந் (173) மு.யு.அக்கீல் (167), ஆ.டிலக்ஷி (152) ஆகிய நால்வருடன் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற இருபத்து மூன்று மாணவர்கள் பாராட்டப்பட்டார்கள்.

இப்பெறுபேற்றுக்கு வழி காட்டிய ஆசிரியர்களான திருமதி.புஸ்பராஜா, திருமதி.குலேந்திரன் ஆகியோருடன் ஆரம்ப பிரிவு பகுதித்தலைவர் திருமதி.பு. செல்வராஜா, மற்றும் தரம் ஒன்றில் இருந்து கற்பித்த ஆசிரியர்களும் கௌரவிக்கப்-பட்டனர்.






# சைக்கிள் உதவி

இங்கிலாந்து உதவி வழங்கும் நிறுவனம் ஊடாக நிதியைப் பெற்றுக்கொண்டு திட்டங்களை முன்னெடுக்கும் ரோட்டறி கழகம் திருகோணமலை அண்மையில் நெடுந்தூரம் கல்விக்காகப் பயணிக்கும் 5 மாணவர்களுக்கு சைக்கிள்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

# தமிழ்நாட்டினர் உதவி

தமிழ்நாடு, சென்னை "தன்வந்திர்" ரொட்டறி கழக உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் திருகோணமலை, ஈச்சிலம்பற்று ஸ்ரீ சண்பக மகா வித்தியாலயம் மற்றும் மாவடிச்சேனை அ.த.க.பாடசாலை ஆகிய பாடசாலைகளின் மாணவர்களுக்கு 01 இலட்சத்து 50ஆயிரம் ரூபாய்கள் பெறுமதியான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

தன்வந்திர் ரொட்டறி கழக தலைவர் அ. சம்பத் குமார் தலைமையில் ரொட்டேரியன் தனேஸ்கர் ரொட்டேரியன் பாலசுப்பிரமணியம் ஆகியோர் இவ் உபகரணங்களை வழங்கினர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புச் செய்திகள்

## முன்பள்ளி ஆசிரியர்கள் நியமனம் கோரி ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களால் இன்று ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது சிறார்களின் ஆரம்ப ஆளுமைக்கு அத்திவாரமிடும் நாங்கள் அண்மையில் கிழக்கு மாகாணசபையிலும் கல்வித்திணைக்களத்தாலும் நியமனம் வழங்குவதாக கருத்து வெளியிட்ட போதும் அது சம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அவர்கள் கருத்து வெளியிட்டனர் காந்தி சதுக்கத்தில் இருந்து பேரணியாக மாவட்ட செயலகம்வரை சென்ற இவர்கள் தங்கள் கோரிக்கை அடங்கிய மகஜரை அரச அதிபரிடம் கையளித்தனர் .

- சச்சி -



## பல கோரிக்கைகளுக்காக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது

மட்டக்களப்பு நகரில் கடந்த வியாழக்கிழமை (19.01.2015) முன்னிலை சோஷலிசக் கட்சியினால் பொதுமக்களிடமிருந்து கையொப்பங்கள் பெறப்பட்டன. குமார் குணரத்தினத்தினத்தின் அரசியல் உரிமையை பறிக்காதே, அரசியல் கைதிகளை விடுதலை செய், காணாமல் போனவர்களையும் கடத்தப்பட்டவர்களையும் மீட்டுத்தரவேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து கையொப்பங்கள் பெறப்பட்டன. இதன்போது, குமார் குணரத்தினம் உட்பட நாடு கடத்தப்பட்ட அனைவரினதும் அரசியலில் ஈடுபடும் உரிமையை பறிக்காதே எனும் தலைப்பில் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.



## ஆலயங்களில் சேரும் பணத்தை ஏழை மாணவர்களின் நல்வாழ்க்கைக்குச் சேர்ப்போம்



இந்து ஆலயங்களில் சேர்த்துவைக்கப்படும் பணத்தின் ஒருபகுதியை அந்தந்தப் பிரதேசங்களில் வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள மாணவர்களின் கல்விக்கு பயன்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சம்பந்தப்பட்டவர்களிடம் தான் வேண்டுகோள் விடுத்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று -1 கோட்டக்கல்வி அதிகாரி எம்.பாலசுப்பிரமணியம் கடந்த வியாழக்கிழமை (19.01.2015) தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் இந்து விவகார அலுவல்களுக்கு பொறுப்பானவரும் மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவைத்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சீனித்தம்பி யோகேஸ்வரனிடமே இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளதாகவும் அவர் கூறினார். இது பற்றி எம்.பாலசுப்பிரமணியம் மேலும் தெரிவிக்கையில், கடந்த முப்பது வருடகால யுத்தத்தினால் மட்டக்களப்பு மாவட்டம் மோசமாக பாதிக்கப்பட்டது. அதேவேளை, இயற்கை இடர்களான சூறாவளி, மழை, வெள்ளம், வரட்சி போன்றவற்றாலும் பாதிக்கப்படுவதால், மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்படுகின்றது. இதன் காரணமாக வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள குடும்பங்களிலுள்ள பிள்ளைகளின் கல்வியும் பாதிப்படைகின்றது.

இவ்வேளையில், பொது அமைப்புக்கள் வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள மாணவர்களுக்கு கைகொடுத்து உதவவேண்டும். குறிப்பாக, ஆலயங்களில் உள்ள பணம் அந்தந்தக் கிராம மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பயன்படுத்தப்பட வேண்டும். இது பற்றி ஆலய அறங்காவலர்கள் அதிக அக்கறை எடுத்துச் செயற்படவேண்டும். இது விடயமாக இந்து விவகாரங்களிலும் ஆலய நடவடிக்கைகளிலும் அதிக ஈடுபாடு காட்டிவரும் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரனிடம் தான் வேண்டுகோள் விடுத்தபொழுது, அது பற்றி ஆலய அறங்காவலர்களுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்திருக்கின்றார்.

வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் ஆலயங்கள் அக்கறை எடுக்குமாக இருந்தால், அது வறுமைப்பட்ட சமூகத்தில் சிறந்த கல்விப் பெறுபேறுகளை அடைய உதவும்" எனக் கூறினார். சமூக சேவைக்கு உதவாமல் வெறுமனே ஆலயங்களில் பணத்தைச் சேர்த்து வைப்பதில் அர்த்தமில்லை. இது விடயமாக எல்லா ஆலய நிர்வாகத்தினரோடும் கலந்து பேசி ஆலயங்களிலுள்ள பணத்தை வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள மக்களின் நல்வாழ்வுக்கு பயன்படுத்த வழிவகை காணவேண்டும்" எனக் கூறினார்.

## அபிவிருத்தித் திட்டம்


செல்வாநகர் கிழக்கு கிராமத்தில் வாழ்வாதாரத்தை மையப்படுத்திய கிராம அபிவிருத்தித்திட்டத்தை சிகரம் சமூக அபிவிருத்தி நிறுவனத்தினூடாக மக்கள் பங்களிப்புடன் உருவாக்கும் ஆரம்ப நிகழ்சித்திட்டம் வியாழக்கிழமை இடம்பெற்றது. சிகரம் சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் இணைப்பாளர் எம்.எல்.எம்.றிஸ்லி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை இலகுபடுத்துநர் த.வசந்தராஜா வளவாளராக கலந்துகொண்டார்.

## கவனயீர்ப்பு போராட்டம்



கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட செம்மண்ணோடை கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் தாய்சேய் சிகிச்சை நிலையத்தின் கட்டட வேலைகளை தொடரவிடாமல் சிலர் தடைகளை ஏற்படுத்தி வருவதாக கோரி செம்மண்ணோடை மக்கள் இன்று புதன்கிழமை(18) பகல் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர். ஐரோப்பிய யூனியனின் 45 இலட்சம் ரூபாய் நிதியுதவியுடன் யுனிசெப் நிறுவனத்தின் நடைமுறைப்படுத்தலின் கீழ், மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் மற்றும் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தின் மேற்பார்வையின் கீழ் இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தீயில் எரிந்தவர் மரணம்



ஏறாவூரிலுள்ள களுவன்கேணியில் தீயில் கருகிய, களுவன்கேணி சிங்காரத்தோப்பு வீதியைச் சேர்ந்த 23 வயதான சிவராசா கோகிலா நேற்று வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளதாக ஏறாவூர் காவல்துறையினர் தெரிவித்தனர். இந்தப் பெண் சமையல் செய்துகொண்டிருந்தபோது, அடுப்பு தீப்பிடித்ததில் எரிகாயமடைந்திருந்தார். இதன்போது, மனைவியை காப்பாற்றச் சென்ற கணவரும் எரிகாயங்கு உள்ளானதாகவும் எனினும், அவர் காப்பாற்றப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

## பல்கலைக்கு முன் ஆர்ப்பாட்டம்

கிழக்கு பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை சிலர் சீர்குலைக்க முற்படுவதாக தெரிவித்து அப்பல்கலைக் கழகத்துக்கு முன்பாக கவ்னயீர்ப்பு போராட்டம் கடந்த புதன்கிழமை (18.02.2015) நடைபெற்றது. வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் நடத்தப்பட்ட கவனயீர்ப்பு போராட்டத்தில், பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் ஊழியர் சங்கத்தை சேர்ந்த அனைத்து ஊழியர்களும் பங்குகொண்டனர். அண்மைக்காலமாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை சிலர் தனிப்பட்ட சுய இலாபங்களுக்காக தவறான முறையில் பிரசாரம் செய்துவருவதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் தெரிவித்தனர்.



## அரசியலுக்கு பலியாக வேண்டாம்

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் மற்றவர்களின் சந்தர்ப்பவாத அரசியலுக்கு பலியாகாமல் ஒரு யதார்த்தமான தலைவர் முஸ்லிம் மக்களை அரவணைக்கும் உண்மையான அரசியலை முன்னெடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தேசிய கொள்கைபரப்புச்செயலாளர் யு.எல்.எம்.என். முபீன், அவ்வாறான ஒரு நிலையில் இணைந்து வர தயாராகவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆற்றிய உரை குறித்து விடுத்துள்ள பகிரங்க மடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## ஆட்டோ கட்டண குறைப்பு



காத்தான்குடிப் பிரதேசத்தில் முச்சக்கரவண்டிகளில் பயணம் செய்வோருக்கான கட்டணம் நூற்றுக்கு பத்து ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி முச்சக்கரவண்டிகள் சாரதிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் என்.எம்.அபுல்பஸல் தெரிவித்தார். கடந்த (19.2.2015) வியாழக்கிழமை தொடக்கம் இந்த நடைமுறை காத்தான்குடி முச்சக்கரவண்டிகள் சாரதிகள் நலன்புரிச் சங்கத்தினால் காத்தான்குடி பிரதேசத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார். எமது சங்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள முச்சக்கரவண்டிகளில் பயணம் செய்வோருக்கான கட்டணம் நூற்றுக்கு பத்து ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

## வாவிக்கரை பாதுகாப்பு

வாவி முகாமைத்துவத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு வாவியின் எல்லையை பேணும் நோக்கோடு தென்னைமரங்களை நடுவதற்காக பயனாளிகளுக்கு தென்னைமரங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை (20.02.2015) திமிலைதீவில் இடம்பெற்றது. மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் ஆலோசனைக்கமைய மட்டக்களப்பு மாவட்ட கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தினால் குடும்பங்களை தலைமை தாங்கும் பெண்களுக்கு ஒரு மில்லியன் ஷரூபாய் செலவில் அமுல்படுத்தப்படவுள்ள திட்டத்திற்காக 400 தென்னைமரங்கள் ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கு நடுவதற்காக வழங்கப்பட்டன.

## சமுர்த்தி பிரச்சினைக்கான தீர்வு

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் பிரச்சினைகளை தீர்த்துவைக்க நடமாடும் சேவையை நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக வீடமைப்பு மற்றும் சமுர்த்தி பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர்அலி தெரிவித்தார். சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட கிளை உத்தியோகத்தர்கள் இன்று வெள்ளிக்கிழமை (20) பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலியை சந்தித்தபோது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு மேற்கண்டவாறு கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
தேசிய செய்திகள்

# கொக்கோ தீவில் கைதானவர்கள் கடலில் வைத்தே இலங்கைக் கடற்படையிடம் கையளிப்பு



அவுஸ்திரேலிய கொக்கோ தீவுகளிற்கு அருகில் கைதான நான்கு இலங்கையரையும் இலங்கைக் கடற்படையிடம் கையளிக்கும் நடவடிக்கைகளை அவுஸ்திரேலிய அரசு மேற்கொண்டுள்ளது.

தமது கடற்பரப்பில் காணப்பட்ட படகை இடைமறித்த ஆஸியின் கடற்கண்காணிப்புக் கலம் அப்படகில் சட்டவிரோதமாக குடியேற விரும்பிப் பயணித்த நான்கு இலங்கையரை அடையாளம் கண்டுகொண்டது.

அவர்களைக் கடலில் வைத்தே விசாரித்து வந்த ஆஸி அரச அதிகாரிகள் நால்வரையும் இலங்கைக் கடற்படையிடம் கையளிக்க எண்ணியுள்ளனர்.

## பணம் கறக்கின்றனரா? அதிபர்கள்

முறையற்ற விதத்தில் பணம் அறவிடும் பாடசாலை அதிபர்கள் தொடர்பில் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவிக்கின்றார்.

அவ்வாறன அதிபர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கான பெயர் பட்டியல் கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசாங்கத்தினால் இவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்தும் வகையில் சுற்றுநிரூபம் வெளியிடப்பட்டது. எனினும் சில அதிபர்கள் அந்த சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தகவலுக்கு மாறாக செயற்பட்டுள்ளமை தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் கல்வி அமைச்சர் கூறியுள்ளார்.

அமைச்சினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விசாரணைப் பிரிவிற்கு தொடர்ந்தும் முறையற்ற விதத்தில் பாடசாலைகளில் பணம் அறவிடப்படுகின்றமை குறித்து முறைப்பாடுகள் கிடைப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மஹிந்தவிற்கு அழைப்பாணை



நாட்டுக்கு எதிரான சதிச்செயலில் ஈடுபட்டமை, பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீற முற்பட்டமை ஆகிய இரு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராசபக்சவை நீதிமன்றுக்குச் சமுகமளிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அவருடன் மேலும் அறுவரையும் எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதி நீதிமன்றத்தில் சமூகமளிக்கும்படி உயர் நீதிமன்றம் உத்தரவு தெரிவிக்கின்றது.

முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர் துமிந்த நாகமுவ தாக்கல் செய்த குற்றச்சாட்டுகள் அடங்கிய மனுவின் அடிப்படையிலேயே பிரதம நீதியரசர் கே.சிறிபவன், நீதியரசர்களான பிரியசாத் டெப், ஈவா வனசுந்தர தலைமையிலான நீதியரசர்களடங்கிய குழுவே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது நாட்டின் 25 மாவட்டங்களிலும் இராணுவ படைகளை குவித்து குழப்ப நிலையை உருவாக்க முனைந்தார் எனவும் இம்முயற்சி அரசியலமைப்பு சாசனத்தின் படி அடிப்படை உரிமை மீறல் செயற்பாடாகும் எனவும் அம்மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளது. .

## பகற்கொள்ளை இல்லை!



அமைச்சர் சஜித் பிரேமதாச அவர்கள் தனது அமைச்சில் இனி எவ்வித பகற்கொள்ளை நடவடிக்கைகளும் நடைபெறாது என அறிவித்துள்ளார்.

வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சில் 2009 தொடக்கம் 2014வரை வீடமைப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா.66 மில்லியன்களுக்கு என்ன நடந்தது என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிதி, விளம்பரப்பலகைகளை நிறுவவும் கட்டவுட்களை அமைப்பதற்கும் செலவிடப்பட்டுள்ளதைப் புள்ளிவிபரங்களுடன் அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

## நடவடிக்கை என்ன? -நிமல் கேள்வி-



வடமாகாண சபை மேற் கொண்ட தீர்மானத்திற்கு உள்நாட்டிலும் வெளி-நாட்டிலும் என்ன எதிர் நடவடிக்கைகளை அரசா-ங்கம் எடுத்துள்ளது என்று நிமல் ஸ்ரீபால டி சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் செய்ட் ராட் அல் ஹுஸைன், தனது விசாரணைக் குழுவின் அறிக்கை செப்டெம்பர் வரை ஒத்திவைக்கப்படும் என கூறியுள்ளார். புதிய அரசாங்கத்தின் 100 நாட்கள் திட்ட காலத்தில் யுத்த குற்றம் தொடர்பில் யுத்த குற்றத்துக்கு நீதி வழங்கப்படுதல் உட்பட பல்வேறு திருத்தங்களை கொண்டு வருவதாக வெளிநாட்டு அமைச்சர் மங்கள சமரவீர ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையாளருக்கு வாக்களித்துள்ளார். இலங்கை மீதான அறிக்கை ஒத்திவைக்கப்பட்டமை பொருத்தமற்ற நடவடிக்கை என தமிழ் புலம்பெயர்ந்தோர் கூறியுள்ளனர். அமைச்சர் அறிக்கையை ஒத்தி வைக்க கூறினாரா, ஒரு பொறிமுறையூடாக யுத்தம் குற்றம் தொடர்பில் நீதி கிடைப்பதை உறுதிப்படுத்துவதாக வாக்குறுதி அளித்தாரா? " என அவர் கேள்வி எழுப்பினார்.

## "கடும் நடவடிக்கை" பணிப்பாளர்

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் புதிய பணிப்பாளராக பணியேற்றுள்ள தில்ருக்சி விக்ரமசிங்க இலஞ்சத்திற்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை தான் மேற்கொள்ள-வுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

புலனாய்வுப் பிரிவில் மட்டும் நாற்பத்தியெட்டு அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன. அவ்வெற்றிடங்களை நிரப்பும் நடவவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆனாலும் புதிய ஆளணியினரைக் கொண்டு புலனாய்வு நடவடிக்கைகளில் உடனடியாக ஈடுபடுவது பெரும் சவாலான விடயம் ஆகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச விசாரணை கனவிலும் இல்லை



இறுதிக்கட்டப் போரின்போது இடம் பெற்ற-தாகக் கூறப்-படும் போர்க் குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை தேவையில்லை . உள்ளக விசாரணையே நடத்தப்படும் என்ற நிலைப்-பாட்டில் இலங்கை அரசு உறுதியாகவுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படுவது ஆறு மாதகாலத்திற்குப் பிற்போடப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஐ.நா. விசாரணைக்குழு இலங்கைக்கு வர அரசு உடன்பட்டுள்ளதா என அமைச்சரவைப் பேச்சாளரிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

எமது விடயத்தில் சர்வதேச விசாரணையை நாம் ஏற்கப்போவதில்லை. இதே நிலைப்பாட்டையே இந்தியாவும் எடுத்துள்ளது. இந்தியாவும் எம்முடன் இருக்கும் என்பது எமக்குத் தெரியும். எமது வெளிவிவகார அமைச்சர் தெட்டத்தெளிவாக இதனை அமெரிக்காவிடமும் ஐ.நாவிடமும் தெரியப்படுத்தியுள்ளார். இறுதியில் அவர்களும் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். இது இலங்கைக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

அவர்களும் உள்ளக விசாரணைக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். எனவே இலங்கையால் ஏற்றுக்கொள்ளக்கூடியதொரு உள்நாட்டு விசாரணை அறிக்கையை செய்யமுடியுமா என்பதைப் பார்ப்பதற்காகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதை ஆறு மாத காலத்திற்கு ஒத்திவைத்துள்ளனர்.

## யாழ்ப்பாணத்தில் 100 கிலோ கஞ்சா!!!

யாழ்ப்பாணம் இளவாழை தொட்டிலடி பகுதியில் 101 கிலோ கேரோளா கஞ்சாவுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக அறிவித்துள்ள காவல்துறையினர் அவர்கள் முறையே கலஹா பகுதியை சேர்ந்த இருவரும், யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவரும் நொச்சியாகம பகுதியை சேர்ந்த ஒருவரும் எனத் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்களின் சிறிய ரக லொறி ஒன்றும் இரண்டு முச்சக்கரவண்டியும் காவல்துறையால் கைப்பற்றப்பட்டுள்ளன. வடபகுதியில் கடுமையாக போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருவதுடன் வடபகுதிக் கடலின் ஊடாக கேரள கஞ்சா கடத்தப்படுவதாகவும் சந்தேகம் எழுந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## அடையாளம் காணப்படாத வான் தாக்குதல்

### -37 பேர் பலி

நைஜீரியாவில் எல்லைப்பகுதியில் அபதாம் கிராமத்தில் ஒரு இறுதிச் சடங்கில் கலந்து கொண்டிருந்தவர்கள் மீது இனம் தெரியாதவர்களினால் விமான குண்டு வீச்சு இடம் பெற்றது. இக்குண்டுத் தாக்கலில் மசூதி சேதமடைந்துள்ளதாகவும் ஒரு விமானம் மூன்று குண்டுகளை வீசி சென்றதாகவும் இணையச் செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த வான் தாக்குதலுக்கு யார் காரணமென்பது இன்னும் தெளிவாக வில்லை. ஆனால் தாங்கள் காரணமில்லை என்கிறது நைஜீரியா.

வடக்கு நைஜீரியாவில் போகோ ஹராமுக்கு எதிரான நடவடிக்கையில் 300 க்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொளடளப்பட்டதாக நைஜீரிய ராணுவம் தெரிவிக்கிறது. இந்நிலையில் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

## ஈராக்கில் ஐ.எஸ் தீவிரவாதிகளால் 45 பேர் எரியூட்டப்பட்டு படுகொலை

ஈராக்கில் மேற்கு நகரான அல்பாக்தாரியில் ஐ.எஸ். தீவிரவாதிகளால் 45 பேர் எரித்து கொல்லப்பட்டனர் என உள்ளூர் காவல்துறைத் தலைவர் தெரிவித்துள்ளார். எரிக்கப்பட்டவர்கள் யார்? எதற்காக எரிக்கப்பட்டனர் என்பது இன்னும் சரியாக தெரியவில்லை. ஆனால் அவர்களில் சிலர் பாதுகாப்பு தரப்பை சேர்ந்தவராக இருக்கலாம் என ஈராக்கிய காவல்துறை உயர் அதிகாரி தெரிவிக்கிறார்.

## பழங்கால பூனைச் சிலையின் விலை 52 ஆயிரம் பவுண்ட்



எகிப்தைச் சேர்ந்த பழங்கால பூனைச் சிலை ஏலத்தில் 52 ஆயிரம் பவுண்டுகளுக்கு விற்கப்பட்டுள்ளது

2,500 வருடங்கள் பழமையானதாகக் கருதப்படும் இந்தச் சிலை, மேற்கு கார்ன்வால் பகுதியில் ஒரு வீட்டைக் காலி செய்யும்போது கண்டெடுக்கப்பட்டது.

5 ஆயிரம் பவுண்டு முதல் பத்தாயிரம் பவுண்டு வரை விலை போகும் என்று கருதப்பட்ட இந்தப் பூனை சிலையை லண்டனைச் சேர்ந்த, கலைப் பொருட்களை வாங்கி விற்கும் வர்த்தகர் ஒருவர் வாங்கியுள்ளார்.

இந்தப் பூனைச் சிலையை வைத்திருந்தவர்களுக்கு இதன் உண்மையான மதிப்புத் தெரியவில்லை என்பதால், இதனைத் தூக்கி எறிய விருந்தார்கள் என இந்தப் பூனைச் சிலையை ஏலம் விட்ட டேவிட் லே என்பவர் கூறினார்.

## வாடகைத் தாய்மாருக்கு புதிய சட்டம்

வாடகைத் தாய்மார் சம்பந்தப்பட்ட பல்வேறு சர்ச்சைக்குரிய சம்பவங்கள் தாய்லாந்தில் நடந்துள்ளன.

ஆஸ்திரேலிய தம்பதி ஒன்று, டவுன் சிண்ட்ரம் ( மனநலிவு நோய் ) நோயினால் பாதிக்கப்பட்ட ஆண் குழந்தையை அதனைப் பெற்றத் தாயிடமே விட்டுவிட்டு, அதனுடன் இரட்டைக் குழந்தையாகப் பிறந்த- ஆரோக்கியமான பெண் குழந்தையை கொண்டு சென்றிருந்தமை சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தமையால் புதிய சட்டங்களை தாய்லாந்து அறிமுகப்படுத்தியுள்ளது



## அப்பாவி மக்களை கொல்கிறவர்கள் மதத்தின் தலைவர்கள் அல்ல - ஒபாமா

வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் வன்முறை தீவிரவாதத்தை எதிர்கொள்ளுதல் தொடர்பான மூன்று நாள் மாநாடு நடைபெற்றது.

இந்தியா உள்பட 60 நாடுகளின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

மாநாட்டின் 2-வது நாளான நேற்று முன்தினம், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கலந்து கொண்டு பேசிசுகையில் "நாங்கள் இஸ்லாமுக்கு எதிராக போரிடவில்லை. இஸ்லாமை தவறான வழியில் பயன்படுத்துகிறவர்கள் மீதுதான் போர் தொடுத்திருக்கிறோம். ஐ.எஸ். தீவிரவாதிகள், அல்-கொய்தா தீவிரவாதிகள், இவர்களைப் போன்ற பிற தீவிரவாதிகள் சட்டத்தின் மீது நம்பிக்கை இழந்து செயல்படுகின்றனர்.

இவர்கள், தங்களை மதத்தலைவர்கள் போல காட்டிக்கொள்கிறார்கள்.புனிதப் போராளிகளாகவும் காட்டிக்கொள்கிறார்கள்.

வன்முறை தீவிரவாதத்துக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. கடவுளின் பெயரை சொல்லிக்கொண்டு, அப்பாவி மக்களை கொல்கிறவர்கள் பைத்தியக்காரர்கள் போன்றவர்கள்தானே தவிர அவர்கள் இஸ்லாம், கிறிஸ்தவம், புத்த மதம், யூத மதம், இந்து மதம் என எந்தவொரு மதத்தின் பிரதிநிதிகளும் அல்ல.

தீவிரவாதத்துக்கு எந்தவொரு மதமும் பொறுப்பு ஏற்கவில்லை. வன்முறைக்கும், தீவிரவாதத்துக்கும் மனிதர்கள்தான் பொறுப்பு. வன்முறை தீவிரவாதத்துக்கு எதிராக படை பலத்தை மட்டுமே கொண்டு போரிட்டு வெற்றி பெற்று விட முடியாது" என்றும் கூறியுள்ளார் .

## ஹெய்டி கலாசார திருவிழாவில் 20 பேர் பலி

ஹெய்ட்டியின் தலைநகர் போர்ட் அயு பிறின்ஸில் கடந்த செவ்வாய் கிழமை இரவு இடம் பெற்ற களியாட்டத் திருவிழாவில் ஊர்வலமொன்றில் அதிக வோல்ட் மின்சாரத்தை கொண்ட கம்பி இணைப்பு அறுந்து விழுந்ததில் பொதுமக்கள் 20 பேர் பலியானதோடு 60



க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இதனால் இந்த களியாட்ட நிகழ்வின் 3வது இறுதி நாள் வைபவம் இரத்து செய்யப்பட்டு அந்நாள் துக்க தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

## பெரும் புயலில் சிக்கிக் கொண்டது ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந் மாநிலம்



நேற்றைய தினம் மார்சியா என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் புயல் ஆஸ்திரியாவின் குயின்ஸ்லாந்தை தாக்கியுள்ளது.

புயலின் காரணமாக, கடுமையான காற்று வீசுவதோடு பெரும் மழையும் பெய்தது. கடலில் உயரமான அலைகளும் ஏற்பட்டன.

இது தவிர, லாம் என்றொரு புயலும் வட மாகாணத்தைத் தாக்கியுள்ளது. இதன் காரணமாக ஆயிரக் கணக்கான வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப் பட்டிருக்கிறது.

இந்தப் புயலானது எல்சோ தீவைத் தாக்கிவிட்டு, தென் மேற்கு திசையில் நகர்ந்துள்ளது. பல இடங்களில் கூரைகள், மரங்கள் பிடுங்கி எறியப்பட்டிருப்பதாகவும் உள்ளூர் வாசிகள் தெரிவிக்கின்றனர்.

யாருக்கும் காயம் ஏற்பட்டதாக தகவல்கள் இதுவரை வெளியாக வில்லை. என்றாலும் சில வீடுகள் சேதமடைந்திருப் பதாகவும் மரங்கள் சாய்ந்திருப்பதாகவும் அம் மாநில முதல்வர் அனஸ்டேசியா பாலசுக் தெரிவித்திருக்கிறார்.

## இலண்டன் மாணவிகள் சிரியா நோக்கிப் பறந்தது ஐ.எஸ்சில் இணையவா?

இலண்டன் பாடசாலை மாணவிகள் மூவர் சிரியாவிற்குப் பயணமாது ஏன்? என்ற கேள்வி பயங்கரவாதத் தடுப்புக் காவல்துறையால் எழுப்பப் பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை கிழக்கு இலண்டனில் உள்ள தமது வீடுகளை விட்டு வெளியேறிய இந்த மாணவிகள் சிரியா நோக்கிப் பறந்துள்ளனர்.

பதினைந்தே வயதான சமீமா பேகம், கதீஸா சுல்தானா மற்றும் பெயரிடப்படாத மற்றொரு பதினைந்து வயது நண்பியுடன் நாடடை விட்டுப் பறந்து சென்றதை அடுத்து அவர்களது பெற்றோர் தமது பிள்ளைகளைத் திரும்பி வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.



துருக்கியச் சமூக வலைத் தளங்களின் ஊடாகவும் ஊடகங்களின் ஊடாகவும் பெற்றோரின் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளன

## இரு புகையிரதங்கள் நேருக்கு நேர் மோயதியதில் 50 பேர் படுகாயம்

ஸ்விட்சர்லாந்து நாட்டில் இன்று இரு புகையிரதங்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டு விபத்துக்குள்ளானதில் 50 க்கும் மேற்பட்டோர் படுகாய மடைந்தனர்.

ஜுரிச் நகரில் இருந்து வடக்கே 20 மைல் தூரத்தில் உள்ள ர.்.ப்ஸ் புகையிரத நிலையம் அருகே இந்த விபத்துக்கு இரு புகையிரதங்களில் ஒன்று சமிஞ்சையை மதிக்காமல் சென்றுள்ளது.

ஜுரிச்சில் இருந்து புறப்பட்ட அதிவேக உள்ளூர் புகையிரதம் எதிர் திசையில் இருந்து வந்த புறநகர் புகையிரதத்தின் மீது மோதியதில் விபத்து நடந்துள்ளது.

## மத்திய கிழக்கில் கடும் பனி

மத்திய கிழக்கின் சில பகுதிகள் கடும் பனியால் மூடப்பட்டுள்ளன. ஜோர்தானிய தலைநகரான அம்மான் நேற்று வெள்ளி ஸ்தம்பித்துப் போய் விட்டது என்றும் ஆழமான பனியில் கார்கள் புதைந்துபோய் விட்டன என்றும் அடுத்த சில நாட்களுக்கு அந்த பாலவன நகர், துருவப் பனிக்காடு போலத்தான் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இஸ்ரேலில் ஜெரூசலேத்தின் பழைய நகர், வழமைக்கு மாறாக வெண்பனியால், மூடப்பட்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விணையடி நீ எனக்கு... 03

தொடர் நாவல்

– காதல் என்னவோ கணப்பொழுதே
மறத்த லென்னவோ காலம் காலமாய் -
பாப்லோ நெருடா–

– கவிஞர் வி.மைக்கல் கொலின்–

விமர்சனம் என்பது அவனை அடித்துப் போடாத வகையிலும், தூக்கி விடக் கூடிய வகையிலும் புதிய தெம்புடன் அவன் புதிய பயணத்தினை மேற்கொள்ள சரியான பாதையைக் காட்டும் வழி காட்டியாகவும் அமைய வேண்டும். அதுதான் உண்மையான விமர்சனம். அந்த வகையில் அந்தக் கடிதங்கள் அவனுக்கு தெம்பூட்டுபவையாக இருந்திருக்கின்றன. ஒரு முறை அவனது கவிதை ஒன்றின் சில வரிகள் ஈழத்தின் பிரபலமான தமிழ் வார மலர் ஒன்றில் வெளிவந்திருந்தது. இதற்கு அவன் அந்த கவிதையின் முழுமையை ஐரோப்பிய நாடொன்றில் இருந்து வரும் தமிழ்ச் சஞ்சிகை ஒன்றிற்கே எழுதியிருந்தான். அந்தச் சஞ்சிகையில் வெளியாகிய அந்தக் கவிதையின் சில வரிகளை அப் பத்திரிகையில் எடுத்துப் போட்டு சிலாகித்திருந்தார்கள்

**'ஆட்களை விடவும்**
**இங்கு ஆயுதங்கள்**
**மதிக்கப் படுகையில்**
**நண்பா நீயும் என்ன**
**நானும் என்ன**
**நீதியும் சேர்ந்தே**
**மௌனிப்போம்**
**சிலவேளை**
**மரணிப்போம்"**

அக் கவிதை பற்றிய நீண்ட கடிதம் மறு நாளே வந்து சேர்ந்தது. குறிப்பிட்ட அக் கவிதை தொடர்பாக சமகால பிரச்சினையையும், நாட்டில் நிலவிய ஆயுதக் கலாசார சூழலையும் மையம் வைத்து அக் கடிதம் விரிவாக எழுதப்பட்டிருந்தது. அதே அழகிய முத்துப் போன்ற கையெழுத்து. முடிவில் 'உங்கள் ரசிகை' என்ற சின்னக் கிறுக்கலான கையெழுத்து. அன்றுதான் ரதன் உணர்ந்து கொண்டான் இந்த ரசிகை வெறுமனே தனது காதல் கவிதைகளை பற்றி மட்டும் எழுதுபவளல்ல இவள் ஒரு தீவிர வாசகி மட்டுமல்ல தீவிர விமர்சகி அதே வேளை ஒரு தேடல் நிறைந்த படைப்பாளி என்றும் உணர்ந்தான்.

எங்கள் வாழ்வின் ஒவ்வொரு கணங்களும் ஏதோ ஒரு வகையில் யாருடையதோ கைகளில் இருந்து வெடிக்கும் துப்பாக்கியின் ரவைகளினால் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன சொந்த மண்ணில் அகதிகளாய் அலையும் நிலையில் சொந்த சகோதரர்களாலேயே எம் வாழ்வும் சூறையாடப்படும் நிலையில் இன்றைய கால கட்டத்தில், எம்மை காக்க வந்தவர்களே எம்மைத் தாக்கிப் போன நிலையில் இக் கவிதை வரிகள் ஒட்டு மொத்தமான மனித உரிமை மீறல்களுக்கான சாட்டையாகவுள்ளது. இங்கு நாம் மட்டுமல்ல நீதியும் சேர்ந்து தான் மௌனிக்கிறது. சிலவேளை மரணிக்கிறது. அருமையான வரிகள் ..." என்ற அந்த கடித வரிகள் அப் போதும் அவனது ஞாபகத்திற்கு வந்தது.

"ஓ அந்த ரசிகை நீங்கள் தானா? உங்கட கடித வரிகளே சொல்லியது... உங்களுக்குள் எழுத்துத் திறமை உண்டு என்று ... அப்போதே நினைத்தேன். நான் நினைத்தது சரிதான் நீங்களும் ஒரு கவிஞை..." ரதன் சொல்லவும் நிவேதா மெல்ல சிரித்தாள். "இருந்தாலும் உங்களைப் போல என்னால் எழுத முடியாது. நான் ஏதோ உங்கட கவிதைகளின் பாதிப்பில் எழுதி வாறன் அவ்வளவுதான்" அவளது பேச்சு அவனைக் கவர்ந்தது எவ்வளவு எளிமையாக அதேவேளை இனிமையாக பேசுகிறாள் புகழ்ச்சி என்பது இது தானா? ஒருவனை ஒரேயடியாக தலையில் வைத்து ஆடாமலும் அதேவேளை அவனுக்கு சேர வேண்டிய அந்தப் புகழை குழி தோண்டி புதைக்காமலும் எளிய வார்த்தைகளில் ஒருவனைத் தூக்கி விடும் லாவகம் எல்லோருக்கும் வராது. பொதுவாகவே புகழ்ச்சி என்பது அரசியலில் மட்டுமே ஆராதிக்கப்படுகிறது. அதுவும் தேவையற்ற புகழ்ச்சி. சுயநலம் கருதிய புகழ்ச்சி. ஒருவனை அடித்துப் போடும் வஞ்சகப் புகழ்ச்சி, ஆனால் "உங்கள் பாதிப்பில் தான் நான் எழுதி வருகிறேன்" என்ற நிவேதாவினுடைய வார்த்தைகளில் ஒரு புகழ்ச்சி இருந்தது. அது மனசை நெருடும் புகழ்ச்சி, அவனுக்கு சேர வேண்டிய புகழ்ச்சியை அவனை உச்சாணிக்கொம்பில் ஏற்றாமல் மிக நாசூக்காக அவனுக்கே தெரியாமல் அவனைப் புகழ்ந்த விதம் அவனுக்குப் பிடித்திருந்தது. அவளையும் பிடித்துப் போனது .

ஒரு மனிதன் புகழைத் தேடி அலையக்கூடாது. அதேவேளை நியாயமாக கிடைக்கும் புகழைத் தட்டிக் கழிக்கவும் கூடாது. புகழ் ஒரு மனிதனுக்கு தேவை. சிலர் பிறக்கும்போதே புகழுடன் பிறக்கின்றனர். சிலர் வாழும் போது புகழைச் சேர்க்கின்றனர். சிலர் தம் மறைவின் பின் புகழைப் பெறுகின்றனர். புகழப் படாதவன் வாழ்க்கை வாழ்ந்ததற்கே அர்த்தமில்லாமல் போகிறது. புகழ் கர்வம் தரும். ஆம் தன் புலமையின் மீது கர்வம் தரும். புலமையின் மீது கர்வம் தேவை. அது வெறுமனே இறுமாப்பினால் "நான்" என்ற அகங்காரத்தில் வருதல் கூடாது. புலமை மீதான கர்வம் அச்சத்தைக் கொடுக்கும். அந்த அச்சமே அவனைத் தேட வைக்கும். தேடல் அறிவை விருத்தியாக்குகிறது. இன்னும் இன்னுமான அறிவு பூர்வ விசாலிப்பை திறந்து விடும். எனவே புகழ் என்பது புலமை மீதான கர்வத்தை ஏற்படுத்தும். உண்மையான புலமை மீதான கர்வம் ஒரு மனிதனை மேலும் மேலும் அறிவில் விருத்தியாக்குகிறது.

> **கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய**
> **நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின்**
> **கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல் காவியம்.**

"என்னைப் பற்றிக் கேட்டீர்கள் உங்களைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே..? நிவேதா கேட்டாள். ரதன் மெல்ல சிரித்துக்கொண்டான்.

"நீங்க ஒன்றும் கேட்கல்ல நானும் சொல்லல்ல..."

"அது சரி நீங்க எங்க போறீங்க ..... மட்டக்களப்புக்குத்தானா..?"

"ஆமா மட்டக்களப்புக்குத்தான் போறன்... நானும் கம்பஸ் தான். அதுவும் உங்கட பெட்ஜ் தான்."

"என்ன நீங்களும் கம்பசுக்குத்தான் போறீங்களா... அதுவும் எங்கட பெட்ஜ்.... ஓ... கேட்கவே சந்தோசமாக இருக்கு." நிவேதாவின் முகம் சந்தோசத்தால் சிவந்தது.



"ரதன் நீங்க என்ன பெக்கல்டி?... அனேகமாக நீங்களும் ஆர்ட்ஸ்தான் செய்வீங்க என நினைக்கிறேன்."

"ஆம் நானும் ஆர்ட்ஸ்தான் எங்களுக்கு இங்க்லீஷ் கோர்ஸ் முடிந்து விட்டது. இனிமேல் தான் கோர்ஸ் தொடங்கும்."

"அப்படீன்னா இனிமேல் ராக்கிங் நடக்காதா ..?" அவள் குழந்தைத்தனமாக கேட்டாள்.

'ராக்கிங் நாடாகும் குறைவாகத்தான் இருக்கும். அனேகமாக .. இன்னும் சில தினங்களில் 'சோஷல் பங்ஷன்' வைப்பாங்க ... அதுக்குப் பிறகு பயமில்லை" ரதன் சொல்லவும் நிவேதாவின் முகம் சுருங்கியது.

"அப்படின்னா.. உங்களுக்கு ராக்கிங் பிரச்சினை அவ்வளவா இருக்காது. எனக்குத்தான் பயமா இருக்கு ரதன் ."

"இல்ல நிவேதா பயப்படாதீங்க.. இன்னும் சில தினங்களில் சோஷல் பங்ஷன் நடக்க இருப்பதால் அந்த வேலையே சீனியர்ஸ்க்கு அதிகமாக இருக்கும். அதனால உங்களை பெரிதாக கண்டுக்க மாட்டாங்க... எதுக்கும் கொஞ்சம் ராக்கிங் வாங்குவது உங்களுக்கும் அறிமுகத்திற்கு உதவும் தானே....?"

"அப்ப நீங்களும் சரியான ராக்கிங் வாங்கியிருக்கீங்க போல ...?" அவள் சிரித்துக்கொண்டே கேட்டாள். ரதனும் சிரித்துக்கொண்டே தலை ஆட்டினான்.

புகையிரதம் தனது ஓட்டத்தை மெதுவாக்கி ஒரு குலுக்கலுடன் நின்றது. அது 'கல் ஓயா' ஸ்ரேசன். திருகோணமலையிலிருந்து மட்டக்களப்புக்கு ரயிலில் செல்லும் நடைமுறை அதுதான். திருமலையிலிருந்து கொழும்புக்குச் செல்லும் புகையிரதத்தில்தான் மட்டக்களப்பு பயணிகளும் ஏற வேண்டும். அது அவர்களை 'கல் ஓயா' ஸ்ரேசனில் இறக்கி விட்டு தனது கொழும்பு பயணத்தை தொடரும். சில மணி நேரத்தின் பின் கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்குச் செல்லும் புகையிரதம் வந்து இந்த மட்டக்களப்பு பயணிகளையும் ஏற்றிக்கொண்டு செல்லும். புகையிரதம் நின்றதும் மட்டக்களப்புக்குச் செல்லும் பயணிகள் இறங்கத் தொடங்கினர்

மேவும்.. .. ..

---

# பூக்காத மரமும் பூக்கும்

"வாங்கம்மா... பூ வாங்கிட்டுட்டுப் போங்க முழம் 2 ரூபாய் தான் பூ... பூ... " "அம்மா... தாயே... குழந்தை சாப்பிட்டு இரண்டு நாளாகுது ஏதாவது தர்மம் பண்ணுங்கம்மா..."

இந்த வசனங்களெல்லாம் பத்மாவிற்குப் பழக்கப் பட்டவை தான் இருந்தாலும் அனைத்தையும் காதில் வாங்கிய படி அவர்களைக் கடந்து போனாள். எட்டு மணி இளம் வெய்யில் அவள் முகத்தையும் தேகத்தையும் செல்லமாய் வருடிப் பார்த்தது.

வெள்ளிப் பிள்ளையார் கோவிலைக் கடந்த பொழுது கற்பூர ஆராதனை நடப்பது தெரிந்து விரக்தியாய் ஒரு முறுவல் கொண்டாள். ஆம் இதுவே பள்ளிக்குத் தனியாய் இச்சாலையில் நடக்க ஆரம்பித்த காலம் முதல் எத்தனை முறை இக்கோவிலைக் கடந்து இருப்பாள் ஒவ்வொரு முறை கோவிலைக் கடக்கும் பொழுதும் இறைவனை தரிசித்து விட்டுதான் செல்வாள். இன்று சிந்தித்துப் பார்க்கும் நேரமில்லை காரணம் இவள் செல்ல வேண்டிய பேரூந்து சிறிது தொலைவில் அளவுக்கு சற்று அதிகமான கூட்டத்தை பெருக்கிக் கொண்டு வந்தது. ஓடிச் சென்று ஏறினாள்.

இயந்திரத் தனமாக மூன்று மணி நேரம் ஓடியதே தெரியவில்லை. "கல்யாணி..கல்யாணி.." பக்கத்து தையல் மிஷினில் துணி தைத்துக் கொண்டிருந்த கல்யாணியை தோழி வசந்தா கூப்பிடும் சத்தம் கேட்டு பத்மாவும் இயல்பு நிலைக்குத் திரும்பி மணி பார்த்தாள் 11 அடிக்க ஐந்து நிமிடம் இருந்தது. வசந்தாவைப் பார்த்து ஒரு சினேகப் புன்னகையை வீசினாள். வசந்தா பதிலுக்கு புன்னகை த்தாலும் முகத்தில் சிறு கவலை மண்டியிருந்தது தெரிந்தது.

"என்ன வசந்தா... ஏன் இப்படி பேயரஞ்ச மாதிரி இருக்க?" கல்யாணி கேட்டாள்.

"ம்... பேய்தான் ஆனால் என்னை அறையவில்லை உன்னை அறைய வந்திருக்கு" - வசந்தா.

"என்னடி உளர்ற "



"அங்க பார் உன் ஆத்து குடிமகன் உன்னை நாடி ஓடி வந்திருக்கார்" வசந்தா கிண்டலாக சொன்னாலும் தோழியின் நிலை பற்றி உண்மையான கவலை இருந்தது. இப்பொழுது கல்யாணியின் முகத்தில் கலவரம் படர்ந்தது.

இந்நிகழ்ச்சிகள் பத்மாவிற்குப் புதிதல்ல கல்யாணியின் கணவர் வருகை அவளுக்கு இன்று 1ம் தேதி என்பது ஞாபகத்திற்கு வந்தது. மாதம் முதல் தேதி அவள் கணவர் வருவதும் இவள் சம்பளத்தை வாங்கி குடிக்கச் செல்வதும், மறுத்தால் அனைவர் முன்னிலையில் இவளை தகாத வார்த்தைகளால் திட்டி அடிப்பதும், யாராவது தடுக்கச் சென்றால் அவர்களையும் தகாத வார்த்தைகளால் திட்டுவதும் அதற்குப் பயந்து கல்யாணி அவன் கேட்கும் பணத்தைக் கொடுத்து விடுவதும் மாதாந்திர நிகழ்ச்சிகள். பத்மா மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பிய போது நீண்ட அழைப்பு மணி அடித்து ஓய்ந்தது.

அனைவரும் மேனேஜர் அறைக்கு சென்று தங்கள் ஊதியத்தைப் பெற்று வரும் போது வசந்தா பத்மாவிடம் கேட்டாள். "என்னடி மாமியார் வீட்டுக்கா.. வாயேன் சேர்ந்து போகலாம்". பதில் சொல்லாமல் தொடர்ந்தாள். பேருந்து பயணம் பத்து நிமிடத்தில் முடிந்தது. வசந்தா விடை பெற்றுச் சென்றால். அதோ, அந்த நான்காவது வீடு. இரண்டு வருடங்களுக்கு முன்பு வரை தான் பார்த்து இரசித்த வீடு. ஆசையாய் வளர்ந்த தோட்டங்கள் வரைந்த கோலங்கள் மூன்று வருடங்களுக்கு முன்பு இவ்வீட்டில் மருமகளாக நுழைந்து இந்நந்தவனத்துச் சூழலே நம் உலகம் என்று முடிவு செய்து அவ்வாறே பல கனவுகளுடன் வளைய வந்ததெல்லாம் ஒரு வாரத்தில் வடிந்து போனது. காரணம்... ராஜா! பெயருக்கேற்ற குணமில்லை. கல்லூரியில் பெரிய படிப்பு முடித்தாலும் ஏற்பட்ட காதல் தோல்வியால் உள்ளுக்குள் புகைந்து கொண்டிருந்தவனுக்கு வடிகாலாக வந்தாள் பத்மா. பெண்களின் மேல் அவனுக்கு ஏற்பட்ட வெறுப்பு இவள்மேல் வடிந்தது. அந்த நரக வாழ்க்கை கூட பத்மாவிற்கு வாழ கொடுத்து வைக்காமல் அவன் ஒருநாள் வேறொரு பெண்ணுடன் ஊரை விட்டு ஓடிவிட்டான்.

இரண்டு மாதம் கழித்து அவன் சாலை விபத்தில் இறந்ததாக செய்தி வந்தது. சில நாட்கள் துக்கத்தில் கழித்தாலும் தேற்றிக் கொண்டாள். வீட்டில் இவள் ஒரே பெண் என்பதால் அவள் பெற்றோர் இவளை தன்னுடன் அழைத்துக்கொண்டனர். இருந்தாலும், அந்த வயதான பெற்றோரை நிராதரவாக விட மனமில்லை. எனவே தையல் பயிற்சி மேற்கொண்டு ஆறு மாதத்தில் டெக்ஸ்டைல் கம்பனி ஒன்றில் பணியில் அமர்ந்து ஐந்தாயிரம் வருமானம் வருகிறது.

மாமியார் அவளை வரவேற்றாள். சிறிதுநேர உபசரணங்களு க்குப்பின் அவர்கள் கையில் இரண்டாயிரம் ரூபாய் தந்தாள். நடுங்கும் கைகளால் அதைப் பெற்றுக் கொண்டாள் மாமியார். அம்மாடி இதெல்லாம் உனக்கு திருப்தி அளிக்கலாம் ஆனால் எங்களுக்கு மனம் வலிக்கிறது. உன் வாழ்க்கை தரை மட்டமாக காரணமான பாவிகள் நாங்கள். நீ ஏன் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோசமா இருக்கக் கூடாது.

அம்மா உலகத்தில் யாருக்கும் கிடைக்காத பாக்கியம் எனக்கு கிடைத்திருக்கிறது. இரண்டு தாய் தந்தையர் கிடைத்திருக் கிறீர்கள். என் வாழ்வில் திருமணம் என்ற ஒன்று பூத்து முடிந்த சோலை இன்று காய்த்து குலுங்கி கனிய ஆரம்பிக்கும் வேளையில் மரத்தை வெட்டி வேறிடத்தில் செடியாய் மறுபடியும் வளரச் சொன்னால் என்னால் முடியாதம்மா என்னை மன்னித்து விடுங்கள் என்று கூறி விடைபெற்று தன் பெற்றோரை நோக்கிச் சென்றாள்.

இந்த உறவுப் பாலம் நிலைக்கும் என்றும் இடியக் கூடியதல்ல, என்று நினைந்து பொங்கி வர முயற்சிக்கும் கண்களை மகிழ்வுடன் துடைத்தாள். வழி தெளிவாகத் தெரிந்தது வாழ்க்கையும் தான்.

– தன்யா –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## முரசே நீ முழங்கு!!

அருகில் கவிழ்ந்திருக்கும்
இருள் -
உற்றுப் பார்க்கிறேன்
நான் - யாரோ
உறைகிறார் அவ்விருளில் - -

இன்னும் உற்று
உற்றுப் பார்க்க
83ல் தெருவில்
கிழித்தெறியப்பட்ட
அக் குழந்தை...
இருளின் நிறங்
கொண்டு என்னுடனேயே
உறையும்...

அறிவு ஒளி பெற
இருளின் நிறம்
மறைந்தது..
இறந்த அக்
குழந்தையின் பின்னே
ஆயிரக் கணக்கில்
எம்மவர் . .

இருளின் நிறங்
கொண்டு உறைவர்
என்னுடனே!

கொலையும்
பசியும் - உயிர்
கொடையும்
வீரச் சாவும் ..
எரிந்தும் - யாரும்
அறியாமல் மண்ணிற்
புதைந்தும்
வெடித்துக் காற்றாகியும்
வெள்ளை முள்ளி
வாய்க்காலிற்
பலியாகியும் . .

எம்மவர் அருவமாய்
என்னுடன் உறைவர் . .
எம்மவரின் அழிவின் - பின்னும்
என் வாழ்வு
தொடர்வது ஏன்?
என்றோர் வினா எழ ... எழ ..
அறிவொளி மங்கிக்
காற்றில் அலையும் ....
இருள் மீள
என்னைச் சூழ ... எஞ்சி
நிற்குமக் கேள்வி - என்
வாழ்வு தொடர்வது ஏன்?

இன்றோ - ஏழைச்
சத்துணவைத் தின்றவனும்
இணக்கமில்லாப்
பெண்ணைத் தொட்டவனும்
ஆசான் என்றென்முன் . . .
அவர்க்காய்ப் பரிந்தபடி - மற்றும்
ஆயிரம் பேர் அவர்பின் . .

இருளில் என்னோடு
உறைபவருக்கு - நான்
என்ன பதில்
சொல்வேன்

இருளில் உறைவோரே!
என் உயிர்த்துடிப்புள்ளவரை
சரியாததென் எழுத்தாணி
சரியானதையே எழுதும் . . .

முரசே - நீ
முழங்கு!

- மாயன் -

## தாமரைத்தீவான்

செந்தமிழால் பைந்தமிழ் கவி தந்து
எந்தமிழர் சிந்தனைக்கு உரமூட்டிய
ஓங்குபுகழ் தொல்பதி திருமலையின்
தாங்குதமிழ் மணிமுத்தாரம் - தாமரைத்தீவான்

கண்டபல சேதிகள் படைத்திடும் இப்பாரில்
நின்றிடும் தமிழ் மொழியின் புகழை
பொய்யாக்கவியால் புதுப்பொலிவூட்டி - தளரா
மெய்யெழுது கோலான் - தாமரைத்தீவான்
தமிழ் எழுத்துக்களுக்கும் எடுப்பான கவிகள்
தமிழ் உறவுகளுக்கும் உரித்தான கவிகள்
தமிழ் தாசர்களுக்கும் உணர்வான கவிகள்
தமிழில் படைத்திட்ட தமிழறிஞன் - தாமரைத்தீவான்

தள்ளிநீர் சென்றாலும் தமிழும்மை விடாது
கிள்ளியெறிந்தாலும் கிடப்பிலேயிராது உங்கவி
கோணமலை தன்னில் ஈச்சந்தீவு பெற்ற
கோபுர புகழது தாமரைத்தீவானே !

ஸதீஸ்

## தேடல்

திருமலை சுந்தா



கோணல் மாணலான
வரைகோடுகளின் பதிவில் . .

மூளையின் சலவை
குளியலில் தேய்த்து
ஊற்றை கழுவி
பதிவினில் பதிந்து!

வரைதலின் மொழிதனை
அறிந்து தெரிந்திட
புரியாமல் புரிந்த
முடிச்சுகளை அவிழ்க்க . .

புதையுண்ட கோடுகளின்
தேடலுக்காய் கசங்கி.

## தொடரும் நீ . . .



அருகிலே இருக்கின்றாய்
- நீ
ஒரு புயலாய் - குளிர்
நிலவாய் -
வருடும் காற்றாய்
மெல்லிதழ்ப் பூவாய்
ஒரு பெண்ணாய்
அருகில் . . . .

உன் புதைகுழியில்
சில புற்கள்
பூத்த பின்னும்
அருகிலே - நீ

- தன்யா -

## விழித்திருநீ!

மொழியே மொழியே தமிழ்மொழியே,
முதலில் பிறந்தவள் நீயலவோ?
அழியா தின்னும் இருப்பவளே,
அழவைப்பதுனை எம் தழிழரலோ?

ஆருனைக் கெடுத்தவள் அறிவாய்நீ!
அவளுடன் ஏன்நீ குலவுகிறாய்?
வேருடன் உன்னையே கருவறுத்தே
வீழ்த்திடமுனைவாள் விழித்திருநீ!

தமிழரின் தலையுள் நுழைந்துவிடு!
தமிழ்தமிழ் என்றே ஆட்டமிடு!
'அமிழ்தமிழ்' தெனவாய் அசைபோடு!
அகம் - புறம் ஆனவள் நீயலவோ?

எண்ணிடும் நெஞ்சினுள் மண்டிவிடு!
எடுத்துனை வைப்பர்தம் ஏடகளில்!
கண்ணாய் மதிப்பவர் கருத்தில் இரு!
கழித்திடுபவளை நீ கழித்திடுவாய்!

தாமரைத் தீவான்
ஈச்சந்தீவு, கிண்ணியா.

# திருஞானசம்பந்தரின் தமிழ் பக்தி இயக்கத்தில் திருக்கோணேஸ்வரம்


**வரலாற்றுப் பக்கம்**

கடந்தவாரத் தொடர்ச்சி.. ...

இன்று திருகோணமலை மண்ணில் ஆழவேரூன்றியிருக்கும் இராவணன் தொடர்பான கருத்துக்கள் தட்சண கைலாய புராணம், திரிகோணாசலப் புராணம் என்பனவற்றை ஆதாரமாகக் கொண்டவை. இராவணன் தனது தாயாரின் வணக்கத்திற்காக திருக்கோணேஸ்வர த்தினை நகர்த்த முற்பட்டு வாளினால் வெட்டினான் என்ற காரணத்தின் அடிப்படையில் இன்றுவரை 'இராவணன் வெட்டு' என்றழைக்கப்படும் இடம் இருக்கிறது.

அத்துடன் அவனது தாயாரின் ஈமைக் கிரிகைக்காக உருவாக்கியதாகக் கருதப்படும் 'கன்னியா வெந்நீர் ஊற்றுக்கள்' மற்றும் இராவணன் தொடர்புடைய ஏனைய அம்சங்கள் திருகோணமலை வாழ் மக்களிடையே நீண்ட நெடுங்காலமாக நிலவிவரும் நம்பிக்கைகளாக இருக்கிறது. எனவேதான் இராவணனை கோணேஸ்வரத்துடன் தொடர்புபடுத்திப் பாடிய சம்பந்தரின் பதிகம் இலகுவாக திருகோணமலை மக்களின் மனத்தினை வென்றது. அதுபோலவே இதே நம்பிக்கையுடைய ஈழநாட்டின் ஏனைய பகுதிகளிலும், தமிழ் நாட்டிலும் உள்ள அடியவர்கள் மனத்தில் பக்தியுடன் கூடிய தமிழுணர்வை ஊட்டியது.

சம்பந்தரின் ஒன்பதாவது பாடல் சிவனுடைய அடிமுடி தேடி பிரமனும், திருமாலும் அலைந்த கதையினை நினைவூட்டுவதாக அமைந்திருக்கும். அந்த நாட்களில் பிரிந்து முரண்பட்டு நின்ற சைவ, வைணவ மதங்களை ஒருங்கிணைத்து தனியொரு கடவுள் ஆக்கும் தேவை அப்போதிருந்தது. இவ்விரு சமயங்களும் ஒன்றுபட்டு செயற்படாவிட்டால் அரச ஆதரவுடன் பரவிக் கொண்டிருந்த சமண, பௌத்த மதங்களை எதிர்கொள்ளும் ஆற்றல் இல்லாமல் போய்விடும் என்பதை சம்பந்தர் நன்குணர்ந்திருந்தார். எனவே



பாடல் எண் : 9

**அருவரா தொருகை வெண்டலையேந்தி**
**யகந்தொறும் பலியுடன் புக்க**
**பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப்**
**பெருங்கடல் வண்ணனும் பிரமன்**
**இருவரு மறியா வண்ணமொள் ளெரியா**
**யுயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்**
**குருவராய் நின்றார் குரைகழல்**
**வணங்கக் கோணமா மலையமர்ந்**
**தாரே.**

(அருவருப்பு ஏதுமில்லாமல் பிரமனின் வெண் தலையைக் கையிலேந்தி வீடுகள்தோறும் சென்று பிச்சை ஏற்று உண்ணும் பெருமையுடையவர். சீர்மை பொருந்திய பெருங்கடலில் துயில்கொள்ளும் திருமாலும், பிரமனும் அடி,முடி அறியமுடியாத வண்ணம் ஒளியுடைய பெரிய நெருப்புப் பிழம்பாய் உயர்ந்து நின்றவர். திருமால் தாமரை போன்ற தன் கண்ணையே பூவாக அர்ச்சனை செய்யக் குருவாய் விளங்கியவர். அடியவர்கள், ஒலிக்கின்ற வீரக்கழல்கள் அணிந்த தம் திருவடிகளை வணங்கும் வண்ணம் கோணமலையில் வீற்றிருக்கிறார்.)

மேற்கூறிய பாடல் மூலமாக தனிப் பெருங் கடவுளாக சிவனைக்காட்ட அவர் முயல்கிறார். இக்காலகட்டத்தில் சிவனையும், திருமாலையும் ஒரே உருவமாக வழிபடும் ஹரிஹர மூர்த்தி வழிபாடு தோன்றியதும் குறிப்பிடத்தக்கது.

தொடரும்.....

வைத்திய கலாநிதி
த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சம்பூர் மீள்குடியேற்றம் நடைபெறுமா?

ஒன்பது வருடங்களுக்கு முன் சம்பூரை இலங்கை அரச படைகள் கைப்பற்றிய போது அந்தக் கிராம மக்கள் இடப்பெயர்வுக்கு உள்ளாகி அனாதைகளாகவும் அகதிகளாகவும் ஆனார்கள். அன்று தொடக்கம் இன்று வரை மூதூரிலுள்ள கிளிவெட்டி, பட்டித்திடல், மணற்சேனை கட்டைப்பறிச்சான் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்நிலையிலேயே தமது வாழ்வில் இனியேனும் ஒரு விடிவு கிட்டும் என்ற நம்பிக்கையுடன் மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கு வாக்களித்தார்கள். இருந்தும் அவர்களது எதிர்பார்ப்பு இன்று வரை நிறைவடையவில்லை. இருந்த போதும் இன்று ஊர் திரும்புவோம், நாளை ஊர் திரும்புவோம் என்ற நம்பிக்கையில் தான் தமது நாட்களை கண்ணீருடன் தினம் தினம் நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள். எந்தவிதமான நன்மைகளும் நடந்தபாடில்லை.

இந்நிலையில் கடந்த ஆறாம் திகதி தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் அரச தரப்பிற்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றது. இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா மற்றும் சுரேஸ் பிரேமசந்திரன் ஆகியோர் கலந்து கொண்டதுடன் அரசின் சார்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களும் அவருடன் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் மற்றும் நிபுணர் குழுவொன்றும் கலந்து கொண்டிருந்தது. இச்சந்திப்பில் மீள் குடியேற்றம் பற்றி பேசப்பட்ட விடயங்கள் பற்றி சுரேஸ் பிரேமசந்திரன் அவர்கள் கூறுகையில், சம்பூர் மக்களுடைய காணிகளில் 800 ஏக்கர் நிலத்தினை முதலீட்டு ஊக்குவிப்பு சபை கையகப்படுத்தி யிருப்பதுடன் 200 ஏக்கர் நிலத்தினை கடற்படையினர் தங்களுடைய தேவைகளுக்காக கையகப்படுத்தியிருக்கிறார்கள். அதே போல் வலிகாமம் வடக்கிலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. இவை உடனடியாக விடுவிக்கப்பட்டு அங்கு மக்கள் மீள் குடியேற்றப்பட வேண்டும் என்று அரச தரப்பிடம் நாம் வலியுறுத்தினோம். அதற்கு பிரதமர் சம்பூர் தொடர்பாக ஆராய்வதற்கு குழுவொன்று அமைக்கப்பட்டிருப்பதாகவும் அதேபோல் வலிகாமம் பிரதேசத்தில் பாதுகாப்பு வலயம் மற்றும் இராணுவக் குறைப்பு தொடர்பாகவும் ஆராய்வதற்கு வடக்கிற்கு தற்போது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன சென்றுள்ளார்.

அவர் பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்ந்து அங்குள்ள தற்போதைய உண்மை நிலவரத்தினை ஆராய்ந்து அங்குள்ள தற்போதய உண்மை நிலவரத்தினை ஆராய்ந்து கொழும்பு வந்தபின் அறிக்கை யொன்றினை வெளியிடுவார். அதன் பிரகாரம் உரிய தீர்வினை பெற்றுத் தருவேன் எனவும் இதற்கு இரண்டு வாரகால அவகாசம் கேட்டதாகவும் கூறி இருந்தார்.

இந்நிலையில் கடந்த ஒன்பதாம் திகதி வெளி வந்த செய்தியால் இன்னும் பத்து நாட்களில் வலிகாமம் வடக்கில் 1000 ஏக்கர் நிலத்தை இராணுவம் கையளிக்கும் எனவும் இதன் தொடர்ச்சியாக 3000 ஏக்கர் நிலம் இராணுவத்தினரால் மக்களிடம் கையளிக்கப்படும் என்ற செய்தி வலிகாமம் வடக்கு தொடர்பில் கிடைக்கப்பெற்றது.

இதைத் தொடர்ந்து சம்பூர் மக்கள் தமக்கும் நல்ல செய்தி கிடைக்கும் என எதிர்பார்த்து இருக்கையில் அண்மையில் ஜனாதிபதியுடன் இந்தியா சென்ற கிழக்கு மாகாண ஆளுனர் ஒஸ்ரின் பெர்ணான்டோ அவர்கள் தமது இந்திய விஜயத்திற்கு முன்னர் இடைத்தங்கள் முகாம்களில் உள்ள மக்களை சந்தித்து விட்டு பின்னர் உயர் பாதுகாப்பு வலயத்திற்கும் பயணித்து அங்கு நடைமுறைப் படுத்தப்படவுள்ள முதலீட்டுத் திட்டங்கள் தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளதுடன் அதன் போது சம்பூர் அனல்மின்நிலையப் பணிகள் மிக விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் வலுப்பெற்றிருப்பதாகவும் தெரியவந்ததுடன் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அவர்களினது இந்திய பயணத்தில் இந்த விடயம் ஆராயப்படலாம் என்ற எதிர்பார்ப்பினையும் ஏற்படுத்தி இருந்தது.

இதனைத் தொடர்ந்து கசிந்த தகவல்களின்படி அனல் மின்நிலையத்தை இந்தியா அமைக்க உள்ளதுடன் இதனைச் சுற்றி அமையவுள்ள தொழில் பேட்டையில் சீனா உட்பட 11 நாடுகளின் தொழிற்சாலைகள் 2 துறைமுகங்கள் அமைக்கப்பட இருந்ததாகவும் இந்தத் தொழில்பேட்டை அமையும் பகுதியை முன்னால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மனைவியின் சகோதரர் நிசான் விக்கிரமசிங்க குத்தகைக்கு எடுத்துள்ளதாகவும் தகவல்கள் வெளிவந்திருந்தன.

இந்நிலையில் தொழில் பேட்டை அமைப்பதனை தடை செய்யக் கூறியும் கடற்படையிடம் தற்போது உள்ள நிலத்தினை மீட்டுத் தரக் கூறியும் தமது சம்பூர் பிரதேசத்தில் அமைக்கப்படுகின்ற தொழிற்சாலைகளில் சென்று வேலை செய்து தான் வாழ்க்கையினை நடத்த வேண்டும் என்றநிலை சம்பூர் மக்களுக்கு இல்லை என்றுமே அதற்கு பதிலாக தமது காணிகளை தரும்படியும் அதில் தாம் விவசாயம் செய்து வாழ்வதையே விரும்புதாகவும் அதன்மூலம் கிடைக்கும் வருமானம் தமக்கு நிறைவானது எனவே தமது மண்ணை மீட்பதற்காக நான்கு முகாம்களில் உள்ள மக்களும் கிளிவெட்டியில் உள்ள இடைத்தங்கள் முகாமில் ஒன்றுகூடி கவனயீர்ப்பு உண்ணாவிரதத்தினை கடந்த 16ம் திகதி நடாத்தினார்கள்.

சம்பூர் மக்களின் இன்றைய தேவையும் அவர்களின் எதிர்கால கனவும் சம்பூரில் மீள்குடியேற்றி வாழ்வதே ஆகம். எனவே அரசாங்கம் அவர்களுக்கு வழங்குவதாக கூறுகின்ற தொழில் பேட்டையினையும் அத்தோடு இணைந்த சம்பூர் குடியேற்றத்தினையும் சம்பூர் மக்கள் விரும்பவில்லை. எனவே அவர்களது சம்பூரை அவர்களிடம் கொடுப்பதற்கு தமிழ் தலைமைகள் துரிதகதியில் நடவடிக்கைகளை எடுப்பதற்கு அழுத்தம் கொடுப்பதற்காகவே அர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். இதனை புரிந்து அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டியது தமிழ் அரசியல் தலைமைகளின் கடமையாகும்.

**திருமலை தர்ஷன்**

# இந்திய சிறிலங்கா அணுசக்தி உடப்பாடு ஏன் முக்கியமானது

சிறிலங்காவில் அதிகரித்துள்ள சீனாவின் செல்வாக்கை இல்லாதொழித்தல் என்பது குறுகிய காலத்தில் சிறிலங்காவைப் பொறுத்தளவில் இலகுவான காரியமல்ல.

இவ்வாறு firstpost.com இணையத்தளத்தில் ராஜீவ் சர்மா எழுதியுள்ள செய்திக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனை புதினப்பலகைக்காக மொழியாக்கம் செய்துள்ளவர் நித்தியபாரதி.

சிறிலங்கா அதிபர் மைத்திரிபால சிறிசேன இந்தியாவுக்கான பயணத்தை மேற்கொண்ட போது, திங்களன்று இந்தியாவுக்கும் சிறிலங்காவுக்கும் இடையில் இந்தியாவில் வைத்து மேற்கொள்ளப்பட்டுள்ள அணுசக்தி ஒத்துழைப்பு உடன்பாடானது நரேந்திர மோடி அரசாங்கத்தின் முதலாவது பாரிய இராஜதந்திர சாதனையாக நோக்க முடியும். சிறிலங்காவின் முன்னைய அரசாங்கம் சீன ஆதரவுக் கொள்கையை முற்றிலும் கடைப்பிடித்த நிலையில், சிறிலங்காவின் புதிய அரசாங்கம் இந்தியாவுடன் மேற்கொண்டுள்ள அணுசக்தி உடன்பாடானது முன்னைய அரசாங்கத்தின் வெளியுறவுக் கோட்பாட்டிற்கு முற்றிலும் எதிர்மாறாகச் செயற்பட ஆரம்பித்துள்ளதையே சுட்டிக்காட்டுகிறது.

ஏப்ரல்-மே மாதங்களில் இடம்பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக எவ்வித கவலையும் கொள்ளாது அதிபர் சிறிசேன இந்தியாவுடன் அணுசக்தி உடன்பாட்டை மேற்கொண்டுள்ளார்.

கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட அதிபர் தேர்தலில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்டவரும் முன்னாள் அதிபருமான மகிந்த ராஜபக்சவிடமிருந்து பெரியளவு வேறுபாட்டில் சிறிசேன வெற்றி பெறாத போதிலும் இந்தியாவுடன் மேற்கொண்டுள்ள உடன்பாடானது சிறிசேனவின் தன்னம்பிக்கையின் உச்சத்தையே வெளிப்படுத்தி நிற்கிறது.

அத்துடன் தற்போதும் சிறிலங்காவில் சீன ஆதரவு நிலைப்பாடு அதிகம் காணப்படுகின்ற அதேவேளையில் அதிபர் சிறிசேன இத்தகையதொரு பாரிய இராஜதந்திர நகர்வை முன்னெடுத்துள்ளமை இவரது உச்சமான தன்னம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

சிறிசேனவின் இத்தகைய தன்னம்பிக்கையைத் தான் தவறாகக் கருதவில்லை என இந்தியா நம்புகிறது.

அத்துடன் சிறிலங்காவில் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் சிறிசேன வெற்றிபெறுவார் எனவும் இந்தியா நம்புகிறது.

உயிர்த்துடிப்பான ஒரு அணுசக்தித் திட்டம் தொடர்பாக சிறிலங்கா தற்பெருமை கொள்ளவில்லை என்பதும், 2031ல் 6000 மெகாவற் அணுசக்தியை உற்பத்தி செய்வதற்கான திட்டத்தை சிறிலங்கா கொண்டுள்ளது என்பதும் மிகவும் முக்கிய விடயமாகும்.

ஆகவே, சிறிலங்காவில் அணுசக்தி என்பது பாரியதொரு விவகாரமாகவோ அல்லது இது சிறிலங்காவுக்குத் தேவை என அழுத்தம் வழங்கப்படாத இக்காலப்பகுதியில் சிறிலங்கா ஏன் இந்தியாவுடன் அணுசக்தி உடன்பாட்டை மேற்கொண்டுள்ளது?

இந்தக் கேள்விக்குச் சாதகமான பதில்களை ஆராய்வதற்கு முன்னர், தற்போது சிறிலங்காவும் இந்தியாவும் மேற்கொண்டுள்ள அணுசக்தி உடன்பாடு தொடர்பாகச் சுருக்கமாக நோக்க வேண்டும்.

'அணுசக்தியின் அமைதி மிக்க பயன்கள்' (Peaceful Uses of Nuclear Energy) என்கின்ற பெயரில் சிறிலங்காவுக்கும் இந்தியாவுக்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள அணுசக்தி ஒத்துழைப்பானது இது தொடர்பான அறிவு, சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்கள், வளங்கள் போன்றவற்றை பரிமாறுதல், மாற்றிக்கொள்ளுதல் போன்றவற்றுடன், திறன் அபிவிருத்தி, அணுசக்தியை அமைதி வழியில் அதாவது வன்முறையற்ற வழிகளில் பயன்படுத்துவதற்கான ஆட்களைப் பயிற்றுவித்தல், அணுசக்திப் பாதுகாப்பு, கதிரியக்கப் பாதுகாப்பு, கதிரியக்க விரய முகாமைத்துவம், அணுசக்தி மற்றும் கதிரியக்க அனர்த்த முகாமைத்துவம், சூழல் பாதுகாப்பு போன்ற பல்வேறு விடயங்களைப் பகிர்ந்து கொள்ளுதலை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

இந்தியா சார்பில் அணுசக்தித் திணைக்களத்தின் செயலர் றட்ண குமார் சிங்கவும், சிறிலங்கா சார்பாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் அணுசக்தி ஒத்துழைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்

'நாம் தற்போது செய்து கொண்டுள்ள சிவில் அணுசக்தி இருதரப்பு உடன்படிக்கையானது எமது இருதரப்பு நம்பிக்கையின் பிறிதொரு நகர்வாகும்.

சிறிலங்கா இவ்வாறானதொரு உடன்படிக்கையில் தற்போது முதன்முறையாகக் கைச்சாத்திட்டுள்ளது.

விவசாயம், சுகாதாரம் போன்ற துறைகள் உட்பட பல்வேறு விடயங்களில் ஒத்துழைப்பை வழங்கும் [illegible] வழிவகையை இது உருவாக்கியுள்ளது' என அணுசக்தி ஒத்துழைப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர், அதிபர் சிறிசேனவுடன் இணைந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வழங்கிய ஊடக மாநாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

சிறிலங்கா தனது நாட்டில் அணுசக்தி அடிக்கட்டுமானத்தை நிறுவுவதற்குத் தேவையான ஆளணிகளுக்கான பயிற்சி உட்பட பல்வேறு வகைகளில் இந்த உடன்பாடு மூலம் இந்தியா, சிறிலங்காவுக்கு உதவுவதுடன், இலகு தர சிறிய அளவில் அணு உலைகளை இந்தியா சிறிலங்காவுக்கு வழங்குவது வரை விரிவுபடுத்தப்படும்.

இந்தியப் பிரதமர் சிறிலங்காவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது தொடர்பாகவும் தெரிவித்தார். ஆனால் இது தொடர்பான மேலதிக விபரங்கள் எதனையும் பிரதமர் வெளியிடவில்லை.

சிறிலங்காவின் முன்னாள் அரசாங்கத்துடன் கொழும்பு வர்த்தகத் துறைமுகத்திற்கு அருகே கப்பற்றுறை ஒன்றை 1.5 பில்லியன் டொலர்களில் அமைப்பதற்கு சீனா கைச்சாத்திட்ட நிலையில், சிறிசேன அரசாங்கத்தின் இந்தியாவுடனான நட்புறவானது சீனாவுக்கு பாரியதொரு அதிருப்தியை ஏற்படுத்தும்.

சிறிலங்கா தனது நாட்டில் அணுசக்திச் செயற்பாடுகளை விரிவுபடுத்த விரும்பியிருந்தால் சீனா, ரஸ்யா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளின் உதவிகளைக் கோரியிருக்க முடியும். ஆனால் இந்த நாடுகளைத் தெரிவு செய்யாது இதற்குப் பதிலாக சிறிலங்கா, இந்தியாவைத் தெரிவு செய்துள்ளது. இது சிறிசேனவின் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ள எழுதப்படாத 'நன்றியுரை' ஆகும்.

எதுஎவ்வாறிருப்பினும், சிறிலங்காவில் அதிகரித்துள்ள சீனாவின் செல்வாக்கை இல்லாதொழித்தல் என்பது குறுகிய காலத்தில் சிறிலங்காவைப் பொறுத்தளவில் இலகுவான காரியமல்ல. கடந்த ஐந்து ஆண்டுகளில் சிறிலங்காவில் சீனா நான்கு பில்லியன் டொலர்கள் வரை முதலிட்டுள்ளது.

வரும் சில மாதங்களில் இந்தியா-சிறிலங்கா உறவு நிலை மிகவும் சுவாரசியம் மிக்கதாக இருக்கும்.

அடுத்த மாதம் சிறிலங்காவுக்கான தனது சுற்றுப்பயணத்தை பிரதமர் மோடி மேற்கொள்ளவுள்ளதானது இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான மூலோபாய நகர்வில் மேலும் நெருக்கத்தை ஏற்படுத்தும்.

(புதினப்பலகை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## எவ்வெப்பத்திலும் இயங்கும்

ஜப்பானின் பானசோனிக் நிறுவனம், புதிய 7 அங்குல டேப்லெட் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. 540 கிராம் எடை கொண்ட இந்த டேப்லெட் பேட்டரிகள் 14 மணிநேரம் நீடிக்கும், மேலும் இந்த டேப்லெட்டின் தொடுதிரை கடின உராய்விலும் செயல்படுகிறது.




கைகளில் கிளவுஸ் அணிந்து கொண்டுகூட இதை இயக்கலாம். மேலும் நீர்புகா தன்மையுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. மைனஸ் 24 டிகிரி குளிர்நிலையிலும் இந்த டேப்லெட் இயங்கக்கூடியது.

## க்ளவட் சேவை

iCloud

அப்பிள் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுவரும் ஒன்லைன் சேவையான iCloud சேவையினை பெறுவதற்கு iWork அப்பிளிக்கேஷன் அல்லது ஏதாவது ஒரு அப்பிள் சாதனம் அவசியமாக காணப்பட்டது. எனினும் தற்போது அப்பிள் சாதனங்களை கொண்டிராதவர்களும் இச்சேவையினை பயன்படுத்துவதற்கான வசதியினை ஏற்படுத்தும் முகமாக iWork அப்பிளிக்கேஷன் மேம்படுத்தப்பட்டு வருகின்றது.




## ஈஸி சிகிச்சைக்காக புதிய வசதி

புகைப்படங்களை நண்பர்களுடனும், குடும்பத்தவர்களுடனும் பகிர்ந்து மகிழ உதவும் பிரபல வலைத்தளமான Instagram தற்போது புதிய வசதி ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது.

அதாவது வைத்தியர்கள் தம்மிடம் சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் தொடர்பான புகைப்படங்களை அவர்களுடன் Instagram ஊடாக பகிர்ந்துகொள்ளும் வசதியே இதுவாகும்.

இதன்மூலம் சிக்கிலான சிகிச்சைகளை கலந்தாலோசித்து மேற்கொள்ள முடிவதுடன் நோய்களை விரைவாக குணப்படுத்தக்கூடியதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சொனியின் புது அறிமுகம்



சோனி நிறுவனமனது இவ்வருடம் ஜனவரி மாதம் இடம்பெற்ற CES நிகழ்வில் Single Lens Display எனும் சாதனத்தை அறிமுகம் செய்யவுள்ளதாக அறிவித்திருந்தது. தற்போது இச்சாதனம் தொடர்பான டெமோ வீடியோ ஒன்றினை வெளியிட்டுள்ளது.

இதனை சாதாரண கண்ணாடிகள் அல்லது சன்கிளாஸ் என்பவற்றுடன் இணைத்து பயன்படுத்த முடியும். இதில் 0.23 அங்குல அளவு, அதி உயர் நிறப் பிரிக்கை கொண்ட OLED தொழில்நுட்பத்தினை உடைய காட்சித் திரை தரப்பட்டுள்ளது.

## 170 CC மோ.சைக்கிள் தயார்



Feline One எனும் 170 குதிரை வலுக் கொண்ட அதிவேக மோட்டார் சைக்கிளை Swiss designer Yacouba Galle நிறுவனம் வடிவமைத்துள்ளது. இந்த மோட்டார் சைக்கிள் ஆனது 800CC, 3 Cylinder உடையதாகக் காணப்படுகின்றது. மேலும் கார்பன் பைபர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட இதன் எடையானது 155 கிலோகிராம்கள் ஆக காணப்படுகின்றது. தற்போது இந்த ரகத்தில் 50 வரையான மோட்டார் சைக்கிள்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

## இறந்த பின்பும் பாவிக்கலாம்

facebook

இறந்த பின்பு தன்னுடைய பேஸ்புக் கணக்கை யார் கையாள்வது என்பதை முடிவு செய்யும் வசதியை பேஸ்புக் அறிமுகப்படுத்தியுள்ளது. 'legacy contact" என்ற இந்த வசதியின் மூலம் நாம் இறந்த பிறகு நமது பேஸ்புக் கணக்கை நிர்வகிக்க குடும்ப உறுப்பினர்களில் ஒருவரையோ, நண்பர்களில் ஒருவரையோ நாமினியாக நியமித்துக் கொள்ளலாம். அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர் நமது Profile Information யை மாற்ற முடியும், Post களை சேமித்து வைக்கலாம். ஆனால் Private Messages யை பார்க்க முடியாது.

OTHER

## செவ்வாயில் மூடுபனி



செவ்வாய் கிரகத்தில் மர்மமான மூடுபனி நிலை அவதானிக்கப்பட்டிருப்பது வானியலாளர்களுக்கு மத்தியில் பெரும் கேள்விகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த பிரமாண்டமான மூடுபனி நிலை 2012ஆம் ஆண்டு தன்னார்வ விண்ணியல் ஆராய்ச்சியாளர்களால் அவதானிக்கப்பட்டுள்ளது. அந்த ஆண்டில் இந்த மூடுபனி நிலை இரு முறை தோன்றி மறைந்துள்ளது. அதுகுறித்த புகைப்படங்களை ஆராய்ந்திருக்கும் விஞ்ஞானிகள் இந்த மூட்டம் சுமார் 1,000 கிலோமீற்றர் வரை தோன்றி இருப்பதாக கண்டறிந்துள்ளனர்.

இந்த மூட்டம் பாரிய மேகமாக அல்லது துருவ ஒளியாக இருக்கலாம் என்று சந்தேகிக்கின்றனர்.

## மிகப்பெரிய தொலைகாட்டி

சோலார் தொழில்நுட்பத்தில் இயங்கும் உலகின் மிகப்பெரிய டெலஸ்கோப் (வானியல் தொலைகாட்டி) ஹவாய் தீவில் நிர்மாணிக்கப்படவுள்ளது. Daniel K Inouye Solar Telescope (DKIST) எனப்படும் இத்தொலைகாட்டியை நிர்மாணிப்பதற்கு 344மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 2019ம் ஆண்டளவில் இதன் கட்டுமாணப்பணிகளை முடிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் 4.24 மீற்றர் அகலம் கொண்டதும் 75 மில்லி மீற்றர்கள் தடிப்புடையதுமான தளவாடி பயன்படுத்தப்படவுள்ளது.



இத்தொலைகாட்டியின் மூலம் 100 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் உள்ள ஒரு அங்குல விட்டம் கொண்ட சிறிய நாணயத்தினையும் துல்லியமாக கண்டறிய முடியும்.

## புதிய டேப்லெட்

Dell நிறுவனம் Venue 10 Pro எனும் புத்தம் புதிய டேப்லட்டினை எதிர்வரும் மார்ச் சமாதம் 3ம் திகதி அறிமுகம் செய்யவுள்ளது. இந்த டேப்லட் ஆனது விண்டோஸ் மற்றும் அன்ரோயிட் இயங்குதளங்களைக் கொண்ட பதிப்புக்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. 10 அங்குல அளவுடைய திரையினைக் கொண்டதாகக் காணப்படும்



## குறுக்கெழுத்து புதிர் 049

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 13 | | | | ■ | 2 அ | 14 | |
| | | ■ | ■ | ■ | 3 | | | |
| 4 | | | னை | ■ | ளை | 5 | | பு |
| 6 | ரா | 15 | ■ | 16 | | | | ■ |
| 7 | | | | | | 8 | 17 | 18 |
| 9 | | | | | ■ | ■ | | |
| | | 23 | | ஞ் | 20 | ■ | | 19 |
| | 11 | 10 | | 22 | | | 21 | |
| | ■ | ம் | ■ | ■ | | 12 | டு | |

### இடமிருந்து வலமாக

1. இஸ்லாமிய தீவிரவாதப் படையொன்று
2. உப்பில்லாமல் அவிக்கும் அரிசி
3. மாடு மேய்ப்பவன்
4. இதனை மனம் செய்தால் தீவினை அகன்றிடும் - குழம்பியுள்ளது
5. பெண்கள் கைகளில் அணிவது
6. நீதியின் அடையாளம்
7. அலுவலகம் ஒன்றின் உயர் அதிகாரி
8. குதிரைக்கு ஒத்த சொல்
9. பெரிய நிறுவனங்கள் தம்மை பிரபல்யப்படுத்தச் செய்வது - குழம்பியுள்ளது
10. கட்டபொம்மனின் தலைநகரம்
11. மேளத்துடன் இணைத்து வாசிக்கப்படுவது
12. நெருப்பில் கை வைத்தால்.............
22. கூடுதல் தவத்தினால் கிடைப்பது

### மேலிருந்து கீழாக

1. கலாநிதி ரஜனி திரணகமையினால் போர் தொடர்பாக எழுதப்பட்ட நூல்
2. முட்டையிட்டால் கோழிகள் இதைச் செய்யும்
3. இளவயதினர்
13. இந்தியப் பெண் அரசிகளில் மிகப் பிரபலமானவர்
14. ஆச்சரியத்திற்கு ஒத்த சொல்
15. அதிகாலையில் ஒலிக்கும் இறைவனின் இசை
16. அர்ச்சனை செய்தால் அரைப்பாதி தேங்காயுடன் கிடைக்கும் பிரசாதம் - கடைசிசொல் குழம்பியுள்ளது
17. [illegible]வின் தலைநகரம் - கடைசி எழுத்து குழம்பியுள்ளது
18. இறந்த பின் செல்வது
19. இது இல்லாவிட்டால் சாவில்லை
20. பசுக்கள் புல் மேயும் இடம் 21. குருவிகள் கட்டுவது
23. சிவனொளிபாதமலையில் சிவனது இது இருக்கிறது.

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :**

முடிவுத்திகதி : 26.02.2015

மலைமுரசு. இல - 159ஏ.
கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

## புதிர் 048 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | ரு | 17 ப் | பு | ■ | ■ | 2 ப | ட | 16 கு |
| ன | ■ | 3 நா | த | 18 ஸ் | வ | ர | ம் | றை |
| 4 ங் | 19 கு | 5 ச | ன் | டே | 20 லீ | ட | ர் | ■ |
| 6 கா | த | ம் | ■ | ர் | லை | ■ | 7 க | தை |
| ய் | ம் | பூ | 8 இ | லி | ங் | க | ம் | 21 த |
| 9 ச | ம | ர் | ■ | 10 ங் | 22 ப | ள | கா | ர் |
| ந் | ம் | 23 க | ■ | 11 ப | க | வா | ன் | பா |
| 12 நி | மி | ட | ம் | வு | 13 டை | னோ | ச | ர் |
| 14 தி | ல் | லை | 15 க | ண் | ண | ன் | ■ | ■ |

**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:**

செல்வி. வீ. சந்திரமதி,
திருகோணமலை

திருமதி. கௌசல்யா
டொக்யாட்வீதி, திருகோணமலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம் "அனேகன்"

இயக்குனர் கே.வி.ஆனந்த்

### தனுஷ், அமைரா நடிக்கும்



படத்தின் ஆரம்பத்திலேயே சென்னையில் ஐடி கம்பெனியில் வேலை பார்க்கும் ஹீரோயின் அமைராவிற்கு திடிரென்று முன் ஜென்ம ஞாபகம் வருகிறது. இதில் பர்மாவில் ஏழை இளைஞனாக தனுஷ் வருகிறார். அங்கு இருவருக்குமிடையே காதல் வளர, பின் அது கைக்கூடாமல் சோகத்தில் முடிகிறது. இதை தொடர்ந்து ஹீரோயின் வேலை பார்க்கும் அதே கம்பனியில் தனுஷ் வேலைக்கு சேர, அங்கு பாஸாக வருகிறார் நவரச நாயகன் கார்த்திக். இங்கு அமைரா சொல்லும் கதையை யாரும் நம்பாமல் இருக்க, மீண்டும் மற்றொரு கதை தொடங்குகிறது. இங்கு தான் தனுஷ் சென்னை இளைஞனாக கலக்கியுள்ளார். இந்த எபிசோட் தான் படத்தின் ஹைலட். ஆனால், வழக்கம் போல் இதிலும் காதல், பின் அது ஒன்று சேராமல் எதிர்ப்பாரத டுவிஸ்ட்வுடன் முடிகிறது இந்த கதை: தற்போது இந்த கதைகளையெல்லாம் நிகழ் காலத்தில் ஒட்டவைத்து அதிரடி கிளைமேக்ஸ"டன் முடிகிறது படம்.

நவரச நாயகன் கார்த்திக் சார் இத்தனை நாள் எங்கிருந்தீர்கள் என்று கேட்கும் அளவிற்கு அவர் வரும் காட்சிகள் அத்தனை எனர்ஜி. சுபா அவர்களின் வசனங்கள் படத்திற்கு மிகப்பெரிய பலம். தனுஷ் தன் யதார்த்த நடிப்பால் அனைவரையும் கவர்கிறார். கார்த்திக் நீண்ட இடைவேளைக்கு பிறகு கலக்கியுள்ளார். பாடல்கள் அதை படமாக்கிய விதம் ரசிக்க வைக்கிறது. திரைக்கதை கொஞ்சம் தடுமாறுகிறது. எல்லோருக்கும் இப்படம் புரியுமா? என்றால் சந்தேகம் தான். சில நீளமான காட்சியமைப்புகளை குறைத்திருக்கலாம்.

மொத்தத்தில் அனேகன் எளிதில் புரிந்து கொள்ள முடியாதவன், என்றாலும் ரசிக்க வைப்பவன்

## நயனுக்கு டும் டும் டும்



தோற்றது. இதனால் விரக்தியானார்.

நயன்தார இப்போது மீண்டும் சினிமா வில்
ா வு க் கு தீவிரமாக நடித்து வருகிறார். நயன்தாராவுக்கு
ஏற்கனவே வயதாவதால் திருமணத்தை விரைவில்
இ ர ண் டு முடிக்க பெற்றோர் விரும்பினர். அதற்கு
காதல்கள் நயன்தாராவும் சம்மதித்தார். தற்போது
தோல்வியில் பொருத்தமான மாப்பிள்ளையை பெற்றோர்
முடிந்தன. பார்த்து விட்டதாக கூறப்படுகிறது.
முதலாவதா திருமணத்தின் பின்னர்
க சிம்புவை நடிப்பாரா, மாப்பிள்ளை யார்
காதலித்தார். எனினும் சில நாட்களில் போன்றவற்றிற்கு இன்னும் அதிகார
அது முறிவடைந்தது. இதனால் சற்றும் பூர்வமான விடை ஏதம்
மனந்தளராத நயன் பிரபுதேவாவை கிடைக்கவில்லை. இருப்பினும் பல
விரும்பினார். இருவரும் திருமணத் ரசிகர்கள் இதனால் காயப்படுவர்
துக்கு தயாரான நிலையில் அதுவும் என்பது மட்டும் உண்மை.

## கொஞ்சம் டைம் தாங்க

விருது விழா ஒன்றில் கோச்சடையான் படம் சிறந்த 10 தமிழ் படங்களில் ஒன்றாக வந்துள்ளது. இதில் சௌந்தர்யா பேசுகையில் 'இப்படத்திற்கு ஆதரவு தந்த அனைவருக்கும் நன்றி. மேலும், படத்தின் காட்சியமைப்பு எந்த விதத்திலும் அவதார், டின் டின் படத்திற்கு நிகரானவை இல்லை என்பது எனக்கும் தெரியும். ஆனால், கொஞ்சம் டைம் கொடுங்க, அதே அளவு நல்ல மோஷன் கேப்சர் படத்தை தருகிறேன்' என்று கூறியுள்ளார்.



## தட்டிக்கேட்க யாருமில்லையா

பிரபல நடிகை ஹன்சிகா குளிப்பது போல் ஒரு வீடியோ தான் தற்போதைய வாட்ஸ் அப் வைரல். இதற்கு முன் பல நடிகைகளின் படங்கள், வீடியோக்கள் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.மேலும், இதில் இருப்பது ஹன்சிகா இல்லை மார்பிங் செய்யப்பட்டது என பலர் கூறி வருகின்றனர். ஆனால், எதுவாக இருந்தாலும் சரி இது போன்று வேலை செய்வோர்களை கண்டிப்பாக தண்டிக்கப்பட வேண்டும் என்பதே அனைவரின் கருத்து.



## எனக்கென யாருமில்லை

"ஆக்கோ" திரைப்படத்தின் ஒற்றை பாடல் காதலர் தினமான சனிக்கிழமை அன்று வெளியிடப்பட்டது. "எனக்கென யாரும் இல்லையே" எனத் தொடங்கும் இந்தப் பாடலை "அதாரு அதாரு" புகழ் விக்னேஷ் சிவன் எழுதியுள்ளார். தன் இசையால் இள நெஞ்சங்களை கவர்ந்த அனிருத் பாடியுள்ளார்.

இதுகுறித்து விக்னேஷ் சிவன் கூறும்போது, "காதலுக்காக காத்திருப்பவர்கள், காதல் இல்லாதவர்கள், காதலில் கசந்து போனவர்கள் என அனைவருக்கும் இப்பாடலை சமர்பணம் செய்கிறோம். அனைவரும் முணுமுணுக்கும் ஒரு பாடலாக இது இருக்கும்." எனக் கூறினார்.

## இயக்குனர் மீது புகார்



கடும் வெயிலிலும், குளிரிலும் தன்னை இயக்குனர் ராம்கோபால் வர்மா நடிக்க வைத்ததால் உடலில் கொப்புளங்கள் ஏற்பட்டு விட்டதாக அனைகா புகார் கூறியுள்ளார். இவர் தமிழில் வெளியான 'காவியத்தலைவன்' படத்தில் நடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 2013 ஆம் ஆண்டில் ராம்கோபால் வர்மா இயக்கத்தில் வெளிவந்த 'சத்யா 2' படத்தில் அறிமுகமானவர் அனைகா சோடி. இப்போது ராம்கோபால் வர்மா தற்போது இயக்கிவரும் படம் '365 டேஸ்'. இதில் அனைகா தான் ஹீரோயின் என்பது குறிப்பிடத்தக்கது.

## வருகிறது மசாலா

மிர்ச்சி சிவா, பாபி சிம்ஹா, புதுமுகம் கௌரவ் மற்றும் 'நில் கவனி செல்லாதே' நடித்த லக்ஷ்மி தேவி இணைந்து நடிக்கும் படம் தான் மசாலா படம். 'வெண்ணிலா கபடி குழு' படத்தை ஒளிப்பதிவு செய்த லக்ஷ்மன் குமார் இப்படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகம் ஆகிறார். இப்படம் முழுக்க முழுக்க நம் ஊரில் வரும் மசாலா படங்களை மையமாக கொண்டு நடத்தப்படும் விவாதம் மற்றும் தாக்கத்தையே கதையாக கொண்டிருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

## ஏம்மா என்ன பாவம் செய்தோம்?



காதலர் தினத்தை பலரும் ரொமான்ஸ"டன் கொண்டாடி தீர்த்தார்கள். ஆனால் அன்று அதிகாலையில் நடிகை ராய் லட்சுமி தனது டுவிட்டர் சமூக வலைத்தளத்தில் "ஓ மை காட்.. ஒரு வழியா நானும் என்னோட லவ்வரை இந்த காதலர் தினத்துல கண்டுபிடிச்சுட்டேன்" என டுவிட் செய்துள்ளார்.

அதனை பார்த்து அவருடைய ரசிகர்கள் பல அதிர்ச்சியடைய.. சில நொடிகளில் "ஹாஹாஹா.. நல்லா ஏமாந்தீங்களா..! கொஞ்ச நேரத்துல நிறைய பேரோட இதயத்தை உடைச்சிருப்பேனோ..? ஆனால் எப்படி என்னை நேசிக்கும் அன்பு உள்ளங்களாகிய உங்கள் இதயங்களை என்னால் உடைக்க முடியும்." என மற்றுமொரு கருத்தை டுவிட்டரில் பதிவு செய்து ரசிகர்களின் நெஞ்சில் பாலை வார்த்துள்ளார்.

## தல யைத் தொடரும் தளபதி

தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரங்கள் விஜய் மற்றும் அஜித். அஜித் தன் ஒவ்வொரு படத்தின் படப்பிடிப்பின் போதும் பிரியாணி செய்து பரிமாறி அவர்களை சந்தோசப்படுத்துவார். தற்போது இதே வழியை விஜய்யும் பின்பற்றுகிறார். கத்தி படத்தில் ஆரம்பித்து தற்போது புலி படத்தின் படப்பிடிப்பு தளத்தில் அனைவருக்கும் பிரியாணி விருந்து கொடுத்துள்ளார் தளபதி.

## இனியும் நடிப்பீங்களா?

மீண்டும் நடிப்பீர்களா ஜெனிலியா? என்று கேட்டதற்கு நல்ல கதாபாத்திரங்கள் வந்தால் கண்டிப்பாக நடிப்பேன். மேலும், என் கணவர் என்னை நன்றாக பார்த்து கொள்கிறார், அதனால் நடிக்கின்ற எண்ணம் எனக்கு வரவில்லை, அப்படியே நடித்தாலும் சொந்த தயாரிப்பில் தான் நடிப்பேன்' என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உல்லாசமும் மகிழ்ச்சியும்...

**வாழ்வியல் 41**



இப் பகுதியில் சுகமும், ஆனந்தமும் என்ற தலைப்பிலான ஒரு கட்டுரை முன்னரே எழுதப்பட்டது. சுகம் என்பது ஞானேந்திரியங்கள் மற்றும் கர்மேந்திரியங்களின் துணையுடன் கிடைக்கப்பெறுவன என்றும், ஆனந்தம் என்பது ஒரு உயர்ந்த நிலை என்றும் ஏறக்குறைய குறுக்கீடற்ற நிம்மதியையும் பரமானந்தத்தையும் ஆன்மா அனுபவிக்கும் நிலையே ஆனந்தம் என்றும் உரைக்கப்பட்டது.

இந் நாட்களில் இவையெல்லாம் பற்றி யார் கவலை கொண்டார்கள் என்று ஒரு சாரார் எண்ணுவதால் உல்லாசமும் மகிழ்ச்சியும் என்ற தலைப்பில் இக் கட்டுரை ஆராய்கின்றது.

மனித உணர்வுகளுக்கு தீனி போடுவதில் உல்லாசம் முதன்மையான இடத்தைப் பிடிக்கின்றது. பச்சிளம் குழந்தை ஒன்று தாயின் மடியில் படுத்தபடி அவளது முகத்தை பார்த்து சிரிப்பதும் கை, கால்களை போட்டு அடிப்பதுமாக உல்லாசம் அனுபவிக்கின்றது. அந்த உல்லாசத்தை தவிர அதற்கு மகிழ்ச்சி அளிப்பது வேறொன்றுமில்லை.

வளர்ந்து சிறுவனானதும் நண்பர்களுடன் இணைந்து ஓடியாடி விளையாடுவது, கண்டுபிடி கண்டுபிடி விளையாடுவது என்று அவனது உல்லாசம் வேறு திசையில் மாறுபடுகின்றது.

அவனே மாணவ பருவத்தை எய்தும் போது கொழும்பு, கண்டி, நுவரெலியா போன்ற இடங்களுக்கு சுற்றுலா செல்வதில் பெரும் உல்லாசத்தை காண்கின்றான். துடுப்பாட்டம், உதைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்கள் அவனுக்கு உல்லாசம் அளிக்கின்றன.

உல்லாசம் என்பது நாம் ஒரு காரியத்தில் ஈடுபடும்போது ஏற்படும் மன எழுச்சியாகும். அனேகமான குடும்ப பெண்கள் தொலைக்காட்சி 'சீரியல்கள்' பார்ப்பதில் உல்லாசம் பெறுகின்றார்கள். இளைஞர் சமுதாயம் 'பேஸ்புக்', 'டுவிட்டர்' ஆகியவற்றினூடாக நண்பர்கள் நண்பிகளுடன் 'சற்' (Chat) பண்ணுவதில் உல்லாசம் அடைகின்றார்கள். வயதுக்கு வந்த இளைஞர்கள் யுவதிகள் தமது மனம் கவர்ந்த துணைவரை தெரிவு செய்து கொண்டு கடற்கரை, 'சினிமா', 'ஹோட்டல்' என்று சுதந்திரமாக பறந்து திரிவதில் உல்லாசத்தை காண்கின்றார்கள். பெற்றோர்களின் சரியான கட்டுப்பாட்டுக்குள் இல்லாத பிள்ளைகள் போதைவஸ்து பாவனை மூலம் உல்லாசபுரியில் நடமாடுகின்றார்கள்.

பணம் மட்டும் இருந்து விட்டால் இந்த உலகில் உல்லாசத்தின் கதவுகள் அகலவே திறந்து கிடக்கின்றது. நீங்கள் விரும்பிய நாடுகளுக்கு விமானத்தில் பறக்கலாம். எமது நாட்டுக்கு வரும் உல்லாசப்பிரயாணிகள் பல 'மில்லியன் டொலர்களை' செலவு செய்கின்றார்கள். கடற்கரைகளில் அவர்கள் கூட்டம் கூட்டமாக சுற்றித்திரிவதும் 'சன்பாத்' எடுப்பதும் பெண்கள் 'சிகரெட்டும்' கையுமாக மது அருந்துவதும் எல்லாமே உல்லாசம்தான் !

உல்லாசம் என்பது எமது பசிக்கும் உணர்சிகளுக்கும் போடப்படும் தீனி மட்டுமல்ல. எமது துன்பங்கள் கவலைகளை மறக்கவும் அது கைகொடுக்கின்றது.

இனி மகிழ்ச்சி என்றால் என்ன? இது உல்லாசத்திலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்று பார்ப்போம்.

இளம் யுவதியொருவரின் பரத நாட்டிய நிகழ்ச்சி ஒன்றினை பார்க்கின்றோம். அதைப் பார்ப்பது உல்லாசமாக இருக்கின்றது. பார்த்து முடித்த பின்னர் ஓரிரு நாட்கள் கடந்த பின்னரும் அந் நிகழ்ச்சி எமக்கு நிறைவை தருகின்றது. அது தான் மகிழ்ச்சி.

இன்னமும் கூறப்போனால் எமக்கு யார் யார் மேல் அதிகம் பிரயமுள்ளதோ அவர்களை நினைக்கையில் மகிழ்ச்சி உண்டாகும். எமது தாய் எம்மை தாலாட்டி சீராட்டி வளர்த்ததை, எமக்கு நல்வழிகாட்டி கல்வி புகட்டி ஆளாக்கியதை, நோய்வாய்பட்டபோது அருகிலேயே இருந்து பராமரித்ததை, எண்ணும் ஒவ்வொரு தடவையும் எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகின்றது.

மனைவியானவள் எம் மீது சொரியும் அன்பு,

**(வி. என். சந்திரகாந்தி)**

எமக்காக அவள் செய்யும் சேவைகள், குடும்பம் பிள்ளைகள் என்று அவள் காட்டும் பரிவு, அவள் மேல் நாம் கோபம் கொண்டாலும் அவற்றை பொருட்படுத்தாமல் மன்னிக்கும் சுபாவம், இவையெல்லாம் எமக்கு மகிழ்ச்சியை தருவனவே.

எமது பிள்ளைகள் எமது சொற்கேட்டு நடப்பதும், படிப்பில் ஆர்வும் காட்டி முன்னேறுவதும், நல்ல தொழிலில் அமர்வதும், பெற்றோருடன் இணைந்து சிறந்த துணையை தேடிக்கொள்வதும், நினைக்க நினைக்க மகிழ்ச்சியூட்டுவன அல்லவா?

அவை மட்டுமன்றி எமது வாழ்க்கையில் பல சம்பவங்கள் நடந்தேறுகின்றன. விவாகம், பூப்புனித நீராட்டு விழா, பட்டமளிப்பு விழாக்கள் என்று அவை பலதரப்படும். அனைத்தையும் நாம் படம் பிடிக்கின்றோம். 'வீடியோ' செய்கின்றோம்.



எக்காலத்தில் அவற்றை பார்த்தாலும் மகிழ்ச்சி உண்டாகின்ற தல்லவா?

இனி அடுத்த கட்டத்திற்கு நகர்வோம். பல செல்வந்தர்களை ஏன் சினிமா நட்சத்திரங்களை எடுத்து நோக்குவோம். அவர்கள் ஆடம்பரமாகவும், உல்லாசமாகவும் வாழ்வது போன்றே எமது கண்களுக்கு தோன்றும். எமக்கும் அப்படிப்பட்ட வாழ்க்கை கிட்டாதா? என எமக்கு தோன்றும். ஆனால் உண்மையில் அவர்கள் ஏன் ஆடம்பரத்திலும் உல்லாசத்திலும் தம்மை அதிகளவு ஈடுபடுத்துகின்றார்கள் என்று பார்த்தால் நாம் திகைப்படைய வேண்டியதாகவே இருக்கும்.

குடும்ப சிக்கல்கள் பொருளாதார வீழ்ச்சி, மனத்தளர்ச்சி, மனைவி பிள்ளைகளின் தவறான நடத்தைகள் போன்ற பாதிப்புகள் பலரை உல்லாசத்தை நோக்கி செலுத்து கின்றது. இதனால் மதுப்பழக்கம், பிற பெண்கள் உடனான உறவு, போதைவஸ்து பாவனை போன்றவற்றுக்கு அவர்கள் ஆளாகின்றார்கள். தனிமை அவர்களை மேலும் வாட்டுகின்றது.

சிலர் விவாகம் உல்லாசத்திற்கு தடை என்றும் குழந்தைகள் பிறந்தால் விரும்பிய விரும்பியபடி நடக்க இயலாது என்றும் எண்ணி தமது இளமை பராயத்தை தவறான வழிகளில் வீணடித்து விடுகிறார்கள். முதுமையில் அவர்கள் மனத் தளர்ச்சிக்கு உள்ளாகுவதுடன் வாழ்க்கைக்கு மிக மிக அவசியமான மகிழ்ச்சியையும் நிம்மதியையும் இழக்கின்றார்கள்.

உண்மையில் உல்லாசம் உண்மையான மகிழ்ச்சியை தராது. அதுவும் தவறான வழியில் எவர் எவர் உல்லாசம் அனுபவிக்க முற்படுகின்றார்களோ அவர்கள் இந் நாட்களில் தண்டிக்கப்படும் சந்தர்ப்பங்களே அதிகமாக உள்ளன. மது, போதைப்பொருள், 'சிகரெட்', போன்றவற்றின் பாவனை நிமித்தமான நுரையீரல் புற்று, தவறான நடத்தை காரணமான 'எயிட்ஸ்' ஆகிய நோய்கள் இவர்களை இலகுவில் தாக்குகின்றன.

எமது வாழ்வை நாம் ஆயிரம் காலத்துப் பயிர் என்று கொள்ள வேண்டும். எவர் ஒருவர் மகிழ்ச்சியுடன் வாழ்கிறாரோ அவர் நீண்ட ஆயுளைக் கொண்டவராக இருக்கின்றார். எனவே உல்லாசம் உல்லாசம் என்று எம்மை நாம் அழித்து கொள்ளாமல் ஒழுக்க சீலர்களாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும். எமது மனம் தான் எமது வாழ்க்கையின் ஜீவன். அதனை நாம் மகிழ்ச்சி என்கின்ற பொக்கிஷத்தால் நிரப்ப வேண்டும்.

உண்மையான மகிழ்ச்சி எப்படி உண்டாகின்றது என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்தால் அது எமக்கும் பிறருக்கும் நன்மையை உண்டு பண்ணும். மகிழ்ச்சி என்பது பொது நலத்திலும், பிறருக்கு சேவை செய்வதிலும் பிறர் மேல் அன்பு செலுத்துவதிலுமே உண்டாகின்றது.

நாமும் அவ் வழியில் நடப்போமாயின் எம் வாழ்வு மகிழ்ச்சியில் பூத்துக் குலுங்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

# மனசாட்சியுடன் நட்பாயிருங்கள்!

**சாதாரணமானவனின் மனது**

கடந்து போன சில கனதியான நாட்களின் பின் மீண்டும் உயிர்திருக்கிறேன் இன்று. நேற்றைய இரவின் ஞானம் என்னை எனக்கு மீட்டத் தந்திருக்கிறது என்றால் அது மிகையில்லை. என்னை மீட்டுக்கொண்ட பரவசத்தில் இருந்து மீள முதலே அதை பகிர்ந்து கொள்வதற்காய் இந்தப் பதிவை எழுதத்தொடங்கியிருக்கிறேன். இது ஒருவித பரவசமான பதிவு.

சில நாட்களுக்கு முன் நண்பர்கள் சிலர் என்னை, எனது குறிப்பிட்டதோர் செயலுக்காய் மிகக் கடுமையாய் விமர்சித்தார்கள். மனம் கனத்தும், சிறுத்தும் போனது. வெட்கித் தலைகுனிந்திருந்தேன், மனச்சாட்சி விரோதியாகிப்போனது, அமைதியற்ற மனம் தறிகெட்டுப் பாய, தூக்கமற்று என்னை முழுவதுமாய் இழந்திருந்தேன்.

என் செயலால் பாதிக்கப்பட்டவர்களின் மனம் பெரும் சஞ்சலத்துக்கும் வேதனைக்கும் உள்ளானது. மனங்கள் காயப்பட்டும், உறவுகளில் விரிசலும் ஏற்பட்டன. நட்புகளை இழந்து அனாதரவானது போலணுர்ந்தேன். பாதுகாப்புணர்வினை இழந்துபோனேன். கொட்டப்பட்ட வார்த்தைகளை எப்படி அள்ளியெடுக்கமுடியாதோ அப்படிப்பட்ட நிலை அது. மற்றவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று நினைத்தோ, மற்றவர்களை காயப்படுத்தும் நோக்கத்துடனோ அல்லது மற்றவர்களை ஏமாற்றும் நோக்கத்துடனோ செய்யப்பட்ட செயல் அல்ல அது. அன்றைய நிலையில் அது தவறாய்ப் புரியவில்லை, ஆனாலும் இன்று அது தவறு என்று புரிந்திருக்கிறது.

நான் குற்றமற்றவன் என்று எப்போதும் கூறியதில்லை. தவறுகள் செய்யாது இருக்க நான் ஒன்றும் தெய்வப்பிறவியும் அல்ல, உணர்ச்சிகள் இன்றி வாழ நான் ஜடமுமல்ல. நானும் நன்மை தீமைகள், ஆசாபாசங்கள் கொண்ட சாதாரண மனிதனே.



சஞ்சயன் செல்வமாணிக்கம்

நன்மையும் தீமையும் இங்கும் உண்டு எங்கும் உண்டு. மற்றவருக்கு என்னாலும், எனக்கு மற்றவர்களாலும் துன்பம் ஏற்படாமல் வாழவே விரும்புகிறேன். என் மனட்சாட்சியுடன் பூசலின்றி வாழ்தல் முக்கியம் எனக்கு.

தற்போது அது சாத்தியமாயிருக்கிறது. என் தவறுகளை தவறு என்று ஏற்றுக்கொள்ளவும், தயக்கமின்றி மன்னிப்புக்கோரவும், அவற்றில் இருந்து பலதைக் கற்றுக்கொள்ளவும் என்னால் முடிகிறது.

கடந்து போன நாட்கள், கடந்து போனவையே. கடந்த நாட்களில் இழைத்த தவறுகளை திருத்திக்கொள்ள முடியாது என்பது புரியும் அதே வேளை அத் தவறுகளில் இருந்து வாழ்வினைக் கற்றல் இன்னும் சாத்தியமாய் இருக்கிறது, எனக்கு. கற்றலால் உயிர்க்கலாம் என்பதையும் அனுபவித்துணர்ந்திருக்கிறேன்.

என் தவறுகளை தவறு என்று அவற்றை ஏற்று, தவறுகளை மன்னிக்கமுடியுமா என்று [illegible] மனமானது

சுமந்துகொண்டிருந்த கனதிகளை இழந்து, என்னுள் புயலுக்குப் பின்னான தென்றலைப் போன்றதோர் பெரும் அமைதியையும், சுகத்தையும் தந்து போகிறது. இழந்து போன நிம்மதியும், சுய நம்பிக்கையும், சுயமும் முன்பைவிட பல மடங்கு அதிகமாக எனக்குள் ஊறிக்கொண்டிருப்பதை உணருகிறேன்.

சில நாட்களின் பின், மனச்சாட்சி என்னுடன் மீண்டும் நட்பாய் தோளில் கைபோட்டு தோழமையுடன் பேசுகிறது. முள்ளாய் குத்திய படுக்கையும், தொலைந்து போன சுகமான தூக்கமும், நிம்மதியற்று தறிகெட்டு ஓடிய சிந்தனைக் குதிரையும், கூனிக்குறுகி இருந்த மனமும் தந்த வேதனைகளைக் கடந்து, மனமானது, சீழ் வடிந்த ரணத்தின் ஆறுதலையும், சுகத்தையும் உணர்ந்திருக்கிறது.

முன்பைவிட என்னில் எனக்கு பலமான பாதுகாப்பான உணர்வும், நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளதுடன் அன்பான, தவறுகளை மறந்து மன்னிக்கும் மனிதர்களிலும், நண்பர்களிலும் பெரும் நம்பிக்கையும் எழுந்திருக்கிறது. மனித உறவுகள் பலப்பட்டிருக்கின்றன. இவ்வாறான நண்பர்களை பெற்ற நான் அதிஸ்டசாலியே.

தவறுகள் தவறாயிருப்பினும், தவறுகளினால் கிடைக்கும், ஞானத்தின் சுகத்தினை அனுபவித்துணரும் போது, என்னை நான் பல காலங்களின் பின் மீண்டும் காதலிக்கத் தொடங்கியிருக்கிறேன். மனம் காற்றில் சருகாயிருக்கிறது. நண்பர்களே! மனச்சாட்சியுடன் நட்பாயிருங்கள். அதுவே யாதுமாகிறது.

பல நாட்களின் பின் இன்றைய நாள் மிக மிக அழகாயிருக்கிறது.

**கற்பனை கலக்காத உண்மை சம்பவங்கள்!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு நடப்பு

# தேவை அறிந்ததால் கைமேல் பலன் கிடைத்தது

வட மாகாணத்தை சார்ந்த சூசைமுத்து வடமராட்சியில் பிறந்தாலும் அவரது தகப்பனாரின் தொழிலின் நிமித்தம் தெகிவளையில் நிரந்தர வதிவிடவாளராக வாழ நேரிட்டது. அவர் கத்தோலிக்கர் என்பதால் தலைநகரில் சிறப்பாக கல்வி கற்கக் கூடிய உயர்தர கல்லூரியில் மிக இலகுவாக சேர்ந்து கொண்டார்.

அனேகமானோர் கத்தோலிக்க கல்லூரிகளை தேர்ந்தெடுப்பதற்குக் காரணம் அங்கு ஒழுக்கத்திற்கு முதலிடம் வழங்கப்படுவது மாத்திரமல்ல ஆங்கில மொழியை இலகுவாக கற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பும் வசதியும் அங்கு அதிகம்.

அந்தக் காலத்தில் என்ன? இந்த காலத்தில் கூட கொழும்பு நகர்ப்புற உயர் கல்லூரிகளில் கற்பவர்கள் வாய்திறந்தால் தங்கள் தாய் மொழியை மறந்து ஆங்கிலத்திலே உரையாடுவார்கள். அதிலும் கத்தோலிக்க சமய கல்லூரிகள் ஆங்கிலத்திற்கு முதலிடம் வழங்கி வருகின்றன.

அக்காலத்தில் தமது சிறார்களின் ஒழுக்கம் ஆங்கில அறிவு என்பவற்றை கருத்தில் கொண்டு கத்தோலிக்க கல்லூரிகளில் தத்தமது பிள்ளைகளை சேர்ப்பதற்காக மதம் மாறிய பல பெற்றோர்களையும் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும்.

சூசைமுத்துவின் குடும்பத்தினருக்கு மதம் மாற வேண்டிய தேவை இருக்கவில்லை. அவர்கள் வடமராட்சி பகுதியிலே பெயர்போன கத்தோலிக்கர்கள். அயல் முழுவதும் சைவர்களால் அக்குடும்பம் சூழப்பட்டாலும், ஞாயிற்றுக் கிழமைகளிலும் மற்றும் விசேட நாட்களிலும் மாதா கோவிலுக்கு செல்வது உண்டு.

சூசைமுத்துவின் தகப்பனார் தெகிவளைப் பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்றில் கணக்காளராக பணியாற்றிய போது அங்கு ஒரு துணையை தேடிக்கொண்டார். அதனால் பிறப்பிடமான வடமராட்சியை முற்றாக கைவிட்டு தெகிவளையை நிரந்தர வசிப்பிடமாக்கிக் கொண்டார். அவர் அங்கு நிரந்தரவாசியாக மாறியது அவரது மகனான சூசைமுத்துவின் உயர்கல்விக்கு சிறப்பாக அமைந்தது. சூசை முத்து ஆங்கிலத்தில் உயர்கல்வியை பூர்த்தி செய்ததால் கொழும்பு ஜோன் கீல்ஸ் கம்பனியின் நிறைவேற்று அதிகாரிகள் தரத்தில் ஆளணி முகாமையாளர் பதவி அவருக்கு கிடைத்தது

சூசை முத்து குடும்பத்தில் ஒரே ஒரு பிள்ளை என்பதால் சிறு பராயம் தொட்டு மிக செல்லமாக வளர்க்கப்பட்டார். அவரால் பெற்றோருக்கு எந்தவித தொந்தரவுகளும் இருக்கவில்லை. ஆனால் திருமண விடயத்தில் அவர் தனது பெற்றோருடன் ஒத்துப் போகவில்லை. தரகர்கள் மூலம் கொண்டுவரப்படும் சகல வரன்களையும் அவர் தட்டிக் கழித்தே வந்தார். அவர் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கும் பொழுது யாரும் திருமண பேச்சு எடுத்தால் அவருக்கு கடும் கோபம் வந்துவிடும். சுமார் ஒரு மாத காலத்திற்கு பெற்றோருடன் முகங்கொடுத்து பேசமாட்டார். பின் அவரின் கோபம் தணிந்ததும் வழமைக்கு திரும்புவார்.

அவரின் அந்த வித்தியாசமான போக்கு தொடர்பில் பெற்றோர் அதிருப்தி அடைந்திருந்தனர். திருமறை விடயம் தொடர்பாகவும், அவரின் எதிர்காலம் தொடர்பாகவும் பல விடயங்களை அவருக்கு புரியவைக்க பலர் முயற்சித்தாலும் அது பயனளிக்கவே இல்லை. சூசைமுத்துவின் அந்த கடுமையான போக்கு பெற்றோருக்கு கவலை அளித்தது. 35 வயதை தாண்டிய அவருக்கு யார் பெண் கொடுக்க முன்வரப் போகிறார்கள் என்ற ஏக்கம் நாளுக்கு நாள் அந்த வயோதிப பெற்றோர் மத்தியில் அதிகரித்துக் கொண்டே வந்தது. இறைவன் சகலவற்றையும் அந்தக் குடும்பத்திற்கு அள்ளி வழங்கியும், இவ்வதமான ஒரு குறையை ஏற்படுத்தி வைத்தமை உண்மையில் கவலையடைய செய்யும் ஒரு விடயமாகவே இருந்து வந்தது.

தங்கள் குடும்பத்தில் ஒரு பேரக் குழந்தையை முத்தமிட முடியாத கவலை பெற்றோருக்கு இருந்து வந்தது. ஓரிரு வருடங்களின் பின் மகனின் கவலையிலேயே பெற்றோர் இறைவனடி சேர்ந்தனர்.

சூசைமுத்து தனித்துவிட்டதை அறிந்த அவரின் நண்பர்கள் சிலர் ஜோன் கீல்ஸ் கம்பனியில் பணிபுரியும் கிறேஸ் என்பவரை எப்படியோ சூசைமுத்துவுக்கு திருமணம் செய்து வைத்தனர். கிறேஸ் கூட சூசைமுத்துவின் தரத்திலே கடமை புரிந்து வந்தார் அவரும் கூட திருமணத்தில் விருப்பமில்லாது இருந்து வந்த ஒருவர். ஒருவாறு இருவரும் திருமண பந்தத்தில் இணைந்தனர். கைநிறைய சம்பளம், கௌரவமான உத்தியோகம், சிக்கலற்ற வாழ்க்கை இருந்தால் யார் தான் திருமணத்தைப் பற்றி யோசிப்பார்கள்.

திருமணமாகி மூன்று வருடங்கள் முற்றுப் பெற்றும் சூசை முத்து தம்பதிகளுக்கு குழந்தைப் பாக்கியம் இருக்கவில்லை. அவர்களைப் பரீட்சித்த வைத்தியர்கள் கூட அவ்விடயத்தில் அவர்களை கைவிட்டனர். மேலும் அத் தம்பதிகள் உரிய வயதில் திருமணம் புரியாததே குழந்தைச் செல்வத்திற்கு தடை என தங்கள் சொந்தக் கருத்துக்களை முண்டியடித்துக் கொண்டு சிலர் முன்வைத்தனர். இவ்வளவு காலமும் திருமணம், தன் எதிர்காலம் என்பவற்றைப் பற்றி சிந்தித்திருக்காத இருவரும், தங்களுக்கு குழந்தைச் செல்வம் இல்லையே என எண்ணி கவலை கொண்டனர்.

இதனால் வீட்டில் ஒரே ரகளை. அது மாத்திரமன்றி தன் கவலையைப் போக்க அவர் மதுவுக்கு அடிமையானார். சுமூகமாக போய்க்கொண்டிருந்த அவர்களின் வாழ்க்கையில் தற்போது நிம்மதி என்பது இல்லாமல் போனது. அவர் மனைவியின் சகோதரி கோமளா கூட தனது காதலன் தன்னை கைவிட்டு சென்று விட்டான் என பெரும் கலையுடன் அங்கு காலத்தை கழித்து வந்தாள். கோமளாவின் காதலன் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா சென்றிருந்தான். அவனைப்பற்றி எதுவித தகவலும் கிடைக்கவில்லை. இப்படியே அக்குடும்பத்தில் அடுக்கடுக்காக பிரச்சினைகள் தோன்றிக் கொண்டிருந்தன.

அங்கு எழும் அனைத்து பிரச்சினைகளையும் சமாளித்து வந்தாலும் சூசைமுத்துவினால் வரும் பிரச்சினைகளை கிறேஸினால் சமாளிக்க முடியவில்லை. ஒருநாள் சூசைமுத்து குடிபோதையில் கோமளாவிடம் தகாத முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததை கிறேஸ் கண்ணுற்றாள். இனி சொல்லவா வேணும்?

உன்னால் குழந்தை பெற்றுத் தரமுடியாது. ஆகவே கோமளாவால் தான் எனக்கு குழந்தை பெற்றுத் தரமுடியும் என அவர் தன் மனைவியுடன் வாதாடினார். இறுதியில் தனக்கு கோமளாவின் சம்மதத்தைப் பெற்றுத் தருமாறும் இல்லையேல் நடப்பதே வேறு எனவும் சத்தமிட்டார். இதனைக் கேட்ட மனைவி அதிர்ந்து போனாள். எப்படியோ குடும்ப மானத்தை காப்பாற்றியே தீரவேண்டும் என அவள் முடிவெடுத்தாள். கணவரின் ஆசையை நிறைவேற்றாவிட்டால் ஏதேனும் விபரீதத்தில் முடிவடைந்து விடுமோ என அஞ்சினாள். இதற்கான ஓர் உபாயத்தைக் கண்டறிய வேண்டும் என யோசிக்கலானாள்.

உடனடியாக தனது தங்கைக்கு வரன் பார்க்கத் தொடங்கினாள். இவளது நல்ல நேரம் சூசைமுத்து வேலை விடயமாக ஒரு மாதம் வெளியூர் சென்றிருந்தார். அச்சமயம் பார்த்து நல்ல ஒரு வரன் கிடைக்கவும் தங்கையை



சமாதானப்படுத்தி அவளுக்கு திருமணம் முடித்துக் கொடுத்தாள். பின் தனது பிரச்சினைக்கான தீர்வை யோசிக்கலானாள்.

இறுதியில் ஓர் நல்ல முடிவுக்கு வந்தாள். வாடகைத் தாய் மூலமாக குழந்தை பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடை செய்யத் தொடங்கினாள். தன் கணவர் வீடு திரும்பியதும், தனக்கு செயற்கையாக ஊசி மூலம் பிள்ளையை பிரசவிக்கும் வாய்ப்பு உள்ளதாக வைத்தியர் கூறியதாக சொல்லி அவரை வைத்தியசாலைக்கு கூட்டிச் சென்று தனக்கும் ட்ரீட்மென்ட் போல் ஏற்பாடு செய்து கொண்டாள். பின்னர் வாடகைத் தாய் மூலமாக குழந்தை வளரும் போது தானும் தன் வயிறு பெரிதாவதைப் போல் பாவனை செய்து பெரிதும் கஷ்டப்பட்டாள். சரியாக வாடகைத் தாய்க்கு பிரசவ திகதி நேரம் தானும் சென்று வைத்தியசாலையில் அட்மிட் ஆகிக் கொண்டாள். குழந்தையும் பிறந்தது. தனக்கே குழந்தை பிறந்தது போல் நாடகம் ஆடினாள் கிறேஸ். இதற்கெல்லாம் பெரிதும் உதவியது அவளுடன் வேலை செய்த சக ஊழியர்களே ஆகும்.

தன் கணவருக்கு குழந்தை மீதிருந்த விருப்பத்தின் காரணமாகவே அவர் தப்பான வழிக்குச் செல்லத் துணிந்தார் என்பதைப் புரிந்து கொண்ட அவள் தன் கணவரையும் நோகடிக்காமல், தனக்கும் குழந்தையை ஏற்பாடு செய்து கொண்டு, தன் தங்கைக்கும் நல்லதொரு வாழ்க்கைக்கு ஏற்பாடு செய்திருந்தாள்.

**- பாலையூற்றான் -**

---

# இப்படியும் நடக்கலாம்

## கண்டுபிடிப்பு 54இன் பின்னர்

54 ஆண்டுகளுக்கு முன்னர் கால்பந்து வீரர்களுடன் மாயமான விமானம் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தற்போது சான்டியகோவில் இருந்து 300 கி.மீ. தொலைவில் உள்ள மௌலே பகுதியில் அக்காணாமல் போன அந்த விமானத்தின் பாகங்களை மலையேறும் வீரர்கள் கண்டுபிடித்துள்ளனர். விமானத்தின் பாகங்களுடன் அப்பகுதியில் ஏராளமான மனித எலும்புகளும் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## மகனை கருணை கொலை செய்த தாய்

துருக்கியில் வசிக்கும் நுரே சகான் என்ற பெண்மணி தன் மகனுக்கு (வயது 10) காதுகள் பெரிதாய் இருப்பதால் மிகுந்த கவலையடைந்து, மகனை மருத்துவர்களிடம் அழைத்து சென்று அவர்களின் ஆலோசனை படி அறுவை சிகிச்சை செய்துள்ளார். ஆனால் காதுகள் இன்னும் பெரிதானதை போல் தோற்றமளித்ததால் மனம் நொந்த அவர், கழிவறைக்குள் தன் மகனை அழைத்து சென்று கழுத்தை நெரித்து கொன்றுவிட்டு, அங்கிருந்து காரில் விரைவாக தப்பி ஓடியுள்ளார். ராட்சத காதுகளால் என் மகன் மிகவும் அசிங்கமான தோற்றத்தை கொண்டிருந்தான் என்றும் வருங்காலத்தில் அனைவரும் அவனை கேலி செய்தால் சங்கடப்படுவான் என்பதற்காகவே நான் கருணைக் கொலை செய்தேன் எனவும் காவல்துறையினரிடம் பிடிபட்ட அத்தாய் தெரிவித்துள்ளார்.



## அதிக வயதான இரட்டையர்

பிரித்தானியாவில் 103 வருடங்களாக வாழ்ந்து வரும் கடந்த 1912ம் ஆண்டில் பிளோரன்ஸ் டேவிஸ் மற்றும் கிளெனிஸ் தாமஸ் என்ற இரட்டை பெண் குழந்தைகள் தற்போது 100 வயதை தாண்டியுள்ள இவர்கள், இன்று வரை ஒரே கிராமத்தில் ஒன்றாக வசித்து வருகின்றனர். மேலும் உலகின் வயதான இரட்டையர்களான இவர்களுக்கு தற்போது 5 குழந்தைகளும், 12 பேரக்குழந்தைகளும், 21 கொள்ளுப்பேரன்களும் உள்ளனர். இந்நிலையில் தொலைக்காட்சி ஒன்றிற்கு இந்த சகோதரிகள் அளித்த பேட்டியில், நாங்கள் எங்களின் பிறந்த தினம் முதல் ஒருவரை ஒருவர் பிரிந்ததில்லை.

- உலகில் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வரும் கத்தார் ஏர்வேஸ் நிறுவனத்தின் பணிப்பெண் வேலைக்கான விதிமுறைகளில் கூறியிருப்பதாவது, திருமணம் செய்தவராக இருக்கக்கூடாது. வேலையில் சேர்ந்த பின் 5 வருடங்களுக்கு தனி நபராகவே இருக்கவேண்டும், திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்றால் நிறுவனத்தின் அனுமதியை பெறவேண்டும். கர்ப்பம் அடைவது ஒப்பந்தத்தை மீறிய செயலாகும், அப்படி மீறினால் நடவடிக்கைக்கு உள்ளாவார்கள் என்பன போன்ற விதிமுறைகள் உள்ளன. இருப்பினும் நிறுவனம் இக்குற்றச்சாட்டை மறுத்துள்ளது.
- கீழ் வானத்தில் ஏற்பட்ட ஒளியின் மாயை காரணமாக மேற்கு நகரான செலியாபிஸ்கிலில் இருக்கும் மக்கள் ஒரே நேரத்தில் மூன்று சூரியோதயங்களை பார்வையிட்டுள்ளனர். வானில் ஏற்பட்ட பனிக்கட்டி படிகங்கள் உருவாக்கும் ஒளி வட்டத்தில் சூரிய ஒளி பட்டுத் தெரித்த நிலையிலேயே இவ்வாறு காட்சி அளித்திருப்பதாக உள்ளூர் வானியல் ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார்.



- கனடாவில் பொலிஸ் அதிகாரி ஒருவரை இரு இளம்பெண்கள் சரமாரியாக தாக்கிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அலசல்

# எப்படி வென்றது இலங்கை அரசு

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த ஐந்து வாரங்களிலேயே சர்வதேச அரங்கில் முக்கியமான இராஜதந்திர வெற்றிகளில் ஒன்றை ஈட்டியுள்ளதாக அரசாங்கத்தில் உள்ளவர்கள், வரும் நாட்களில் தீவிரமான பிரசாரத்தில் ஈடுபடக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், அடுத்த மாதம் 25ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவிருந்த அறிக்கையை பிற்போடச் செய்வதில் இலங்கை அரசாங்கம் ஈட்டியுள்ள வெற்றியே அது. சர்வதேச சமூகத்துடன் முரண்பாடுகளை வளர்த்து, இராஜதந்திர ரீதியான நெருக்கடிகளுக்குள் சிக்கவைத்து, நாட்டை தனிமைப்படுத்தி விட்டதொரு சூழலிலேயே முன்னைய மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஆட்சியை விட்டு விலகிச்சென்றிருந்தது. புதிய அரசாங்கம் பதவியேற்றதும், அதற்கு உள்நாட்டிலிருந்த பிரச்சினைகள் எல்லாவற்றையும் விட, மிக முக்கியமானதொரு பிரச்சினை தலைக்கு மேல் கத்தியாக தொடங்கிக்கொண்டிருந்தது. கடந்த 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தினால் நடத்தப்பட்ட விசாரண்ணயின் அறிக்கையே அந்தக் கத்தி. இந்த விசாரணை அறிக்கை அடுத்த மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 28ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெளிவாக கூறப்பட்டிருந்தது. அறிக்கையை திட்டமிட்ட காலப்பகுதிக்குள் பேரவையில் சமர்ப்பிப்பதற்கான எல்லா நடவடிக்கைகளையும் ஐ.நா. விசாரணைக் குழு மேற்கொண்டிருந்த நிலையிலேயே இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருந்தது. ஆட்சி மாற்றம், இலங்கையினது உள்நாட்டுச் சூழலை மட்டுமன்றி, இலங்கை குறித்த சர்வதேசப் பார்வையையும் மாற்றிவிட்டுள்ளது. புதிதாக பதவியேற்ற அரசாங்கம், சர்வதேச சமூகத்துடன் முரண்படாத, அதனுடன் இணைந்து செயற்படும் அணுகுமுறையை கடைப்பிடிக்கத் தயாராக இருந்த நிலையில், ஐ.நா. விசாரணைக்குழுவின் அறிக்கை அதற்கு முக்கியமானதொரு சவாலாக இருந்தது. இதனாலேயே, வெளிவிவகார அமைச்சராக பதவியேற்ற நாளிலிருந்து அமைச்சர் மங்கள சமரவீர சர்வதேச ஆதரவை திரட்டும் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். அவர் புதுடெல்லி, இலண்டன், வொஷிங்டன், நியூயோர்க் என்று தொடர் பறப்புகளை மேற்கொண்டே, இந்த அறிக்கையை பிற்போடுவதற்கு சாதகமான முடிவை பெற்றிருக்கிறார். இது புதிய அரசாங்கத்துக்கான சவால் மிக்க விடயமாக இருந்தாலும், முன்னரே எதிர்பார்க்கப்பட்டதொன்று என்பதும் இந்த விடயத்தில் முன்னைய அரசாங்கம் எதிர்கொண்டளவுக்கு நெருக்கடிகளை எதிர்கொள்ளவில்லை என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்.

ஜெனீவாவில், கடந்த பல ஆண்டுகளுக்கு பின்னர் இலங்கை அரசாங்கத்துக்கு இராஜதந்திர ரீதியானதொரு வெற்றி கிடைத்திருக்கிறது. 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட அடுத்த வாரமே ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அவசரக்கூட்டம் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்தில், சுவீடன் உள்ளிட்ட நாடுகளினால் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மீறல்களை கண்டித்தும் அது பற்றி விசாரணை செய்யுமாறு கோரியும் தீர்மானமொன்று முன்வைக்கப்பட்டது. அந்த தீர்மானத்தை இலங்கை தனது இராஜதந்திர நகர்வுகளின் மூலம் தோற்கடித்தது. அது மட்டுமன்றி, போரில் வெற்றியை பெற்ற இலங்கையை பாராட்டும் தீர்மானமொன்றும் அதில் நிறைவேற்றப்பட்டது. அதற்கு பின்னர், ஜெனீவா என்பது இலங்கை அரசாங்கத்துக்கு சோதனை மிக்கதொரு களமாக இருந்துவந்தது. ஒவ்வொரு முறையும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வு ஆரம்பிக்கப்படும்போதும் பல்வேறு தயார்ப்படுத்தல்களுடன் அமைச்சர்களையும் அதிகாரிகளையும் ஜெனீவாவுக்கு அனுப்பவேண்டிய நிலை அரசாங்கத்துக்கு இருந்தது. ஜெனீவா விடயத்தில் முன்னைய அரசாங்கம் மிகக் கடுமையான அழுத்தங்களை எதிர்கொண்டது.

ஒவ்வொரு ஆறு மாதங்களும் ஜெனீவாவில் பதிலளிக்கவேண்டிய நிலையில் இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் முக்கிய அமைச்சர்களும் பல சந்தர்ப்பங்களில் வெறுப்புடன் கூறியிருக்கின்றனர். அந்தளவுக்கு முன்னைய அரசாங்கத்துக்கு ஒரு கெட்ட சொப்பனமாக ஜெனீவா கூட்டத்தொடர்கள் அமைந்திருந்தன. இம்முறை ஜெனீவா கூட்டத்தொடரும் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியது என்பதால், முன்னெப்போதும் இல்லாதளவுக்கு நெருக்கடி மிக்கதாகவே இருந்தாலும், புதிய அரசாங்கத்துக்கு அதை எதிர்கொள்வது ஒன்றும் அவ்வளவு சவாலான விடயமாக இருக்கவில்லை. அதற்கு காரணம், மேற்குலகுக்கு சாதகமாக அமைந்த புதிய அரசாங்கம் தான் என்பதில் சந்தேகமில்லை. புதிய அரசாங்கம் இலங்கையில் அமைந்தவுடனேயே, அமெரிக்கா தலைமையிலான மேற்குலகின் அணுகுமுறைகள், கண்ணோட்டங்களில் பாரிய வேறுபாடுகளை உணரமுடிகிறது. மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கொடுத்த தலைவலி மேற்குலகை பெரிதும் பொறுமை இழக்க வைத்துவிட்டது. அதனால், தமக்கு சாதகமான புதிய அரசாங்கத்தை காப்பாற்றுவது தமது கடப்பாடு என்றளவுக்கு மேற்குலக கரிசனையும் நிலைப்பாடும் மாறியிருக்கின்றன. இது இலங்கையின் புதிய அரசாங்கத்துக்கு கிடைத்திருக்கும் அரிய வாய்ப்பு என்றே கூறலாம்.

அதுதான், ஜெனீவா களத்தை எதிர்கொள்வதற்கு முன்னரே, ஒரு காலஓய்வை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை இலங்கைக்கு ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறது. மங்கள சமரவீர வெளிவிவகார அமைச்சராக பதவியேற்றதும், வெளிநாடுகளுக்கு பறந்துதிரிந்து இந்த அறிக்கையை பிற்போட செய்தார் என்று கூறமுடியாது. இந்த விடயத்தில், இலங்கை அரசாங்கம் எந்தக் கோரிக்கையையும் விடுக்காமல் இருந்தால் கூட, அறிக்கை பிற்போடப்பட்டே இருக்கும். ஏனென்றால், இது இலங்கையின் கோரிக்கையை ஏற்று எடுக்கப்பட்ட முடிவு அல்ல. இலங்கையின் கோரிக்கை வெறும் சம்பிரதாய பூர்வமானதாகவே இருந்தது. புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், கடந்த மாத இறுதியில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு, மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் நிஷா பிஸ்வால் இலங்கைக்கு வந்திருந்தார். விசாரணை அறிக்கையை பிற்போடும் செய்தியுடன் அவர் கொழும்பு வந்திருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை சந்தித்தபோது, அவர் ஐ.நா. விசாரணை அறிக்கையை வெளியிடுவதற்கு இது பொருத்தமான தருணமல்ல என்று வெளிப்படையாக கூறியிருந்தார். கடந்த 10ஆம் திகதி வடக்கு மாகாணசபையில் இனப்படுகொலை தீர்மானத்தை கொண்டுவந்து உரையாற்றிய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், இந்த தகவலை வெளியிட்டிருந்தார். இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடனேயே, இந்த விசாரணை அறிக்கையை மார்ச் மாத அமர்வில் வெளியிடுவது பொருத்தமல்ல என்ற முடிவை அமெரிக்கா எடுத்துவிட்டது. அங்கிருந்து இந்த அறிக்கையை பிற்போடச் செய்யும் நகர்வு ஆரம்பிக்கப்பட்டதே தவிர, கொழும்பிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், அமெரிக்கா வெளிப்படையாக எதையும் கூறவில்லை. தனக்கும் இதற்கும் எந்த தொடர்பும் இல்லை, பிற்போடும் முடிவு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடமே உள்ளது என்று கூறிக்கொண்டது. நிஷா பிஸ்வாலின் கொழும்பு பயணத்தை அடுத்து இலண்டன் சென்ற வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அறிக்கையை பிற்போட செய்வதற்கு பிரித்தானியாவின் ஆதரவை கோரத் திட்டமிட்டிருந்தார். ஆனாலும், அவரால் அங்கு பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனையோ, வெளிவிவகார அமைச்சரையோ சந்திக்க முடியவில்லை. ஒரு வாரத்துக்கு முன்னர் கொழும்பு வந்திருந்தபோது, பேச்சுக்களை நடத்திய வெளிவிவகார பணியக மற்றும் கொமன்வெல்த் விவகார இராஜாங்க அமைச்சர் ஹியூகோ ஸ்வயரை மங்கள சமரவீர மீண்டும் சந்தித்தார். சர்வதேச விசாரணை விடயத்தில் உறுதியான போக்கை கொண்டிருந்த பிரித்தானிய அறிக்கையை ஒத்திப்போடும் விடயத்தில் அவ்வளவாக உடன்பாடு கொண்டிருக்கவில்லை.

இன்னும் மூன்று மாதங்களுக்குள் தேர்தலை எதிர்கொள்ளவேண்டிய நிலையில், புலம்பெயர் தமிழர்களின் எதிர்ப்பை சந்திக்க நேரிடும் என்ற கவலையும் பிரித்தானிய அரசாங்கத்துக்கு இருக்கிறது. மங்கள சமரவீரவின் பிரித்தானியப் பயணம் கைகொடுக்காத நிலையில், அமெரிக்காவுக்கு சென்றிருந்தார் அவர். அமெரிக்காவில் அவருக்கு உற்சாகமூட்டும் வகையில் சந்திப்புகள் அமைந்திருந்தன. அமெரிக்க இராஜாங்க செயலர் ஜோன் கெரி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ் உள்ளிட்டோரை வொஷிங்டனில் சந்தித்துப் பேசியிருந்தார் மங்கள சமரவீர. இதன்போதே, ஐ.நா. விசாரணை அறிக்கையை ஒத்திவைப்பதற்கான பூர்வாங்க நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அது குறித்து ஜோன் கெரியுடனான சந்திப்பில் விவாதிக்கப்பட்டது என்பதை மங்கள சமரவீர ஒப்புக்கொண்டிருந்தார். விசாரணை அறிக்கை பிற்போடப்படும் என்று தாம் உறுதியாக நம்புவதாக வொஷிங்டனில் பிரஸ் கிளப்பில் உரையாற்றியபோது அவர் தெரிவித்திருந்தார்.

அதேவேளை, அதற்கான உத்தரவாதத்தை அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி தரவில்லை என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். இந்த விவகாரம் குறித்து, அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் ஜென் பசாகியிடம் கேள்வி எழுப்பப்பட்டபோது, அறிக்கையை பிற்போடும் தீர்மானத்தை எடுக்கவேண்டியது ஐ.நா. மனித உரிமை ஆணையாளரே என்று பதிலளித்திருந்தார். அதாவது அமெரிக்கா இந்த விடயத்தில் எதுவுமே தெரியாத மாதிரி இருக்கப்பார்த்தது. இதற்கிடையே, கடந்த 13ஆம் திகதி நியூயோர்க் சென்ற மங்கள சமரவீர, ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூனையும் ஐ.நா. வுக்கான அமெரிக்க தூதுவர் சமந்தா பவரையும் சந்தித்திருந்தார். ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூனை மங்கள சமரவீர சந்திக்க முன்னரே, ஐ.நா. வின் துணைப் பொதுச்செயலரான ஒஸ்கார் பெர்னான்டஸ் தரங்கோவைச் சந்தித்துப் பேசியிருந்தார் அமெரிக்க உதவி இராஜாங்க செயலர் நிஷா பிஸ்வால். இந்த சந்திப்பு பங்களாதேஷ் விவகாரம் குறித்து பேசுவதற்கானது என்று குறிப்பிட்டிருந்தாலும், இலங்கை விவகாரம் குறித்தும் பேசப்பட்டது.

அப்போது, ஐ.நா. அறிக்கை ஒத்திவைக்கப்பட வேண்டுமென்ற அமெரிக்க நிலைப்பாடு அவரிடம் எடுத்துக்கூறப்பட்டதாகத் தகவல். நிஷா பிஸ்வாலை சந்தித்த துணை பொதுச்செயலர் ஒஸ்கார் பெர்னான்டஸ் தரங்கோ, மறுநாள் ஐ.நா. பொதுச்செயலருடன் இணைந்து மங்கள சமரவீரவை சந்தித்தார். அப்போது, அறிக்கையை பிற்போடுமாறு கோரியிருந்தார் மங்கள சமரவீர.

ஆனால், அது தனது கையில் இல்லை என்றும் அது ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் வேலை என்றும் அவர் கூறிவிட்டாக தகவல் வெளியானது. முன்னதாக, இந்த விவகாரம் ஐ.நா. - அமெரிக்கா இடையில் உள்ளக ரீதியாக கலந்துரையாடப்பட்டது. நியூயோர்க் சென்றிருந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேன் இது குறித்து அமெரிக்க அதிகாரிகளுடனும் ஐ.நா. பொதுச் செயலருடனும் ஆலோசனை நடத்தியிருந்தார். மேலும், மங்கள சமரவீரவை சந்தித்த பின்னர், தனது டுவிட்டரில் எழுதியிருந்த சமந்தா பவர் தேர்தலுக்கு பின்னர் இலங்கையின் நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டிருந்தார். ஆட்சி மாற்றத்தின் பின்னர், இலங்கை குறித்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தொடக்கம் ஜோன் கெரி, சூசன் ரைஸ், நிஷா பிஸ்வால், சமந்தா பவர், ஜென் பசாகி, கீத் ஹாப்பர் உள்ளிட்டவர்கள் வெளியிட்ட கருத்துகள் அனைத்துமே இலங்கை அரசுக்கு சாதகமாக அமைந்திருந்தன.

இத்தகைய பின்னணியிலேயே அடுத்த என்ன என்ற தீர்மானிக்கும் களம் ஜெனீவாவுக்கு மாறியது. ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் உள்ளக கலந்தாலோசனைகளின் முடிவில் அறிக்கையை ஒத்திவைக்க கோரினார். அதற்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையும் ஒப்புதல் அளித்தது. ஆனாலும், இந்த அறிக்கையை ஒத்திவைப்பது ஐ.நா. மட்டத்தில் அவ்வளவாக உடன்பாடு இருக்கவில்லை என்று தெரிகிறது. தாம் நியாயமற்ற ஒரு காரியத்தை செய்கிறோம் என்பதை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் உணர்ந்திருக்கிறார். அவர் இந்த முடிவுக்கான காரணங்களை விபரித்து அளித்திருந்த விளக்கத்தில் அதனை உணரமுடிகிறது. ஒரேயொரு தடவை மாத்திரம் ஒத்திவைப்பதாகவும் இது பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏமாற்றம் அளிக்குமொன்றாக இருக்கும் என்பதை தான் அறிவேன் என்றும் அவர் கூறியிருக்கிறார். அமெரிக்காவின் கோரிக்கைகளுக்காக அறிக்கை வெளியிடுவதை பிற்போட்டுள்ளோம் என்று அவரால் காரணம் கூறமுடியாது. அதனாலேயே, இன்னமும் வலுவான அறிக்கையை தயாரிக்க வாய்ப்பு கிடைக்கலாம் என்று அவர் ஒரு நியாயத்தை முன்வைத்திருக்கிறார்.

அது எந்தளவுக்கு உண்மையானது என்பதை பொறுத்திருந்து பார்க்கவேண்டும். இது இலங்கைக்கு ஒரு தற்காலிக வெற்றியே தவிர, நிரந்தரமானது அல்ல. ஆனாலும், இதனை நிரந்தரமான வெற்றியாக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்காமல் விடாது. அதற்கு அமெரிக்கா திறந்துள்ள புதிய கதவுகளின் மூலம் இலங்கை அரசாங்கம் முயற்சிக்கலாம்.

அது வெற்றி அளிக்குமேயானால், பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீதியை எதிர்பார்க்கின்றவர்களுக்கும் பெருத்த அடியாக இருக்கும்.



-- கே.சஞ்சயன்- -www.tamilmirror.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

*01. மாணவரொருவனின் கல்விக்கு மாதாந்தம் ரூ800 தேவை*


அ. கல்விக்கான மாதாந்த தொகையை பெறுதற்கு எவ்வளவு பணத்தை ஆண்டுக்கு 15வீதம் என்ற எளிய வட்டிக்கு கொடுத்தல் வேண்டும்?

ஆ. மேலே வட்டிக்கு கொடுத்த பணத்தை 20வீதம் பங்குலாபம் வழங்கும் கம்பனியின் ரூ10 பங்குகளை ரூ16 படி வாங்குவதற்கு முதலிட்டால் மாணவனின் மாதாந்த கல்விச் செலவை பங்குலாபத்தினூடு செலுத்த முடியுமா? காரணம் தருக.

02. நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கு தோற்றிய பரீட்சார்த்திகளில் 5/8 பங்கினர் சித்தியடைந்தனர். அவர்களில் 72 பரீட்சார்த்திகள் சித்தியடைய தவறிவிட்டனர் எனின், நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை யாது?

03. ரூபா 100 இற்கு கொள்வனவு செய்த பயிற்சிப் புத்தகம் ஒன்று 12வீத இல்ாபத்தில் விற்கப்பட்டது. விற்ற விலை எவ்வளவு?

04. உருவிலுள்ள சமபக்க முக்கோணி PQR இன் பக்கங்கள் PQ, QR, PR இன் நடுப்புள்ளிகள் முறையே L, M, N ஆகும். முக்கோணி PQR இன் சுற்றளவு 42செ.மீ எனின், முக்கோணி LMN இன் சுற்றளவு யாது? நீர் பயன்படுத்திய கேத்திரகணித தொடர்பைக் கூறுக?




05. பாடசாலை விடுதியொன்றில் தங்கியுள்ள 60 மாணவர்களுக்கு 6 நாட்களுக்கு போதுமான உணவு உள்ளது. இம்மாணர்களின் 1/3 பங்கினர் சுகவீனம் காரணமாக தங்கள் வீடுகளுக்கு சென்றுவிட்டனர். அங்குள்ள உணவு தற்போது உள்ள மாணவர்களுக்கு மேலும் எத்தனை நாட்களுக்கு போதுமானது?

## பாடம் : வரலாறு

01. இந்தியாவிற்கு வந்த ஆரியர்கள் முதலில் எந்த ஆற்றுப் பள்ளத்தாக்கை அண்டி குடியேற்றங்களை அமைத்தனர்?
1. சிந்து 2. கங்கா 3. யமுனா 4. காவேரி

02. ஐரோப்பிய இனங்களுக்கிடையே நாடுகளைக் கண்டுபிடிக்கும் பணிகளுக்கு முதன் முதலாக ஈடுபட்ட நாடு யாது?
1. ஸ்பெயின் 2. போர்த்துக்கல் 3. பிரான்ஸ் 4. இத்தாலி

03. பொலநறுவை மீது படையெடுத்த மகான் எந்த தேசத்திலிருந்து வருகை தந்தான்?
1. சோழ 2. பாண்டிய 3. கலிங்க 4. பல்லாவ

04. பன்னிரு மகாகவிகள் இலங்கையில் பின்வருவனவற்றுள் எம்மன்னன் காலத்தில் வாழ்ந்ததாக கருதப்படுகிறது?
1. 1ம் அக்போ 2. களணிதீசன் 3. துட்டகைமுனு 4. தீசன்

05. ஸ்ரீவிக்கிரம ராஜசிங்க மன்னன் பிக்குமார்களின் ஆதரவை இழக்க பிரதான காரணம்?
1. பிக்குமார்களுக்கு பதவிகளை வழங்காமை
2. பிக்குமார்களை கொலை செய்தமை
3. பொதுமக்களின் பக்கம் மன்னன் இருந்தமை
4. பிரதானிகளுக்கு அதிக அதிகாரம் கொடுத்தமை

06. இலங்கை ஜனாதிபதி தனது பதவியேற்பின் போது யார் முன்னிலையில் சத்திய பிரமாணம் செய்ய வேண்டும்?
1. பிரதமர் முன்னிலையில் 2. பிரதம நீதியரசர் முன்னிலையில்
3. சபாநாயகர் முன்னிலையில் 4. எதிர்க்கட்சித் தலைவர் முன்னிலையில்

07. ஐரோப்பாவில் மானிய முறை வீழ்ச்சிக்கு வழிவகுக்காத காரணியாக கருதக் கூடியது பின்ருவனவற்றுள் எது?
1. கொள்ளை நோய்கள் ஏற்பட்டமை 2. மறுமலர்ச்சி ஏற்பட்டமை
3. பிரபுக்களின் ஆதிக்கத்தின் கீழ் தொடர்ந்தும் மக்கள் நிலத்தினால் கட்டுப்பட்டிருந்தமை
4. பிரான்சிய புரட்சி ஏற்பட்டமை

08. இலங்கையில் முதலாவது குடியரசு யாப்பு கொண்டுவரப்பட்ட ஆண்டு?
1. 1948 2. 1972 3. 1978 4. 1985

## பாடம் : விஞ்ஞானம்

01. உயிர்ப்பல்வகைமையின் அழிவிற்கு அதிக அளவில் பங்களிப்புச் செய்யும் மனிதச் செயற்பாடு எது?
1. அளவுக்கு அதிகமாக வேட்டையாடுதல்
2. வாழிடங்களை அழித்தல் 3. உயிர்ச்சுவட்டு எரிபொருள்களை எரித்தல்
4. பூச்சி கொல்லிகளைப் பயன்படுத்தல்

02. பின்வரும் மூலக்கூற்றுச் சோடிகளிடையே சமமூலக்கூற்றுத் திணிவுள்ள சோடி எது?
(H = 1, C = 12, N = 14, O = 16)
1. $N_2$, CO 2. $CH_4$, $NH_3$ 3. $N_2$, H 4. $O_2$, NO

03. ஒரு கடத்தியைக் காந்தப் புலத்தினுள்ளே அசையச் செய்யும் போது தூண்டலோட்டத்தின் திசைபற்றிப் பிளெமிங்கின் வலக்கை விதி விவரிக்கின்றது. இதற்கேற்ப அசைவு, புலம், தூண்டலோட்டம் ஆகியன முறையே,
1. பெருவிரல், சுட்டுவிரல், நடுவிரல்
2. பெருவிரல், நடுவிரல், சுட்டுவிரல்
3. சுட்டுவிரல், நடுவிரல், பெருவிரல்
4. நடுவிரல், சுட்டுவிரல், பெருவிரல்

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

### நீதிப் பாடல்கள் (புதிய பாடத்திட்டம்)

### நாலடியார் (நூலறிமுகம்)

திருக்குறளுக்கு அடுத்த பெருமை வாய்ந்த நூல் நாலடியாராகும். இந்நூல் சமண முனிவர்களால் எழுதப்பட்டது. 400 வெண்பாக்களை உடையது. பாண்டிய மன்னன் ஆணையால் 8000 சமண முனிவர்களால் பாடப்பட்ட பாடல்கள் அனைத்தும் வைகையாற்றில் இடப்பட்டன. அவற்றில் 400 பாடல்களே நீரை எதிர்த்து கரை ஏறின என்பர். இவ்வெண்பாக்களை அறத்துப்பால் புறத்துப்பால் காமத்துப் பால் எனப்பாகுபடுத்தி 40 அதிகாரங்களாக வகுத்து அதற்கு முதன் முதலில் உரை எழுதியவர் பதுமனாராவார். இந்நூல் திருக்குறட் கருத்துக்களும் சொற்களும் மிகுதியாக பயின்று வரக் காணலாம். மறுமுறையும் இடையிடையே கூறியிருக்கக் காணலாம். எனினும் இந்நூல் கூறும் கருத்துகள் பொருட்செறிவுடையனவாகவும் அறிவிற்கு இன்பம் பயப்பனவாகவும் அமைந்து விளங்குகிறது. திருக்குறள் போலவே இந்நூலும் ஆங்கிலநாட்டு மிஷனரியைச் சார்ந்த டாக்டர் ஜி.யு.போப் என்பவரின் உள்ளத்தையும் கவர்ந்துள்ளது. அவர் முழு நூலையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

**யானை அனையவர் நண்பொரீஇ நாயனையர்**
**கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும் ~ யானை**
**அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்த வேல்**
**மெய்யதா வால் குழைக்கும் நாய்**

**பாட்டின் பொருள்** - ஒருவன் யானை போன்றவனின் நட்பை விட நாயைப் போன்றவனது நட்பையே ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் யானை பல காலம் பழகியிருந்தும் தனக்கு உணவு கொடுத்து காப்பாற்றும் பாகனையே கொல்லும் ஆனால் நாய் தன்னை வளர்த்தவன் அது மீது கோபப்பட்டுக் கொண்டு கூரிய ஆயுதத்தால் தாக்கிய போதும் அது தன் அன்பின் அடையாளமாக அது தன் வாலை ஆட்டும். (நன்றி மறவாத் தன்மையுடையது)

**வினா** : *நாலடியார்ப் பாடலில் யானையின் நட்பை விட நாயின் நட்பு சிறந்ததென கூறப்படுவது ஏன்? விளக்குக.*

### இனியவை நாற்பது

மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார் இந்நூலாசிரியராவார். ஒவ்வொரு வெண்பாவிலும் நான்கு அல்லது மூன்று இனிய பொருளாக நாற்பது வெண்பாக்களில் கூறுகிறார். இந்நூல் பொருளடிப்படையில் திரிகடுகத்தையும் நூலமைப்பில் இன்னா நாற்பதையும் ஒத்துள்ளது. இன்னா நாற்பதின் மறு பதிப்பே இந்நூலாகும் என அறிஞர்கள் கூறுகின்றனர். அந்நூலிலிருந்து ஒரு பாடலை நோக்குவோம்.

**கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே**
**மிக்காரை சேர்தல் மிகமான முன் இனிதே**
**எட்டுணையானும் இரவாது தான் ஈதல்**
**எத்துணையும் ஆற்றல் இனிதே.**

**பாட்டின் பொருள்** - கற்றவர்களுக்கு முன்பு தாம் கற்ற கல்வியை சொல்லுதல் மிகவும் இனிமையானது. அறிவிற் சிறந்தவரை அடைதல் இனிது தான் பிறரிடம் எள் அளவும் இரக்காமல் பிறருக்கு கொடுத்து வாழ்தல் மிக இனிதாகும்.

**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

04. ஓடிகள் மூலம் பதியமுறை இனப்பெருக்கம் நடைபெறும் தாவரம் எது?
1. அன்னாசி 2. சதைக்கரைச்சான் 3. வல்லாரை 4. வெங்காயம்

05. சூழல் வெப்பநிலை கூடுதலாக இருக்கும் ஒரு நாளில் சாதாரண நாளைக் காட்டிலும் கூடுதலான வியர்வை ஏற்படும். இச் செயன்முறையை எடுத்துரைப்பதற்குப் பின்வரும் எக்கூற்று மிகவும் உகந்தது?
1. மிகையாக வியர்த்தல் நோய் நிலையாகும்
2. வியர்த்தல் தன்னிச்சையாக நடைபெறும் தூண்டற்பேறாகும்.
3. வெப்பமான நாட்களில் வியர்வையுடன் கழிவுப் பொருட்களும் வெளியேறும்
4. வியர்த்தல் அக வெப்பநிலையை மாறாமல் பேணும் செயலாகும்.

06. 0.25கி.கி திணிவுடைய ஒன்றை ஒன்று ஒத்த A, B எனும் இரு விற்றராசுகளில் விற்றராசு A இல் தொங்கவிடப்பட்டு B இன் அந்தத்துடன் 5கி.கி நிறை தொங்கவிடப் பட்டுள்ளது. A, B ஆகியவற்றின் வாசிப்பு முறையே குறிப்பது?
1. 52.5N, 50N 2. 50N, 50N 3. 2.5N, 5N 4. 50N, 52.5N

07. ஆவரத்தன அட்டவணையின் ஒரு கூட்டத்தைச் சேர்ந்த சில மூலகங்களின் இரசாயனக் குறியீடுகள் இங்கு கூட்டினுள் தரப்பட்டுள்ளன. இக் கூட்டத்தில் மேலிருந்து கீழாகச் செல்லும் போது பின்வரும் எந்த இயல்பு குறைவடைந்து செல்லும்?

Li
Na
K
Rb

1. அணு ஆரை 2. அயனாக்கல் சக்தி 3. உலோக இயல்பு
4. தாழ்த்தும் இயல்பு

08. வெப்பமாக்கும் போது பின்வரும் எப்பொருளிலிருந்து வாயுவினை பொருள் கிடைக்கின்றது?
1. கல்சியம் காபனேற்று 2. மக்னீசியம் ஒட்சைட்டு
3. சோடியம் காபனேற்று 4. சோடியம் குளோரைட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 08

01. பின்வரும் உவமைத் தொடரின் கருத்தைத் தருக

அ. ஓடும் புளியம்பழம் போல:-

..........................................................................

ஆ. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியது போல:-

..........................................................................

02. ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.



This is a .................................

03. தச்சு தொழிலில் பயன்படாதது?
1. மணியாசுப்பலகை 2. உளி 3. துறப்பணம் 4. கைவாள்

04. வாயால் ஊதுவதன் மூலம் ஒலி எழுப்பும் சங்கீத உபகரணம் அல்லாதது?
1. கொம்பு 2. சல்லாரி 3. ஊதி 4. நாதஸ்வரம்

05. விதையில்லா பழவகை?
1. வாழைப்பழம் 2. கொய்யா 3. எலுமிச்சை 4.தோடை

06. வருடத்திற்கு ஒருமுறை மட்டும் பூக்கும் தாவரம்?
1. பூசணி 2. வெண்டி 3. பப்பாசி 4. இலுப்பை

07. கபில நிறமான வித்து?
1. பயறு 2. பூசணி 3. கோப்பி 4. பலா

08. மலேசியா அமைந்திருப்பது இலங்கைக்கு எத்திசையில்?
1. வடக்குத் திசையில் 2. கிழக்குத்திசையில்
3. மேற்குத் திசையில் 4. தெற்குத் திசையில்

09. ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்புப் பெற தனது எதிரிகளை முன்னங்கால்களினால் தாக்குவது?
1. பூனை 2. குதிரை 3. கழுதை 4. எருது

10. கடற்கரைக்கு அண்மையில் அமையாத நகரம்?
1. அம்பாந்தோட்டை 2. புத்தளம் 3. பதுளை 4. திருகோணமலை

11. இலங்கையின் உயரமான அணைக்கட்டு?
1. ரன்தெனிகல 2. ரன்டெம்பே 3. விக்டோரியா 4. பீதுருதாலகால

**பகுதி – 02**

01. பின்வரும் பாடலை வாசியுங்கள் வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

துள்ளித் துள்ளி ஓடுது பார்
வெள்ளை முயல் அம்மா – அதை
மெல்ல ஓடி பிடித்திடவே
மிகவும் ஆசை அம்மா

பஞ்சு போன்ற உடலைத் தடவிப்
பார்க்க ஆசை அம்மா – நான்
கொஞ்சிப் பேசிக்கூடி ஆடி
குதிக்க வேண்டும் அம்மா

அ. இப்பாடலிலுள்ள அடுக்குமொழிச் சொல் ஒன்றைத் தருக?.................................................................

ஆ. இங்கு இடம் பெறும் இணைமொழி?
..........................................................................

இ. இப்பாடலில் வந்துள்ள உயர்திணைத் தன்மைப் பெயர்ச்சொல்?
..........................................................................

ஈ. இப்பாடலில் வந்துள்ள அஃறிணை பெயர்ச்சொல்?
..........................................................................

உ. உயர்திணை பெண்பால் படர்க்கைப் பெயர்ச்சொல்?
..........................................................................

ஊ. உவமைத் தொடரினை எழுதுக?



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

## சிறுவர் முரசு



குட்டிக்கதை

## பலம் மிக்கவர்கள்

சிங்கமும் கழுதைப்புலியும் பசுவைப் பிடித்து வைத்திருந்தன. ஒரு நாள் சிங்கம் பசுவைக் கொன்றது. கழுதைப்புலி தன் குட்டியை சிங்கத்திடம் அனுப்பி தன் பங்கைக் கேட்டது. கழுதைப்புலியின் பங்காக பசுவின் குடலை மட்டும் கொடுத்து அனுப்பியது சிங்கம்.

கழுதைப் புலியோ, "நீ ஏன் குடலைக் கொண்டு வந்தாய்? அரைவாசிப் பங்குதானே நமக்கு உரியது?" என்று கேட்டது.

குட்டி கழுதைப்புலி சொல்லியது "நான் சின்னப்பயல். பெரியவர்கள் கொடுப்பதைத்தான் கொண்டு வர முடியும். நான் எப்படி சிங்கத்தோடு விவாதிக்க முடியும்".

அதைக்கேட்டு கோபமான கழுதைப்புலி அந்தக் குடலோடு சிங்கத்தைப் பார்க்கப் போனது. சிங்கம் உணவை உண்டு குகைக்குள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. கழுதைப்புலி வந்ததைக் கண்டு கண்களை அச்சமூட்டும் வகையில் வைத்திருந்தது. "ஏன் இங்கே வந்தாய்?" - கர்ஜித்த படி சிங்கம் கேட்டது.



பசுவில் பாதி கேட்க வந்த கழுதைப்புலி தற்போது தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு பேசியது, "ராஜ சிங்கமே! நீங்கள் குடல் அனுப்பியதற்கு மிக்க நன்றி, ஆனால் அதனை உங்களிடமே சேர்க்க முடிவு செய்து விட்டோம்".

குடலை சிங்கத்திடம் கொடுத்து விட்டு திரும்பிய கழுதைப்புலியிடம் குட்டி கேட்டது, "பசுவில் பாதி கேட்கப்போன நீங்கள் குடலையும் கொடுத்து விட்டு வருகிறீர்களே?"

"மகனே! சிங்கம் மிகக் கொடூரமாக இருந்தது. அதைக்கண்டு நடுங்கி விட்டேன். எனவே எனது பங்கையும் கொடுத்துவிட்டுப் பாராட்டி விட்டு வந்தேன். எல்லாம் நன்மைக்காக" என்றது தாய் கழுதைப்புலி.

நம்மை விட வலிமையானவர்களைக் கோபப்படுத்துவதை விட அவர்களை சாந்தப்படுத்துவதே பாதுகாப்பானது.

**– எம்மைவிட பலமானவர்களிடமிருந்து கவனமாக இருத்தல் சிறந்தது –**

## எனது பொழுது போக்கு

என்னுடைய பொழுதுபோக்கு மீன் வளர்த்தல் ஆகும். நானும் என் அண்ணாவும் மீனுக்கு சாப்பாடு போடுவோம். அப்பா எங்கள் மீன் தொட்டியை மாதத்தில் ஒரு முறை சுத்தம் செய்து தருவார். என்னிடம் ஐந்து சிறிய மீன்களும் இரண்டு பெரிய மீன்களும் உள்ளன. என் அம்மா என்னுடைய பிறந்தநாள் பரிசாக இரண்டு மீன்கள் வாங்கித் தருவதாக கூறியுள்ளார். பாடசாலை முடிந்து வீட்டிற்கு வந்ததும் என்னுடைய குட்டி மீன்களுக்கு அன்று பாடசாலையில் நடந்தவற்றை கூறுவேன். எனக்கு அவைகளை மிகவும் பிடிக்கும்.



**த.மயூரதி**
**தரம் - 05**
**திருகோணமலை**



செல்வி. க. விஜூஷியா
தரம் 08ஆ, திருகோணமலை

## சிந்திக்க .. ..

உனக்காக சிரிக்கும் உதடுகளை விட
உனக்காக கண்ணீர் விடும் கண்களை
நேசிக்கத் தெரிந்து கொள்!
அது உப்பாக இருந்தாலும்
உண்மையானது!!!

## தப்புவோமே!

மின்னல் அடிக்குது மின்னல்,
மேற்கில் முழங்குது வானம்!
சின்ன மழை ஒன்று தூறும்,
செல்ல வேணாம் அங்குமிங்கும்!

பச்சை மரங்களைத் தாக்கும்,
பட்டிமாடாட்டையும் தீண்டும்!
உச்சத் திரும்பதன் மூலம்
ஓடி வந்தே நிலம் வீழும்!

பொல்லா நெருப்பது வாகும்,
பொசுக்கித் தீய்த்திடும் ஆளை!
நில்லாமலே வெளியாலே
நீடித்திருக்கலாம் வீட்டில்!

கண் பார்வையும் பறிபோகும்,
காதினையும் செவிடாக்கும்!
மண்பாயவே வழி பார்க்கும்,
மாய்த்திடாமல் தப்புவோமே!

**தாமரைத்தீவான்**
**சச்சந்தீவு- கிண்ணியா**

## பொது அறிவு – 10

இப்போது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

01. BRICS வங்கியின் தலைமையகம் எங்கே நிறுப்பட்டுள்ளது? சங்காய் நகரில்
02. மின்னணு பொருள் தயாரிப்பில் முன்னணியில் உள்ள நிறுவனம் எது?
பிலிப்ஸ் நிறுவனம்
03. உணவுச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனம் எது? சுகாதாரத் திணைக்களம்
04. இலங்கையில் அதிகம் தொழிற்படும் கந்தாய முறை எது? வாடகைக் கொள்வனவு முறை
05. கம்பனிக்கு சட்ட ஆளுமை பெற்றுக் கொடுக்கும் ஆவணம் எது?
வாடகைக் கொள்வனவு முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பள்ளியின் செயற்பாடு

அன்புவழிபுரத்தைச் சேர்ந்த ஞானசேகரம் முன்பள்ளி பாடசாலையின் பதினாறாவது கொண்டுவந்து விற்கும் செயற்பாடு (bring and buy sale) நேற்று வெள்ளிக்கிழமை (20.02.2015) அன்று பாடசாலையில் இடம்பெற்றது. அதில் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்.

மாணவச் செல்வங்கள் மரக்கறிகளையும், பழங்களையும் மேலும் பல பொருட்களையும் தங்கள் விற்பனைக்காக கொண்டுவந்திருந்தனர். இச்செயற்பாடு நிர்வாகி க.சிவநேஸ்வரி அவர்களின் தலைமையில் ஆசிரியர்களின் உதவியோடு இனிதே நடைபெற்றது.

- பிரதீசன் -









## சிவராத்திரி - ஆதிகோணேஸ்வர ஆலயம்

- தம்பலகாமம் நிருபர் -

மகாசிவராத்திரி தின நிகழ்வானது கடந்த 17ம் திகதி திருகோணமலை தம்பலகாமம் ஆதி கோணேஸ்வரர் ஆலயத்தில் மிக விமர்சையாக இடம்பெற்றது. இந்த விசேட பூசைகளிலும் கலை நிகழ்வுகளிலும் கிழக்கு மாகாணசபையின் உறுப்பினர் ஜெ.ஜெனார்தனன் மற்றும் திருகோணமலை நகரசபை உறுப்பினர் கா.கோகுல்ராஜ் மற்றும் பிரதேச செயலக கலாச்சார உத்தியோகத்தர்கள் மற்றும் ஆலய நிர்வாகிகள் சிவ பக்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். இதன் போது அரசின் கலாபூசனம் விருது பெற்ற தம்பலகாமம் தங்கராஜா வேலாயுதம் அவர்களை தம்பலகாமம் இந்து இளைஞர் மன்றத்தினரால் கௌரவிக்கப்படுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.









## பால்குட பவனியும் சங்காபிஷேகமும்

கிழக்கிலங்கையின் பன்னெடுங்காலம் மக்களின் வழிபாட்டுத்தலமாகவும் தமிழர்களின் பண்பாடுகளை சுமந்ததாகவும் தொன்றுதொட்டு தமிழ் மக்கள் மத்தியில் பிணைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு, ஆரையம்பதி மாவிலங்குதுறை அருள்மிகு ஸ்ரீமாகாளியம்மன் ஆலயத்தின் மண்டலாபிசேக பூர்த்தினை முன்னிட்டு மாபெரும் பால்குட பவனியும் சங்காபிசேகமும் நேற்று வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.





## 150வது ஜெயந்தி தினம்

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் 180வது ஜெயந்தி தின விழா மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ணமிஷனில் நேற்று வெள்ளிக்கிழமை (20.02.2015) அன்று நடைபெற்றது. இராமகிருஷ்ணமிஷன் தலைவர் சுவாமி சதுர்புஜாநந்தர் மகராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இல்ல மாணவர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். மிஷனிலிருந்து ஊர்வலமாக சென்ற இவர்கள் மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதி, நொச்சிமுனை வீதி, கல்லடி மணிக்கூட்டக் கோபுரம் வழியாக மிஷனை வந்தடைந்தது.





## மக்கள் முரசு

# சமூகவலைத்தளங்களினூடான நவீனகால சந்தைப்படுத்தலும் அதன் போக்குகளும்

நுகர்வோர் தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்திசெய்வதற்கு அவசியமானபொருள் சேவைகளை வழங்கும் செயற்பாடுகள் சந்தைப் படுத்தலாகும். இன்றைய நவீன வணிக உலகில் ஒரு நிறுவனம் தனது பொருட்கள் சேவைகள் தொடர்பான தகவல்களை அல்லது அறிவினை தமது வாடிக்கையாளருக்கு வழங்கவேண்டு மென்பது நவீனகாலசந்தைப் படுத்தலின் வெற்றியில் அவசியமாகிப் போன அங்கமாக மாறியுள்ளது. பொருட்களும் சேவைகளும் சந்தைப்படுத்த லின்றி நுகர்வோரைச் சென்றடையமாட்டாது என்பது பல ஆராய்ச்சிகளின் வழியே உணரப்பட்ட உண்மையாகும். எனவே ஒரு பொருள் அல்லது சேவை தொடர்பான நிறுவனத்தின் வெற்றியில் சந்தைப் படுத்தலானது முக்கிய பங்காற்றி வருகின்றது.

நவீனகால சந்தைப்படுத்தல் திறனாளி கள் தமது சந்தைப்படுத்தல் செயன்முறையில் வாடிக்கையாளர்களையும் முக்கிய பங்காக இணைத்துக் கொண்டுள்ளமை சந்தைப் படுத்தலின் தற்காலப் போக்காகக் காணப்படுகின்றது. வாடிக்கையாளர்களுக்காக வாடிக்கையாளர்களே பொருட்கள் சேவைகளைச் சந்தைப்படுத்தும் செயற்பாடு, சந்தைவெளி (Marketing Space) எனும் சந்தை விரிவாக்கத்தின் மூலம் சாத்தியப்பட்டுள்ளது. சந்தைவெளி என்பது டிஜிட்டல் தொழில்நுட்பமும், இணையமும் பயன்படுத்தப் பட்டு பொருட்களும் சேவைகளும் கொள்வனவு விற்பனை நிகழும் சந்தையைக் குறிக்கின்றது (ஜகத் பண்டாரநாயக்கா). இலத்திரனியல் வர்த்தகம் சந்தைவெளியிலேயே இடம்பெறு கின்றது. தற்கால நுகர்வோர் நிறுவனம் தொடர்பிலும், அதன் உற்பத்தி தொடர்பிலும் பயனாளிகளின் அனுபவங்களை (experience) அல்லது கருத்துக்களை (Word of Mouth) அதிகளவில் நம்புகின்ற நடத்தை பொதுவாகக் காணப்படுகின்றது.

தொழில் நுட்பத்தின் வளர்ச்சியோடு இவை சார்ந்த இலக்குகளை அடைவதற்கு சமூகவலைத் தளங்களின் பங்களிப்பும் சந்தைப்படுத்தலின் செயன் முறைகளின் ஒரு அங்கமாக ஈர்க்கப்பட்டுள்ளதென்பது மறுக்க முடியாத உண்மையாகும். சமூகவலைத்தளங்கள் என்பது மனிதர்கள் தங்களுடைய கருத்துக்கள், எண்ணங்கள், நிகழ்வுகள் போன்றவற்றை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்வதற்கு வசதியளிக்கின்ற இணையவலை யமைப்பைக் குறித்து நிற்கின்றது. பெரும்பாலும் இவ்வாறான சமூகவலைத்தளங்கள் இலவசமாகவும், இலகுவாகவும் பயன்படுத்தக் கூடியவகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. வணிகங்கள் சமூகவலைத் தளங்களினூடாக தமது சந்தைப்படுத்தல் நடவடிக்கை களை மேற்கொள்வதற்கு தூண்டுதலாயிருந்த மிக முக்கிய காரணி, நாடுகளின் பௌதீகரீதியான எல்லைகளைக் கடந்து பெரும் எண்ணிக்கையான வாடிக்கையாளர்கள் வேறுபட்ட பல சமூகவலைத் தளங்களில் (Facebook, Twitter, Linkedin) இணைந்து கொண்டமையாகும்.

சமூகவலைத்தளங்களின் பயனாளர் களை தங்கள் பொருள் சார்ந்து தனியொரு சந்தைப் பரம்பலாகக் (Marketing Segment) கருதுமளவுக்கு சமூகவலைத்தளங்களின் தாக்கம் நவீனகால சந்தைப் படுத்தல் செயற்பாடுகளில் காணப்படுகின்றது. ஒரு நிறுவனம் தனது இலக்குகளை அடைவதற்கு புதிய வாடிக்கையாளரைக் கவர்தலும், வாடிக்கையாளரைத் தக்கவைத்துக் கொள்ளலும் இன்றியமையாத ஒன்றாகும். இணைய வழி சந்தைப்படுத்தலின் அறிமுகத்திற்கு முன்னரான காலப் பகுதியில் இச்செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்வது சிரமமானதாகவும், செலவு கூடியதாகவும் காணப்பட்டது. ஆனால் தற்போது இணையப்பயன்பாடு அதிலும் குறிப்பாக சமூகவலைத் தளங்களின் வருகையோடு வாடிக்கையாளரைக் கவர்தலும் தக்கவைத்தலும் இலகுவான செயற்பாடாக மாற்றம் பெற்றுள்ளது. அத்தோடு சந்தைப்படுத்தல் கலவையின் விற்பனை மேம்படுத்தல் பகுதியானது சமூகவலைத்தளங்களினூடாக சிறப்பாக முன்னெடுக்கப் பட முடியும் என்பதனை நிகழ்காலத்தின் பல ஆய்வுகள் நிரூபித்துக்காட்டியுள்ளன.

இன்று பலநிறுவனங்கள் புதிய வாடிக்கையாளரைக் கவருதல், தமது பொருட்கள் சேவைகள் தொடர்பில் வாடிக்கை யாளரை அறிவூட்டல், தமது நிறுவனம் மற்றும் பொருட்கள் தொடர்பிலான நுகர்வோரின் கருத்துக்களை அறிந்துகொள்ளல், தமது நிறுவனத்தின் நன்மதிப்பினை அல்லது பொருட்கள் சேவைகள் தொடர்பிலான நம்பகத் தன்மையை ஏற்படுத்தும் வகையிலான சாதகமான கருத்துப் பகிர்வுகளை ஊக்கப்படுத்தல் போன்ற பல்வேறு குறிக்கோள்களை நோக்காகக் கொண்டு தமது வணிகத்தின் பெயரில் சமூகவலைத் தளங்களில் வெற்றிகரமாக செயற்பட்டு வருவதைக் காணலாம். இச்சமூகவலைத் தளங்களினூடான சந்தைப்படுத்தலின் வெற்றியின் முக்கிய காரணியாக அமைவது தற்கால வாடிக்கையாளர்கள் விளம்பரப்படுத்தல், விற்பனை மேம்படுத்தல் போன்ற செயற்பாடுகளைப் பார்க்கிலும் சந்தைப்படுத்தல் தொடர்பாடல் கலவையின் (Marketing Communication Mix) ஒரு அங்கமான "சாதகமான கருத்துக்கள்" (Positive Word of mouth) மீது கெண்டுள்ள நம்பகத்தன்மையாகும்.

உதாரணமாக ஒருவர் ஒரு குறித்தபொருள் தொடர்பில் தனது முகநூலில் (Facebook) விருப்புத் (Like) தெரிவித்து அதனைத் தனது நண்பரோடு பகிர்ந்து (Share) கொள்ளும் போது இயல்பாகவே அந்த பொருள் குறித்து சாதகமான கருத்து அந்த நண்பருக்குக் கடத்தப்படுகின்றது. இதன் மூலம் குறித்த நபரின் நண்பரும் அந்தப் பொருள் தொடர்பில் தேவையை ஏற்படுத்து வதற்கான வாய்ப்புக்கள் உருவாகின்றன. இது ஒரு தொடர்ச்சியான செயற்பாடாக இடம்பெறுகின்றபோது நிறுவனம் தனது சந்தைப்படுத்தல் தொடர்பான இலக்குகளை இலகுவாக அடைந்து கொள்ளமுடியும்.

தற்காலத்தில் நிறுவனங்களின் சந்தைப்படுத்தலின் வெற்றிக்கு சமூகவலைத்தளங்கள் பல்வேறு வகையில் துணைபுரிகின்றபோதும் சில குறைபாடுகளையும் கொண்டுள்ளது.

தொடரும் . . .

- க.நிருஷன் -
வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்களுக்கும்...

களமிறங்கவுள்ளதை அவர் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தம்மளவில் சர்வதேச முயற்சிகளை மேற்கொண்ட போதும் அவை கணக்கெடுக்கப்படவில்லை எனத் தெரிவித்த அவர் வடமாகாண சபையில் இனக்கருவறுப்புப் பிரேரணை திடீரென முன்வைக்கப்பட்டு, அதற்கு ஆதரவாகத் தீர்மானம் இயற்றப்பட்டதும் ஜெனீவாவிற்கு அழுத்தமொன்றை வழங்கவே என்றும் தெரிவித்தார். மேலும் அறிக்கையைப் பின்தள்ளிப்போடுவது தொடர்பாக மனித உரிமை ஆணையாளரின் நிலைப்பாட்டைப் புரிந்து கொண்டால் சர்வதேச சமூகத்தின் கடும் அழுத்தத்தின் காரணமாகவே ஆணையாளர் இம்முடிவை நோக்கி நகர்ந்திருப்பதுடன். அவ்வாறு பின்தள்ளுவதை ஒரு தடவை மட்டுமே தான் நிகழ்த்தப் போவதாக அறிவித்திருப்பதையும் குறிப்பிட்டார்.

எனவே இச்சந்தர்ப்பத்தில் மக்கள் அச்சமின்றி தகவல்களை சர்வதேச விசாரணையாளர்களுக்கு வழங்க முன்வரவேண்டும் என்றும் அதற்கான ஒரு வாய்ப்பாக இக்காலத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

### மனித உரிமை ஆணையாளரின் நிலைப்பாடு

குறித்த அறிக்கையை மேலும் ஒரு தடவை பின்தள்ளப் போவதில்லை என ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் செய்ட் றா-ட் அல் ஹுசைன் தனது உரையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

"மிகக் கடினமானது இந்தத் தீர்மானம். இந்த அறிக்கையை வெளியிடுவதற்கு ஆதரவாக நல்ல பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டமை போன்றே தற்போது இலங்கையில் உருவாகியுள்ள அரசியல் சூழலில் அறிக்கையை மேலும் ஆறு மாதங்களுக்கு பின்னர் வெளியிடுவது சரியாக இருக்கும் என மிகவும் உறுதியான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அத்துடன் இவ் ஆறுமாத காலத்தினுள் புதிய தகவல்களையும் இணைத்து இன்னும் வலிதான அறிக்கையொன்றை உருவாக்க முடியும். அதேவேளை இலங்கையின் புதிய அரசாங்கம் மனித உரிமைகள் தொடர்பாக ஐநாவுடன் இணைந்து பணியாற்ற இலங்கையின் புதிய அரசு தயாராயிருப்பதாக தெளிவான சமிக்ஞையை அனுப்பியுள்ளது.

இவற்றோடு இவ்விசாரணையை நடாத்திய சர்வதேச விசாரணையாளர்கள் மூவரும் ஒட்டுமொத்தமாக தமது அறிக்கையைக் காலந்தாழ்த்தி வெளியிடுவதன் ஊடாக தற்போதைய இலங்கை அரசாங்கத்தின் ஐநாவுடன் இணைந்து பணியாற்றும் பண்பைக் கண்டுகொள்ள முடியும் என்பதால் ஒரு தடவை மட்டும் பின்தள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். இவற்றின் அடிப்படையிலேயே நான் இந்த அறிக்கையை ஆறு மாதங்களுக்கு மட்டும் பின்தள்ளும் முடிவை எடுத்துள்ளேன். அதனையிட்டு எவ்வித தப்பார்ப்பிதங்களும் கொள்ளத் தேவையில்லை. எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நாம் அந்த அறிக்கையை வெளியிடுவோம் என்னும் உறுதிமொழியை தளம்பலின்றி, தன்னிச்சையாக, உறுதியாக நான் தெரிவிக்கின்றேன்" என அறிவித்துள்ளார்.

## ஆளணி...

தெரிவித்தனர்.

மருத்துவ உதவியாளர்களுக்குச் சுகவீனம் ஏற்படும் காலங்களில் மருந்துகளைப் பெற்றுக்கொள்ள முடியாது போய்விடுவதாகவும் அதனால் மக்கள் சிலவேளைகளில் பொறுமையை இழப்பதாகவும் தெரியவருகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் பல பிரதேச வைத்தியசாலைகள் அரசியல் செல்வாக்கினால் தரமுயர்த்தப்பட்டு செயற்படும் இக்காலத்தில் சேனையூர் வைத்தியசாலையின் குறைகளை நிவர்த்திக்க அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## மடுவத்தில் .....

யிருப்பது தெரியவந்துள்ளது

கன்னியாவில் பல காலமாக தமிழரின் கால்நடைகள் களவாடப்பட்டு வந்துள்ளன. அவற்றைக் கண்டு பிடிக்க பல நடவடிக்கைகளை அந்தக் கிராம மக்கள் எடுத்திருந்த போதும் அவை தோல்வியடைந்துள்ளன.

இச் சந்தர்ப்பத்தில் பொது மருத்துவிச்சியொருவரின் மாடுகள் காணாமற் போனதை அடுத்து அவர் மடுவத்தின் மீதும் கண் வைத்திருந்தார்.

திடீரென ஒருநாள் அவரது களவாடப்பட்ட மாடுகள் மடுவத்தில் அறுக்கப்பட்டதை அவர் தெரிந்துகொண்டதை அடுத்து அங்கு சென்று அவர் அறுக்கப்ட்ட மாடுகளின் எச்சங்களைக் கொண்டு தனது மாடுகள் அறுக்கப்பட்டதை உறுதிப் படுத்தியதுடன் அவற்றைப் படமெடுத்துக் கொண்டதும் பிரச்சனை பூதகரமாகியுள்ளது.

இதனையடுத்து அப் பிரச்சனையை இரகசியமாக முடித்துக்கொள்ள திருகோணமலை நகரத்தின் சபையொன்றின் முதல்வரின் உதவி நாடப்பட்டதாகவும் அவரது மத்தியஸ்தத்தின் கீழ் உரிய பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ரூபா. 20,000, இறைச்சியைப் பெற்றுக்கொண்ட 8 கடைக்காரர்கள் முறையே ரூபா. 5000, வெட்டியவர் ரூபா 60,000 என மொத்தமாக ரூபா 120,000 செலுத்தி விடயங்கள் மூடி மறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

இந்நிலையில் கன்னியா கிராமத்திலிருந்து களவு போன ஆடு, மாடுகள் யாவற்றுக்கும் நேர்ந்த கதி இதுவாகத்தானிருக்கும் என தற்போது மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயத்தில் முழுமையான விசாரணைகளை நடாத்துமாறு மக்கள் குறைகேள் அலுவலகம் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கும், உள்ளூராட்சித் திணைக்களத்திற்கும் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## அம்பாறையில்...

நடாத்தப் பட்டுள்ளது.

கடத்தல்கள் மற்றும் காணாமற் போதல்கள் தொடர்பாக இவரின் மீது பாகுபாடற்ற விசாரணையை மேற்கொள்வதன் ஊடாக பல விடயங்கள் வெளியாகும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்திருப்பதுடன் அவருடன் இணைந்து செயற்பட்டவர்கள் யாரென்பதும் அவ்விசாரணை ஊடாக வெளிவரும் எனத் தெரிவித்துள்ளனர்.

திருக்கோவில் சந்தைப்பகுதியில் ஆரம்பித்து நடாத்தப்பட்டுள்ள இப்பேரணி இறுதியில் திருக்கோவில் பிரதேச காவல்துறைப் பொறுப்பாளருக்கு மகஜரொன்றைக் கையளித்ததுடன் நிறைவிற்கு வந்துள்ளது.

## கிழக்கு மாகாண தமிழா...

முன்வைத்து, கலந்துரையாடல்களை மேற்கொண்டது.

கடற்படையின் முகாமாகப் பயன்படுத்தப்பட்டுவரும் சம்பூர் மகாவித்தியாலயம் மற்றும் ஸ்ரீ முருகன் வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளையும் மாணவர்களின் பயன்பாட்டிற்குப் பெற்றுத்தர உதவுதல், தேசிய இடமாற்ற சபையின் மூலமே இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படல், கிழக்கு மாகாணத்தில் அதிபர்களுக்கான இடமாற்றங்கள் நடாத்தப்பட வேண்டும் மூதூர் கிழக்கிற்கு தனியான கல்விக்கோட்டம் ஒன்றைக் அமைத்தல், பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளரின் அர்ப்பணிப்புடனான சேவையை களங்கம் விளைவிக்க முற்படுவோர்க்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கோருதல், ஆசிரியர்களுக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்கத் துரித நடவடிக்கை எடுத்தல் போன்ற மேலும் பல விடயங்கள் இச்சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளன.

## திருமலை வளாகத்திற்கு...

பெரும்பாலான தமிழ் மாணவர்களே வெளிவாரி அலகில் கல்வி கற்று வரும் வேளையில் தற்போது அதற்கான அலுவலராக வெளிவள வினியோகத்தின் அடிப்படையில் சிங்கள இளைஞனொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வெளிவாரிக் கல்வி அலகு ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட்டே தமிழ் அலுவலர்களே இவ்வலகில் பணியாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## கோத்தா முகாம்....

நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் பிபிசி தமிழோசையிடம் தெரிவித்தார்.

"இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் பலர் விடுதலை செய்யப்பட்டிருக்கலாம் அல்லது விடுதலை செய்யப்படாமலும் இருக்கலாம். ஆனால், இத்தகைய முகாம் ஒன்று இருந்ததா, அங்கு அவ்வாறு ஆட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்களா, அவ்வறாயின் அங்கு யார் யாரெல்லாம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள் என்பதைக் கண்டறிந்து நாடாளுமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்" என்றும் அவர் கூறினார். இந்த 700 பேரும் "கோத்தா முகாம்" என்ற பெயர் கொண்ட ஒரு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக அங்கிருந்தவர்களினால் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது என்றும், அங்கிருந்தவர்களுக்கு ட்ரக் வண்டிகளில் நாளாந்தம் உணவு கொண்டு செல்லப்பட்டதாகவும் தனக்குத் தகவல் கிடைத்திருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

"இந்த நிலையில் இவ்வாறு 700 பேர் இரகசியமான ஓரிடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள் என்ற தகவலை உண்மையென்றே நான் நம்புகிறேன்" என்றார் சுரேஸ்.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டு வந்து உரிய நடவடிக்கை எடுப்பதாக சட்டம்-ஒழுங்கு அமைச்சர் ஜோன் அமரதுங்க நாடாளுமன்றத்தில் உறுதியளித்திருப்பதாகவும் பிரேமச்சந்திரன் தமிழோசையிடம் தெரிவித்தார்.

## மூதூர்...

ஆசிரியர்களில் பலர் உயர் அதிகாரிகளின் செல்வாக்குகளாலும், அரசியல்வாதிகளின் பலத்துடனும் நியமனப் பிரதேசங்களை மாற்றி சொந்த இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

தற்போதுள்ள சூழ்நிலையில் யுத்தசூழ்நிலைகளுக்குள் அகப்பட்டு பல ஆண்டுகாலமாக அதிகஸ்டப் பிரதேச பாடசாலைகளிலும், கஸ்டப் பிரதேச பாடசாலைகளிலும் கடமையாற்றிய ஆசிரியர்கள் வசதியான பாடசாலைகளுக்கு நகர முடியாமல் துன்பப்படுவது மட்டுமன்றி மென்மேலும் கஸ்ட, அதிகஸ்ட பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படுவதாக சங்கத்திடம் பல ஆசிரியர்கள் முறையிட்டுள்ளனர். இவர்களில் பலர் பதினைந்து, இருபது வருடங்கள் தொடர்ச்சியாக கஸ்டப் பிரதேசங்களில் கடமையாற்றுகின்றனர்.

மூதூரின் நகர்ப்புறத்தில் உள்ள இஸ்லாமியப் பாடசாலைகளில் இருந்து ஆசிரியர்களை மூதூர் கிழக்குப் பகுதிக்கு அனுப்பமுடியாத சூழல் ஒருபுறம், நீண்ட காலம் அதிகஸ்டப் பிரதேசங்களில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு பொருத்தமான பாடசாலைகள் வழங்க முடியாமை மறுபுறம் இதற்கு உரிய முறையில் தீர்வுகண்டு பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்விக்குப் பங்கம் ஏற்படாத வகையிலும், தொடர் துன்பங்களை அனுபவிக்கும் ஆசிரியர்களுக்கு விமோசனம் கிடைக்கும் வகையிலும் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் திருகோணமலை மாவட்டச் செயலாளர் பா.தேவராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புரிதல்



கடந்தவாரத் தொடர்ச்சி .. ..

கணவனின் பார்வையை புரியாத மனைவியும், மனைவியின் வார்த்தையை விளங்காத கணவனும் சிறந்த தம்பதிகளா?

நாம் நமது அழகிய முன்மாதிரியின் வாழ்விலிருந்து பாடம் படிப்போமா!

ஆயிஷா (ரலி) அவர்கள் சொல்லும் செய்தி இதோ…

ஒரு பெருநாள் அன்று தெருவில் சிறுவர்கள், பெரியவர்களின் ஆரவாரம் கேட்டது நபிகளாருக்கு. அபிசீனிய நீக்ரோக்கள் சிலர் நடனமாடிக் கொண்டிருந்தார்கள். மக்கள் அவர்களைச் சூழ்ந்திருந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள், ஆயிஷா! இங்கு வந்து பார் என்றார்கள். எனது கன்னங்களை அவர்களது தோளின் மீது வைத்துக்கொண்டு, நான் அவர்களது புஜத்துக்கும் தலைக்கும் இடையிலிருந்து பார்த்தேன்.

நபி (ஸல்) அவர்கள், ஆயிஷா, உனக்குத் திருப்தியா? ஆயிஷா உனக்குத் திருப்தியா? என்று கேட்க ஆரம்பித்தார்கள். என் மீது அவர்களுக்கு இருந்த நேசத்தை அறிந்துகொள்வதற்காக நான் இல்லை என்று சொல்லிக்கொண்டே இருந்தேன். (ஜாமிவுத் திர்மிதீ – 4055)

ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருமுறை நபி (ஸல்) அவர்கள், ஆயிஷாவே! எப்போது நீ என்னைப் பற்றி திருப்தியுடன் இருக்கிறாய், எப்போது நீ என் மீது கோபத்துடன் இருக்கிறாய் என்று நான் நன்கு அறிந்து வைத்திருக்கிறேன் என்றார்கள். எப்படி நீங்கள் அறிந்து கொள்வீர்கள்? என்று ஆயிஷா (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "என்னைப் பற்றி நீ திருப்தியுடன் இருக்கும்போது பேசினால், முஹம்மதுடைய இறைவன் மீது சத்தியமாக! என்று சொல்வாய் என் மீது கோபமாக இருந்தால், "இப்ராஹீம் உடைய இறைவன் மீது சத்தியமாக! என்று சொல்வாய். அதற்கு ஆயிஷா (ரலி) அவர்கள், "அல்லாஹ் வின் மீது சத்தியமாக! ஆம் உண்மைதான், அல்லாஹ்வின் தூதரே! இருப்பினும், நான் உங்கள் பெயரைத்தான் விடுவேன்" என்று கூறினார்கள். ( புகாரி – 5228)

எவ்வளவு அழகான புரிதல் பாருங்கள். நம் நிலை என்ன?

முற்றும் .. ..

– ஜைனாப் காதர் –




## மீன்குழம்பு (நெத்தலி)



**தேவையான பொருட்கள்**

நெத்திலி மீன் - ¼ கிலோ, சின்ன வெங்காயம் - 3, தக்காளி – 3, மஞ்சள் தூள் - ½ தே.கரண்டி, மிளகாய்த் தூள் - 2 தே.கரண்டி, தனியா தூள் - 3 தேகரண்டி, புளி - ஒரு எலுமிச்சை அளவு, எண்ணை - ஒரு குழிக்கரண்டி, கடுகு – 1 தே.கரண்டி, காய்ந்த மிளகாய் - 2, கறிவேப்பிலை - ஒரு கொத்து, வெந்தயம் - 1தே.கரண்டி, உப்பு - தேவைக்கேற்ப

**செய்முறை**


நெத்திலியை சுத்தம் செஞ்சுக்குங்க. எண்ணைய் விட்டு கடுகு, கறிவேப்பிலை, வெந்தயம் ஆகியவற்றை தாளிக்கவும். பின் வெங்காயத்தை பொன் முறுவலா வதக்கிட்டு, தக்காளியையும் போட்டு வதக்கணும். பிறகு புளியைத் தேவையான அளவு தண்ணியில் கரைச்சு ஊத்தி, உப்பு போடுங்க. பின்னர் குழம்பு நல்லாக் கொதிக்கிறப்போ, கழுவி வச்ச நெத்திலி மீன்களைப் போட்டு, மீன்ல குழம்பு சேர்ந்ததும் இறக்கிடுங்க.

## கண்ணின் கருவளையம் மறைய...

பெண்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்ளும் போது, கண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள். ஏனெனில், வாய் பேசாத வார்த்தைகளை, அவர்களின் கண்கள் பேசிவிடும்.

**அதற்கான வழிகள் இதோ,**

1. கண் கருவளையம் நீங்க சந்தனக்கல்லில் சாதிக்காயை அரைத்து பூசிவந்தால் கருவளையம் விரைவில் மறையும்.
2. நந்தியாவட்டை பூவை நீரில் கழுவி வெள்ளைத் துணியில் சுற்றி கண்களின் மேல் வைத்து கட்டிவர கண்கள் பிரகாசமாகும்.
3. வெண்ணெயுடன் கொத்தமல்லி சாற்றைக் கலந்து கண்களுக்கு பேக் போட கண்கள் கருவளையம் நீங்கி பிரகாசமாக இருக்கும்.
4. பாதம் பருப்புகளை பாலுடன் சேர்த்து ஊறவைத்து அரைத்து கண்களைச்சுற்றி பேக் போடுவதால் கண்ணின் கருவளையம் மறையும்.
5. வெள்ளரிக்காயை அரைத்தோ அல்லது வட்டமாக நறுக்கியோ கண்களின் மீதும் கண்களைச்சுற்றியும் பேக்போட்டு வர கண்ணிற்கு குளிர்ச்சியைத் தரும்.
6. கண்கள் பளபளப்பாகவும் பொலிவுடனும் இருக்க தினமும் இரவில் கண் இமைகளில் விளக்கெண்ணெயை ஒன்று அல்லது இரண்டு சொட்டுகள் விட்டுவர வேண்டும்.
7. திரிபலா சூரணத்தை ஒரு சிட்டிகை அளவு எடுத்து ஒருகப் நீரில் இரவே கலந்து அந்த நீரைக் கொண்டு காலையில் கண்களைக் கழுவினால் கண்கள் நன்றாக ஒளிவீசும்.
8. உடல் சூட்டினால் ஏற்படும் கண் எரிச்சல் மற்றும் கண் சிவப்பு இவற்றிற்கு கருஞ்சீரகம் 100 கிராம் நல்லெண்ணெயை கண்ணின் மேலும், கண்ணைச் சுற்றியும் தேய்த்து கழுவினால் கண்எரிச்சலும் சிவப்பும் மாறும்.



அழகுக் குறிப்பு

# மருத்துவம்

## நோயெதிர்ப்புக்கு குளிர்பானம்



நோயெதிர்ப்பு மண்டத்தை வலிமையுடனும், ஆரோக்கியத்துடனும் வைத்துக்கொள்ள ஆரோக்கியமான பழங்கள், காய்கறிகளை எடுத்துக்கொள்வதோடு குளிர்பானங்களையும் குடிக்க வேண்டும்.

**எலுமிச்சை ஜூஸ்**

நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவும் வைட்டமின் சி வழமையாக உள்ளது. இது உடலின் அமிலத்தன்மையை நிலையாக வைத்திருக்க உதவும்.

**பீட்ரூட் ஜூஸ்**

பீட்ரூட்டில் பீட்டா கரோட்டின், வைட்டமின் சி, சல்பர், கால்சியம், இரும்புச்சத்து, கரோட்டினாய்டு, பொட்டாசியம் மற்றும் மக்னீசியம் உள்ளது. இதனை அன்றாடம் குடித்து வந்தால் நோய்களின் தாக்கம் குறைவதோடு, மூளையின் இயக்கமும் சீராக இருக்கும்.

**கிவி ஜூஸ்**



உடலின் நோயெதிர்ப்பு சக்திக்கு வேண்டிய வைட்டமின் ஏ, ஈ மற்றும் சி கிடைக்கும். மேலும் இதில் உள்ள பொட்டாசியம் மற்றும் நார்ச்சத்து இதய நோயில் இருந்து பாதுகாக்கும்.

**ப்ராக்கோலி**

ப்ராக்கோலியில் பீட்டா கரோட்டின், வைட்டமின் சி, வைட்டமின் பி1, கால்சியம், புரோட்டீன் மற்றும் சல்பர் போன்றவைகள் வழமையாக நிறைந்துள்ளன. எனவே முடிந்த அளவு கொஞ்சமாக பருகுங்கள். ப்ராக்கோலி ஜூஸ் சற்று கெட்டியாக இருப்பதால், இதனை மற்றொரு ஜூஸ் உடன் சேர்த்துப் பருகுங்கள்.


**கேரட் ஜூஸ்**

கேரட் கண்களுக்கு மட்டும் நல்லதல்ல. உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் பெரிதும் உதவியாக இருக்கும். அதற்கு கேரட்டை அன்றாடம் பச்சையாகவோ அல்லது ஜூஸ் செய்தோ குடிக்கலாம். இதனால் நோயெதிர்ப்பு மண்டலம் மட்டுமின்றி, கல்லீரலும் சீராகவும் இயங்கும்.

## குரட்டையால் ஏற்படும் பக்கவாதம்

நாம் சுவாசிக்கும் காற்றானது, நுரையீரலுக்கு செல்ல தடைபடும் போது குறட்டை ஏற்படுகிறது. ஆனால் அந்த குறட்டை தூங்கும் போது ஏன் வருகிறது என்று தெரியுமா, தூங்கும்போது தொண்டை தசைகள் தளர்வடைந்து ஓய்வெடுக்கின்றன. அப்போது மூச்சுப் பாதையின் அளவு குறுகிவிடுகிறது. இப்படிக் குறுகிய பாதையில் சுவாசக் காற்று செல்ல முற்படும்போது குறட்டை சத்தம் எழுகிறது.

ஏற்படும் ஆபத்துக்கள்




தூங்கிக் கொண்டிருக்கும் போது இதய பாதிப்பு, ரத்த அழுத்தம், பக்கவாதம் போன்றவை ஏற்பட காரணமாக அமைகிறது. இந்த சமயங்களில் ஒருவரது ரத்தத்தில் ஆக்ஸிஜன் குறைந்து, கார்பன் டை ஆக்ஸைட் அதிகரித்து உடல்நிலை பாதிப்பு ஏற்படுகிறது. மேலும் இரவில் தூக்கம் கெட்டுவிடும். காலையில் எழுந்ததும் கடுமையாகத் தலைவலிக்கும்.

பகலில் புத்துணர்வே இல்லாமல் தூங்கி வழிவார்கள், வேலையில் கவனக்குறைவு ஏற்படும், ஞாபக மறதி உண்டாகும். இந்த நிலைமை நீடிக்கும்போது, இதயத் துடிப்பில் பிரச்சனை ஏற்படும். ரத்த அழுத்தம் அதிகரிக்கும், நுரையீரல் பாதிப்பு, மூளை பாதிப்பு பக்கவாதம் என்று பல நோய்களும் கைகோர்த்துக் கொள்ளும்.

## இவ்வார ராசிபலன்கள்



**மேஷம்** : எதிர்ப்புகளை வெல்லும் திறன் அறிவீர்கள். உடன்பிறந்தவர்களின் உதவி உண்டு.



**ரிஷபம்** : வாகனத்தில் பராமரிப்பு பணி மேற்கொள்வதால், பயணம் எளிதாக அமைந்திடும். புத்திர விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.



**மிதுனம்** : நிதானித்து பேசி பல நலமும் பெறுவீர்கள். எதிர்ப்பாளர் விலகிச்செல்கிற புதிய சூழல் உருவாகும்.



**கடகம்** : நற்செயல்களால் புகழ் பெறுவீர்கள். புதிய பணிகளை பயன் அறிந்து ஏற்கவும்.



**சிம்மம்** : செயல்களில் நிதானமும், திட்டமிடுதலும் பின்பற்றி முழு அளவில் நற்பலன் பெறுவீர்கள். வீண் பேச்சு பேசுபவரிடம் விலகுவது நல்லது.



**கன்னி** : உடல்நலத்தில் உரிய கவனம் கொள்வதால், பணிகளை நிறைவேற்றலாம். செய்த நற்செயலுக்கு புகழும், நன்மையும் தேடி வரும்.



**துலாம்** : குடும்பத்தில் ஒற்றுமை நிலைத்திருக்கும். பொது விவகாரங்களில் கருத்து சொல்வதை தவிர்த்திடுவீர்கள்.



**விருச்சிகம்** : வாழ்வில் பல காலம் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். சமூகத்தில் கூடுதல் மதிப்பு, மரியாதை பெறுவீர்கள்.



**தனுசு** : பிறர் தரும் வாக்குறுதிகளை நம்பி செயல்களில் ஈடுபட வேண்டாம். பணத்தேவை அதிகரிக்கும். நயவஞ்சகத்துடன் புகழ்ந்து பேசுபவரிடம் விலகுவது நல்லது.



**மகரம்** : மனதில் ஞான சிந்தனை வளரும். சுய கவுரவம் பாதுகாக்க சில பணிபுரிவீர்கள். முயற்சி சிறந்து எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். புதிய வாகனம் வாங்க அனுகூலம் உண்டு.



**கும்பம்** : திட்டமிட்ட முயற்சி சில காரணங்களால் நிறைவேற தாமதமாகலாம். சிலர் மீது உருவாகிற அதிருப்தியை வெளிப்படுத்த வேண்டாம்.



**மகரம்** : எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். குடும்பத் தேவைகளை தாராள பணச்செலவில் நிறைவேற்றுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## உள்ளூர் விளையாட்டு செய்திகள்

### விருது வழங்கி கௌரவிப்பு

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் தேசியமட்டத்தில் பதக்கங்களை பெற்றுக் கொடுத்த திருகோணமலை மாவட்ட வீரர்களுக்கு விருது வழங்கி கௌரவித்தது. 2013, 2014ம் ஆண்டுகளில் பதக்கங்களை பெற்றுக் கொடுத்த 19 பேரும், 2014ம் வருடம் பாடசாலை மட்ட போட்டியில் பதக்கம் வென்ற 5 மாணவர்களும் இவ்வாறு கௌரவிக்கப்பட்டார்கள். இந்நிகழ்வு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை 19.02.2015 காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.






### கபடிப் போட்டி

கரவெட்டி பிரதேச இளைஞர் விளையாட்டுக் கழகங்களுக் கிடையி லான விளையாட்டு போட்டிகளில் ஆண் களுக்கான கபடியில் கோயிற்கடவை இளைஞர் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது. ஆண்களுக்கான கபடிப் போட்டியில் 6 அணிகள் பங்கு பற்றியதுடன், போட்டிகள் இமையாணன் மத்திய மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (17.02.2015) நடைபெற்றது. இறுதிப்போட்டியில் மனோகரா இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கோயிற்கடவை இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் கோயிற்கடவை இளைஞர் கழக அணி 42:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

### றக்பி போட்டியில் கண்டி கழகம் வெற்றி

பிரபல கழகங்களுக்கிடையில் நடை பெறும் டயலொக் கிண்ணத்துக்கான றகர் போட்டி யொன்றில் கண்டி கழகம், 66-27 என்ற புள்ளி அடிப்படையில் விமானப் படை கழகத்தை வென்றுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை (15.02.2015) மாலை கண்டி நித்தவலை றகர் மைதானத்தில் இடம் பெற்ற இப்போட்டியில் கண்டி கழகம் 33-7 என்ற புள்ளி அடிப்படையில் முன்னிலை வகித்தது. போட்டி முடிவடையும் போது கண்டி அணி 66 புள்ளிகளையும் விமானப் படை



### இல்ல விளையாட்டுப் போட்டி

மட்டக்களப்பு மண்டூர் 14 அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு போட்டி, கடந்த வெள்ளிக்கிழமை 13.02.2015 அன்று மாலை பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் எஸ்.புஸ்பராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பலர் கலந்து கொண்டனர். இதில் குறிஞ்சி இல்லம் 615 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் முல்லை இல்லம் 602 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் மருதம் இல்லம் 588 பள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. வெற்றி பெற்ற வீர வீராங்கனைகளுக்கு வெற்றிக் கேடயங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.




### அணியின் புதிய பயிற்றுவிப்பாளர்

மேற்கிந்தியதீவுகள் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளராக அந்த அணியின் முன்னாள் வீரரும், அயர்லாந்து அணிக்காக 7 வருடங்களாக பயிற்றுவிப்பாளராகவும் கடமையாற்றிவரும் பில் சிமன்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். உலகக் கிண்ண தொடர் நிறைவடைந்ததும் சிமன்ஸ் பதவியினை பொறுப்பேற்கவுள்ளார். தற்போது மேற்கிந்திய தீவுகள் பயிற்றுவிப்பாளர் இன்றியே உலகக்கிண்ண தொடரில் விளையாடி வருகின்றது. 51 வயதான சிமன்ஸ், அயர்லாந்து அணிக்கு சிறப்பான சேவைகளை ஆற்றி வருகின்றார். 2013ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஆரம்பித்த அவருடைய 2 வருட ஒப்பந்தம் நிறைவடைய முன்னர் அவர் தனது நாட்டு அணியுடன் இணையவுள்ளார்.

### பந்தை சேதப்படுத்த அனுமதியுங்கள்



கிரிக்கெட் போட்டியின் போது பந்தை சேதப்படுத்துவதை அதிகாரபூர்வமாக அனுமதிக்க வேண்டுமென்று தென் ஆபிரிக்காவின் மிகச் சிறந்த முன்னாள் துடுப்பாட்ட வீரர் பேரி ரிச்சர்ட்ஸ் கூறியுள்ளார். இதன்மூலம் பந்து வீச்சாளர்களுக்கும் வாய்ப்பு கிடைக்கும். ஆட்டம் மொத்தமாக துடுப்பாட்ட வீரர்களுக்குச் சாதகமாக அமையாது என்ற நோக்கத்தில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

### ஒப்புக்கொண்ட வீரர்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி கடந்த 2010ம் ஆண்டுஇங்கிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது கடைசி டெஸ்ட் போட்டியில், பாகிஸ்தான் வீரர்கள் சல்மான் பட், முகமது ஆமிர், முகமது ஆசிப் ஆகியோர் சூதாட்டத்தில் ஈடுபட்டது தெரிய வந்தது. இதையடுத்து, அவர்களை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் 5ஆண்டுகள் விளையாடு வதற்குத் தடைவிதித்தது. பின்னர் சல்மான் பட் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷார்யார் கானுடன் நடந்த கலந்துரையாடலில் சூதாட்டம் நடைபெற்றதை ஒப்புக் கொண்டதோடு தம் நாட்டை தலைகுனியச்செய்த இந்த சூதாட்ட செயலுக்காக மன்னிப்பும் கோரியுள்ளார்.

### உலகக்கிண்ண அரையிறுதிக்கு இந்தியா வராது


இந்திய அணி உலகக் கிண்ணப் போட்டியில் தனது முதல் லீக் ஆட்டத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி வெற்றி பெற்றது. இதைத் தொடர்ந்து 22 ஆம் திகதி தென்னாபிரிக்காவை எதிர்கொள்ளவுள்ளது.

இந்நிலையில் இந்திய அணியின் உலகக் கிண்ண வாய்ப்பு பற்றி அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் மைக் ஹசி கூறுகையில் இந்திய அணியில் திறமையான வீரர்கள் பலர் இடம்பிடித்துள்ளனர். ஆனால், என்னைப் பொறுத்தமட்டில் இந்திய அணி அரையிறுதிக்கு முன்னேறுவது கடினம். அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, இலங்கை ஆகிய 4 அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும் என்பதே எனது கணிப்பாகும். உலகக் கிண்ணத்தை வெல்ல அவுஸ்திரேலிய அணிக்கு பிரகாசமான வாய்ப்புள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

### புதிய தொழிநுட்பம்

சறுக்கல் விளையாட்டான ஸ்கேட்டிங் விளையாட்டிலும் தற்போது தொழில்நுட்பம் வந்துவிட்டது. இந்த ஸ்கேட்டிங் வாகன வேகத்துக்கு ஈடாக ஒரு நபர் பயணிக்க முடியும் என்கிறது இதை தயாரித்துள்ள நிறுவனம். இந்த ஸ்கேட்டிங் கருவியில் சக்கரங்கள் கிடையாது. புவி ஈர்ப்பு விசைக்கு எதிரான தொழில்நுட்பத்தில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

கருவியை கீழே வைத்தால் தரையிலிருந்து சற்று மேலெழும்பி மிதந்துக் கொண்டிருக்கும். இதில் ஆள் ஏறி நின்றாலும் தரையில் படாமல் மிதக்கும். இதை ஸ்கேட்டிங் செய்வது போல உந்தித்தள்ளி போக வேண்டியதுதான். இந்த கருவி காந்த விசையின் மூலம் இயங்குகிறது. எதிர்காலத்தில் சக்கரமில்லா வாகனங்கள் தயாரிக்க இந்த தொழில்நுட்பம் முன்னோடியாக அமையலாம்.



### தனது சாதனையை தானே முறியடிப்பு



2007 ஆம் ஆண்டு உலகக்கிண்ண போட்டியின்போது கனடாவுக்கு எதிராக, 24 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் பிரெண்டன் மெக்கல்லம். இதுதான் இதுவரையில் உலகக்கிண்ண போட்டியில் சாதனையாக இருந்தது. ஆனால் இன்று இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் அதே மக்கல்லம், 18 பந்துகளில் 54 ஓட்டங்களை எடுத்தார். 17 பந்துகளில் 48 ரன்கள் எடுத்திருந்த மக்கல்லம், 18 ஆவது பந்தில் ஆறு ஓட்டமொன்றைப் பெற்றுக்கொண்டு தனது அரைச்சதத்தை பெற்றுக்கொண்டார்.

### விக்கட்டுக்களை தொடுவதற்கு தடை



உலகக்கிண்ண போட்டியின் நடுவர்கள் எளிதாக அவுட்டா என்பதை தீர்மானித்து விடலாம். எல்.இ.டி. கிரிக்கெட்டில் வெற்றி பெற்ற அணி வீரர்கள், ஒடிப்போய் விக்கெட்டுகளை கையில் எடுத்து வெற்றியை கொண்டாடுவது வழக்கமானது. இப்போது விலை உயர்ந்த இந்த எல்.இ.டி விக்கெட்டுகளை தேவையில்லாமல் கையில் எடுக்கக் கூடாது என்று வீரர்களுக்கு ஐ.சி.சி. தடை விதித்துள்ளது.

எரிந்துவிடும். இதனால் போது பயன்படுத்த இல்லையா ப்படும் ஒரு செ எல்.இ.டி. விக்கெட்டுகளின் விலை 40 ஆயிரம் அமெரிக்க டொலர் கள், விக்கெட்டு களின் மேலிருக்கும் இரண்டு பேல்ஸ்களின் விலை தலா ஒரு இலட்சம் ரூபாவாகும்.

இந்த விக்கெட்டுகளின் விசேடம் என்னவென்றால், பந்து விக்கெட்டுகளில் பட்ட அடுத்த விநாடி விளக்கு

### உலக கிண்ணத்தில் சதி

சமீபத்தில் சம்பளப் பிரச்சினையை காரணம் காட்டி இந்தியாவுக்கு எதிராக நடந்த தொடரை பாதியிலேயே மேற்கிந்திய அணி கைவிட்டது. இது இரு நாட்டு கிரிக்கெட் சபைக்கும் இடையில் பிரச்சினையை உண்டாக்கியது. இந்தப் பிரச்சினைக்கு முன்னணி வீரர்கள் தான் காரணம் என்று மேற்கிந்திய கிரிக்கெட் சபை பொலாட், வெய்ன் பிராவோவை உலகக் கிண்ண அணியில் தெரிவு செய்யவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூரில் ஆசிரியர் பற்றாக்குறை

## தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

மூதூர் கல்வி வலயத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளின் அவலம் தொடர்ந்தவண்ணமுள்ளது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சின் செயலாளருக்கு முறைப்பாடுகளைச் செய்துள்ளது.

மூதூர் கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள அனேக தமிழ் பாடசாலைகளில் பெரும் ஆசிரிய பற்றாக்குறை நிலவிவருகின்றது. கடந்தகால யுத்தத்தால் பெரிதும் பாதிப்புக்கு உள்ளான இப்பிரதேசங்களில் உள்ள மாணவர்களின் கல்வி கேள்விக்குறியாகியுள்ளதோடு, வசதியான பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நகர்ப்புற பாடசாலைகளில் அனுமதிக்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வசதி குறைந்த பெற்றோர்களின் பிள்ளைகள் அகதி முகாம்களில் வாழ்வது மட்டுமன்றி கல்வி கற்பதற்கான வளங்கள்கூட இல்லாத நிலையில் அவஸ்தைப்படுகின்றனர்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு இந்நிலைமை பெரும் சவாலாக மாறியுள்ளது.

கடந்த காலங்களில் இப்பிரதேச பாடசாலைகளுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட 17

## “சம்பூர் ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தை விடுவியுங்கள்”

கடற்படையின் முகாமிற்குள் சிக்குண்டு கிடக்கும் சம்பூர் ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தை மக்களின் பாவனைக்காக விடுவிக்குமாறு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் அவர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மூதூர் இந்துக்குருமார் சங்கத்தினரால் அமைச்சரிடம் இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் சிவஸ்ரீ.எஸ். பாஸ்கரன் குருக்கள் தெரிவித்தார்.

இக்கடிதத்தின் பிரதிகள் கிழக்கு மாகாண ஆளுனருக்கும், முதலமைச்சருக்கும், மாவட்ட மற்றும் பிரதேசச் செயலாளர், கிராம சேவையாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டள்ளன.

## அமைச்சர் அர்ஜுன திருமலையில்

துறைமுக அமைச்சர் அர்ஜுன ரணதுங்க கடந்த சனிக்கிழமை திருகோணமலைக்கான பயணத்தினை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது திருகோணமலை துறைமுகத்தை பார்வையிட்டதோடு திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூடத்திலும் பங்குபற்றினர். (அச்சுதன்)





## ஆளணிப் பற்றாக்குறையால் சேனையூர் நோயாளர் அவதி

சேனையூர் மருத்துவச்சாலையில் நிலவும் ஆளணிப்பற்றாக்குறையை அடுத்து அங்குள்ள நோயாளர்கள் மருந்தினைப் பெற்றுக்கொள்ள மணித்தியாலக்கணக்காக கால்கடுக்க நிற்க வேண்டிய நிலையை அனுபவிப்பதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது வைத்தியர் ஒருவரும் இரண்டு மருத்துவ உதவியாளர்களும் அங்கு பணியில்இருப்பதாகக் கூறும் மக்கள் பாட்டாளிபுரம், நல்லூர், கடற்கரைச்சேனை, அம்மன்நகர், கட்டைப்பறிச்சான்-சேனையூர், கனேசபுரம், மருதநகர், சீதனவெளி, சந்தோசபுரம் மற்றும் சம்பூர் இடம்பெயர்ந்த மக்கள் ஆகிய கிராமங்கிள்ன மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் மருத்துவச்சாலையாக இம் மருத்துவச்சாலையே உள்ளது என மக்கள் 17

## நோர்வே இலங்கையரைத் திருப்பி அனுப்புகின்றது

நோர்வே அரசாங்கம் தனது நாட்டில் அடைக்கலம் கோரிய அரசியல் தஞ்சக் கோரிக்கையாளர்களை மீண்டும் ஸ்ரீலங்காவிற்கு அனுப்பும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக நம்பகமாகத் தெரியவருகின்றது.

புதிய அரசு இலங்கையில் பதவியேற்றதை அடுத்து நிலவும் சுமகமான சூழலை அடுத்து தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட தமிழர்களை நாடுகடத்தும் முடிவை நோர்வே நடைமுறைப்படுத்தியுள்ளது.

இதனடிப்படையில் 21ம் திகதி இரவு தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட பலர் திருப்பியனுப்பப்பட அழைக்கப்பட்டுள்ளனராம்.

## கிழக்கு மகாண தமிழாசிரியர் சங்கம் கல்வி ராசாங்க அமைச்சரை சந்தித்தது

கிழக்கு மாகாணத் தமிழாசிரியர் சங்கத்திற்கும், கௌரவ கல்வி இராசாங்க அமைச்சர் ராதாகிருஸ்ணன் அவர்களுக்குமிடையிலான சந்திப்பு இசுருபாயாவில் 12.02.2015 இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின் போது, கிழக்கு மாகாணத் தமிழாசிரியர் சங்கம், கிழக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தி மற்றும், மாணவர்கள் ஆசிரியர்கள் அதிபர்கள், எதிர்நோக்கும் பிரசினைகள், அதிகாரிகளின் தான்றோன்றித்தனமான பழிவாங்கல் செயற்பாடுகள் மற்றும் அரசியல் பழிவாங்கல்கள் போன்ற கோரிக்கைகளை 17



## 50வருடங்கள் செப்பனிடப் படாத வீதி

மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேச சபைக்குட்பட்ட செல்வாநகர் கிழக்கு சிவாவித்தியாலய வீதி கடந்த ஐம்பது வருடமாக செப்பனிடப்படாமல் இருப்பதாக மக்கள் விசனம் தெரிவித்தனர்.இவ்வீதியை புனரமைக்குமாறு அரசியல் தலைவர்கள், அதிகாரிகள் மாகாணசபை உறுப்பினர்களிடம் பலதடவை கோரிக்கை விடுக்கப்பட்டும்இவ்வீதி தொடர்பாக எவ்வித அபிவிருத்திதிட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை என அவர்கள் தெரிவித்தனர்.இவ் வீதியை பயன்படுத்தும் குறிப்பாக பாடசாலை மாணவர்கள்,வாகன சாரதிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.இவ் வீதியை புனரமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காலம் தாழ்த்தாது கவனம் செலுத்துமாறு கோரிக்கை விடுத்தனர்.



## தொண்டராசிரியர் நியமனங்களைப் பெற்றுத்தாருங்கள்

தொண்டர் ஆசிரியர்களின் நியமனங்களை கிழக்கில் அமையவிருக்கும் கூட்டாட்சியின் போது அனைவரும் கவனத்திற் கொண்டு செயற்படுத்துமாறு கோரிக்கையொன்றை தொண்டராசியர் சங்கத்தின் சார்பாக அதன் தலைவர் இரா. ஜெயமோகன் விடுத்துள்ளார்.

கடந்த வாரம் தொண்டராசிரியர் குழு கிழக்கின் முதலமைச்சரைச் சந்தித்த போது தொண்டராசிரியருக்கு நியமனம் வழங்க அவர் உறுதியளித்திருப்பதாகத் தெரிவித்த ஜெயமோகன் திருகோணமலையில் மட்டும் சுமார் 150 தொண்டர் ஆசிரியர்கள் நியமனத்திற்காக் காத்திருப்பதாகத் தெரிவித்தார்.

இவர்களுள் பலர் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் நியமன நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்தும் நியமனத்தின் போது புறக்கணிக்கப்படவர்கள் என மேலும் தெரிவித்தார்.

## சம்பூர் இடம்பெயர்ந்தோர் அடையாள உண்ணாவிரதம்

சம்பூரில் இருந்து இடம்பெயர்க்கப்பட்ட மக்கள் தம்மை மீளக் குடியேற்றுமாறு கோரி அடையாள உண்ணாவிரதமொன்றை கடந்த 16ம் திகதி நடாத்தியிருந்தனர்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மாதமொன்று கழிந்துள்ள நிலையில் தமது மீள் குடியேற்றம் தொடர்பாக எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதால் இந்த அடையாள உண்ணாவிரதத்தை அவர்கள் நடாத்தியுள்ளனர்.



## மகுடத்தின் பௌர்ணமி நிகழ்வு

மகுடம் கலை இலக்கிய வட்டம் பௌர்ணமி தினங்களில் நடாத்திவரும் பௌர்ணமி கலை நிகழ்வின் தொடர் அமர்வின் ஒன்பதாவது விசேட அமர்வு 22-02-2015 ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணிக்கு மட்-பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (தனி) நிறுவனத்தால் 159 A, கடல்முக வீதி, திருகோணமலையில் இருந்து 21.2.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது